தமிழ்நாட்டில் பைரவர் வழிபாடு

முனைவர் நாகப்பா நாச்சியப்பன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

தமிழ்நாட்டில் பைரவர் வழிபாடு

முனைவர் நாகப்பா நாச்சியப்பன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி வளாகம், தரமணி, சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Tami<u>l</u>nāṭṭil Pairavar Va<u>l</u>ipāṭu
Author	:	Dr. Nagappa Nachiyappan Head, Department of Tamil Research, Post Graduate Research Centre, Pondicherry - 605 008.
Publisher	:	International Institute of Tamil Studies, C.I.T. Campus, Tharamani, Chennai - 600 113.
Publication No.	:	334
Language	:	Tamil
Date of Publication	:	1999
Edition	:	First
Paper used	:	TNPL 70GSM Super Printing
Size of the book	:	1/8 Demy
Printing types	:	10 Points
No. of pages	:	VII + 84
Price	:	Rs. 19/- (Rupees Nineteen only)
No. of Copies	:	1,200
Printed by	:	**PAVAI PRINTERS (P) LTD.,** **142, J.J.K. Road, Royapettah,** **Chennai - 14. PH: 8532441**
Subject	:	Religion

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

சைவ சமயம் என்பது தமிழர்களின் சமயம் என்று மறைமலையடிகள் அவர்கள் குறிப்பிடுவார். பைரவர் வழிபாடு என்பது சைவ சமய வழிபாடுகளுள் ஒன்றாகும். சைவ சமயம், மூலப் பரம்பொருளான இறைவன் அவதாரங்களாகப் பிறப்பெடுத்துத்தோன்றி நிற்காமல், உலகில் தீநெறி தோன்றுகின்ற பொழுது அவற்றை அழித்து உலகை நன்னெறியில் நிறுத்த, பல வீரத்திருவுருவங்களை எடுத்து வீரச் செயல்களைச் செய்து (அட்ட வீரட்டானம்) முடிப்பதாகக் கூறுகிறது. இவ்வாறு சைவ சமயத்தில் தோன்றிய சிவ மூர்த்தங்கள் (உருவங்கள்) அறுபத்து நான்கு. இவ்வறுபத்து நான்கு மூர்த்தங்களில் பைரவ மூர்த்தம் முப்பத்தெட்டாவது மூர்த்தமாகப் பேசப்படுகிறது.

பைரவர் சிவனின் ஓர் உருவமாகவும் சில சமயங்களில் சிவன் உடலிலிருந்து தோன்றிய சக்திமிக்க உருவமாகவும் குறிப்பிடப்படுகிறார். அக்னி புராணத்தில் (52. 9-11) இவர் கையில் சூரிய ஒளியைச் சுட்டும் அந்தக்கதை (Ark) தாங்கியிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. நின்ற நிலையில் அனல் மகுடத்துடன் உருண்டு விழிக்கும் கண்களும், சினத்தைக் காட்டும் கோரைப் பற்களும் கொண்டு, உடுக்கை, சூலம் முதலான ஆயுதங்களுடன் கபால மாலை அணிந்து காணப்படுபவர்தம் உருவே பைரவர் என்னும் திருவுரு ஆகும். இவ்வுருவத்தின் பின்னால் நாய் ஒன்று நிற்கும் (வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி 13, ப - 33).

காளி என்ற யோகினியின் வளர்ப்புப் புதல்வனாகவும் இவரைக் குறிப்பிடுவர். ஸ்கந்த புராணம் (ப.170.48-49) எட்டு வகையான பைரவர்கள் இருப்பதாகக் குறிப்பிடுகிறது. (1) தண்டபாணி (Dandapani), (2) விக்ராந்தன் (Vikranta), (3) மகா பைரவர் (Mahabhairava), (4) படுக்கன் (Batuka), (5) பாலகன் (Balaka), (6) நந்தி (Nandi), (7) காலபைரவர் (Kalabhairava), (8) க்ஷேத்ரபாலன் (Kshetrabala) என அவர்கள் அழைக்கப்படுவர்.

வாரணாசியில் உள்ள எட்டு பைரவர்களும் வேறுபெயர்களால் அழைக்கப்படுவர். பைரவர் பிரம்மாவின் தலையிலிருந்து தோன்றியவர் என்று பல கதைகளில் கூறப்படுகிறது. இலிங்கபுராணத்தின் படி (1.90) விஷ்ணுவும் பிரம்மாவும் ஒரு முறை மிகவும் செருக்குக் கொண்டு இருந்ததாகவும், இச்செருக்கினால் பிரம்மன் சிவனை அவமதித்ததாகவும், இதனால் வெகுண்ட சிவனின் கோபத்திலிருந்து தோன்றியவரே பைரவர் என்று கூறப்படுகிறது.

பைரவர் பிறந்தவுடனேயே சிவனை அவமதித்த பிரம்மனின் ஐந்தாவது தலையைக் கிள்ளினார். இந்தத் தலை பைரவனின் கையுடனேயே ஒட்டிக் கொண்டது. ஒட்டிக் கொண்டத் தலையைக் கொண்டு பைரவர் ஊரெங்கும் பிச்சை எடுத்தார். இந்த பாவத்திலிருந்தும்

தன்னை விடுவித்துக் கொள்ள வழி தெரியாத பைரவருக்கு, சிவன் வாரணாசியில் அவர் பாவத்தைக் கழுவலாம் என்று கூறினார்.

அவ்வாறே வாரணாசி சென்ற பைரவரின் கையிலுள்ள பிரம்மனின் தலை கழன்று வீழ்ந்தது. பைரவர் பாவ விமோச்சனம் பெற்றார். அவ்விடத்தையே இன்றும் காபால மோட்ச தீர்த்தம் என அழைப்பர். பைரவர் சிவனையும், அவரது மனைவியையும் வணங்குபவர்களாகக் காபாலிகர்களைக் கூறுவர். இவர்கள் சைவ சமய பிரிவினர்களுள் ஒருவர்.

காபாலிகர் கையில் வழக்கமாக ஒரு திரிசூலத்தைக் கொண்டு செல்வர். இவர்கள் மண்டை ஓட்டில் உண்பதையும் கடவுளர்களை மதுநிறைந்தக் குடத்துடன் வணங்குவதையும் வழக்கமாகக் கொண்டவர்கள்.

தென்னிந்தியாவில் வாழ்ந்த காபாலிக முனிவர்கள் தனித்து வாழ்வதை விரும்பியதாகத் தெரிகிறது. இதனால் இவர்களிடையே ஒரு குழு அமைப்பு காணப்படவில்லை. இதன் காரணம் போலும் இவர்களைப் பற்றிய கல்வெட்டுகள் குறைவாகவே காணப்படுகிறது. இந்தக் காபாலிகர்கள் நரபலி நிகழ்த்தியதாகவும் சில சமயங்களில் பிணங்களைக் கொண்டு பூசை செய்ததாகவும் வடமொழி நூல்கள் கூறுகின்றன. மாலதி மாதவர் (5வது அங்கம் 25ஆவது பாடல்) என்ற நாடகத்தில் மேற்கூறிய செய்தி காணப்படுகிறது.

இவ்வாறு சைவசமயம் குறிப்பிடுகின்ற பைரவர் வழிபாடு குறித்தும், அவ்வழிபாடு தமிழ்நாட்டில் பரவியது பற்றியும் மிக விளக்கமாகப் பல செய்திகளை ஆய்வு செய்திருக்கும் முனைவர் நாகப்பா நாச்சியப்பன், பொதுவாக நாட்டுப்புறத் தெய்வங்களிடம் கொடிய ஆயுதங்களும் நாயும் காணப்படும். பண்டைய தமிழகத்தில் வீர வழிபாடாகத் தோன்றிய இவ்வழிபாடு சைவ சமய வழிபாட்டுடன் கலந்துவிட்டது என்று இந்நூலில் குறிப்பிட்டுள்ளது சிந்திக்கத்தக்கது. இந்நூலாசிரியர் திருப்பரங்குன்றக் கோயில் பற்றி ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றவர். சைவ சமயத்தில் ஆழ்ந்த புலமை மிக்கவர். அவரது புலமைத் திறத்தை இந்நூலில் காணலாம். தமிழ் நாட்டில் பைரவர் வழிபாடு என்னும் இந்நூல் முனைவர் நாகப்பா நாச்சியப்பன் அவர்கள் இந்நிறுவனத்தில் நிகழ்த்திய அறக்கட்டளைச் சொற்பொழிவாகும். இவ்வறக்கட்டளையை நிறுவியவருக்கு நன்றி. இவ்வறக்கட்டளைக்குப் பொறுப்பாக அமைந்த முனைவர் ச.சிவகாமி அவர்களுக்கு நன்றி.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு. த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் நூலாக்கம் செய்து தந்த விக்னேஷ் அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி.

இயக்குநர்

முன்னுரை

இயற்கையின் எழில்மிகு அழகை, ஆற்றலைக் கண்டு வியந்த மாந்தரினம் இயற்கையின் தோற்றத்தை மாற்றத்தைக் காண முற்பட்டது. இயற்கையினால் வளம் பெற முடியும் என்று உணர்ந்தபோது இயற்கையின் அளப்பரிய ஆற்றலைக் கண்டு கண்டு வியந்து, அந்த இயற்கையை இறைவனாக, பரம்பொருளாக எண்ணி வழிபடத் தொடங்கியது. இவ்வாறே இறைவழிபாடு மாந்தர் இனத்துள்ளும் மனத்துள்ளும் கால் கொள்ளத் தொடங்கியுள்ளது. மனித மனம், எண்ணம், சொல், செயல் வேறுபடுவது போல அவர்தம் வழிபாட்டு முறைகளும், நெறிகளும் மண்ணின் வளத்திற்கேற்ப வேறுபடத் தொடங்கியுள்ளன. ஆகவேதான் பல்வேறு வகைப்பட்ட வழிபாட்டு நிலைகளை நாம் காணமுடிகிறது. இயற்கையை வழிபடத் தொடங்கியவர்கள் உருவமற்ற இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கியுள்ளனர். அருவ நிலையில் இருந்த இயற்கை வழிபாடு அருவுருவ நிலையையும், உருவ நிலையையும் பெறத் தொடங்கியது. இக்காலக்கட்டத்தில்தான் கற்களையும், கருவிகளையும், மரங்களையும், விலங்குகளையும் மாந்தர் இனம் வழிபடத் தொடங்கியுள்ளது.

இயற்கை வழிபாட்டு உணர்வில், அறிவு வழிப்பட்ட எண்ணங்கள், சிந்தனைகள் ஆகியவை தோன்றிய பின்னர் மக்களின் வாழிடத்திற்கேற்ப தெய்வங்களைப் படைத்துக் கொண்டு வழிபடும் போக்கும் காணப்பட்டது. தொல்காப்பியம் குறிப்பிடும் மாயோன், சேயோன், வேந்தன், வருணன், கொற்றவை ஆகிய நிலத் தெய்வங்கள் இவ்வெண்ணத்தின் வெளிப்பாடாக நிலத்தெய்வங்கள் இவ்வெண்ணத்தின் வெளிப்பாடாக அமைந்தவை ஆகும். திராவிட வழிபாட்டின் அடிப்படைக் கருத்துகள் என்னவாக இருக்கும் என்பதை ஆய்வு செய்த டபிள்யூ.டி.எல்மோர் அவர்கள் 1. இனமரபுச் சின்ன முறைமை, 2. உயிரற்ற போலிப் பொருள் வழிபாடு, 3. ஆவியுலகக் கோட்பாடு, 4. பேய்பற்றியும் பயம், 5. உருவவழிபாட்டின் பொருள், 6. பலி கொடுப்பது, 7. திராவிடத் தெய்வங்களின் தோற்றம், 8. திராவிட சமயத்தின் நெறிமுறை ஆகியவற்றின் வழியே அவை அமைந்துள்ளன என்று கூறுகிறார். இயற்கையை வணங்கிய திராவிடர் பின்னர் இயற்கையின் தலைமையாகத் தெய்வங்களை வணங்கத் தொடங்கினர்.

சங்க காலத்தில் திராவிடர்களின் இயற்கை வழிபாட்டு நெறியுடன் ஆரியர்களின் வழிபாட்டு நெறிகளும் வந்து கலக்கத் தொடங்கின. திராவிடர்களின் கோயிற்கலை, வழிபாட்டு முறைகள் ஆகமங்களில் இடம் பெறலாயின. இவ்வாறு கலப்புப் பெற்ற பின்னர் சமயவழிபாடு தோன்றத்

தொடங்கியது. பண்டைத் தமிழர் வழிபாடும் சமயவழிபாடும் இணையாக வளர்ந்து கொண்டே வந்தன. சமயவழிபாடும் இணையாக வளர்ந்து கொண்டே வந்தன. சமயவழிபாடு பண்டைத் தமிழர் வழிபாட்டை இணைத்துக் கொண்டே வளரத் தொடங்கியது பண்டைத் தமிழர் வழிபாட்டில் இறைவனுக்கும் மக்களுக்கும் உள்ள உறவு நெருக்கமே பேசப்பட்டது.

பண்டைத் தமிழர் இறைவனை மனித வடிவமாகவே காணத் தொடங்கினர். இறையாற்றல் மனிதனுக்கு இறங்கி வருவதாக நம்பப்பட்டு வேலன் வெறியாடல் போன்ற செயல்கள் செய்யப்பட்டன. இறைவனை மனித வடிவில் அமைத்து வழிபடத் தொடங்கியபின் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள ஆற்றலை வேறுபடுத்திக் காட்ட விரும்பி இறைவனின் உருவத்தில் மனித உடற் கூறுகளுக்கு அப்பாற்பட்ட கூறுகளை அமைத்து வழிபடத் தொடங்கினர். முக்கண் - நாற்கரம் - பன்னிருகரம், நான்கு தலை (நான்கு திரைகள்), ஆறுதலை (கீழ் - மேல்), நரசிம்மம் (அறிவு+ஆற்றல்) போன்ற பல்வகை ஆற்றலைக் காட்ட விரும்பு இறையுருவத்தைப் படைத்துக் கொண்டு வழிபடத் தொடங்கியுள்ளனர். இவை சமய வழிபாட்டில் சமயத்தின் வளர்ச்சியில் பிற சமயத்தாரிடமிருந்து தம்மைத் தனிமைப்படுத்தி, உயர்த்திக் காட்ட விரும்பிய எண்ணத்தால் ஏற்பட்டவையாகும்.

சமய வழிபாட்டில் வைணவ சமயம் மூலப்பரம்பொருள் உலகில் பத்துப் பிறப்புக்களர்கத் (அவதாரங்களாக) தோன்றி உலகத்தை அறவழியில் காக்கிறது என்று கூறுகிறது. சைவசமயம் மூலப் பரம்பொருளான இறைவன் அவதாரங்களாகப் பிறப்பெடுத்துத் தோன்றி நிற்காமல், உலகில் தீநெறி தோன்றுகின்ற பொழுது அவற்றை அழித்து உலகை நன்னெறியில் நிறுத்த பல வீரத்திருவுருவங்களை எடுத்து வீரச் செயல்களைச் செய்து (அட்ட வீரட்டானம்) முடிப்பதாகக் கூறுகிறது. இவ்வாறு சைவ சமயத்தில் தோன்றிய சிவமூர்த்தங்கள் (உருவங்கள்) அறுபத்து நான்கு, இவ்வறுபத்து நான்கு மூர்த்தங்களுள் பைரவ மூர்த்தம் முப்பத்தெட்டாவது மூர்த்தமாகப் பேசப்படுகிறது.

பைரவமூர்த்தி வழக்கில் பைரவர், வயிரவர் என்ற சொற்களால் அழைக்கப்படுகிறது. இவ்வழிபாட்டு மூர்த்தத்துடன் நாயையும் இணைத்து வைத்து வழிபடும் வழக்கம் ஏற்பட்டு உள்ளது. பைரவ் மூர்த்திக்குக் காவல் தெய்வம் க்ஷேத்திரபாலர் என்ற பெயர்களும் வழங்குகின்றன. நாட்டுப்புற வழிபாட்டில் காவல் தெய்வங்கள் கையில் கொடிய கருவிகளையும், நாயையும் அமைத்து வழிபடப்படுவது பண்டுதொட்டு பெருவழக்காக இருந்து வருகிறது. பைரவர் வழிபாடு என்னும் சைவசமய

வழிபாடு நம் பண்டைத் தமிழர் வீரவழிபாட்டின் தொடர்ச்சியாக சமய வழிபாட்டின் கலப்பில் தோன்றிய வழிபாடாகும். இவ்வழிபாடு பிற்காலத்தில் சமய வழிபாட்டுடன் இணைந்து சிவனின் அறுபத்து நான்கு மூர்த்தங்களுள் ஒன்றாகப் பேசப்பட்டு, மாற்றப்பட்டு, வழிபடப்பட்டு Æ½WØ} . 'வழிபாட்டில் சமயக்கலப்பு' என்னும் நோக்கில் ஆய்வு செய்வதற்குப் பல களங்கள் உள்ளன. இப்பகுதி இன்னும் நுணுகி ஆராய்தற்குரியது.

நாட்டுப்புறவியலில் நாட்டுப்புற வழிபாடுகள் தொடர்பாக சில ஆய்வுகள் செய்யும் வாய்ப்பு இறையருளால் எனக்குக் கிட்டியது. அப்பொழுது பைரவர் வழிபாட்டின் தோற்றம், தொன்மைப் பற்றிச் சில எண்ணங்கள் என்னுள் எழுந்தன. அவ்வெண்ணத்திற்கு உருக்கொடுக்கும் முகமாக இம்முயற்சியில் இறங்கும் வாய்ப்பினை அளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், அறக்கட்டளை நிறுவிய பெருமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

வெள்ளி விளக்கேனும் தூண்டுகோல் இன்றிச் சுடர் விடாது அல்லவா? அதுபோல இவ்வாய்விற்குச் சுடர் தூண்டும் கோலாய் அமைந்த சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும்; நிறுவனத்தின் முன்னை இயக்குநர் - பொறுப்பு முனைவர் அன்னித்தாமசு அவர்களுக்கும்; நிறுவனத்தைப் பல்லாற்றானும் வளர்த்துப் பல ஆய்வுகளை வெளிக்கொணரும் இயக்குநர் முனைவர். ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கும்; அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றி.

வணக்கம்.

நாகப்பா நாச்சியப்பன்

துறைத் தலைவர்
தமிழாராய்ச்சித் துறை
பட்டமேற்படிப்பு ஆராய்ச்சி மையம்
புதுச்சேரி - 605 008.

தமிழ்நாட்டில் சைவசமயம்

தனி மனிதன் இணைந்து வாழ முற்பட்ட பொழுது அவன் மனத்தில் அச்சம், அவா இவற்றின் அடிப்படையில் நம்பிக்கைகள் எழுந்தன. மனித மனத்தின் நம்பிக்கைகளே வழிபாட்டின் அடித்தளமாய் அமைந்தன. மாந்தரினம் வாழ்ந்த சூழலுக்கேற்ப வழிபாடு அமைந்தது. மாந்தரினத்தின் கூட்டு வாழ்க்கை, இனக்குழு வாழ்க்கை வழிபாடுகளை வளர்க்கத் தொடங்கின. சமுதாயத்தில் அச்சம், துன்பம் போன்றவை பெருகி வளர்ந்தபொழுது அவற்றை அழிக்கும் ஆற்றல் மாந்தரினத்திற்குத் தேவைப்பட்டது. இயற்கையின் பேராற்றலைப் பெருஞ்சீற்றத்தைக் கண்டு உணர்ந்த மாந்தரினம், மனித மனத்திற்கும், ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட ஆற்றல் ஒன்று உள்ளது என்பதை உணரத் தொடங்கியது. இயற்கையின் பேராற்றலால்தான் ஒன்றை ஆக்கவும், காக்கவும், நீக்கவும் முடியும். தான் அதுவாக (அவ்வாற்றலாக) வேண்டும் அவ்வாற்றலைத் தான் பெற வேண்டும் என்ற எண்ணமே, முயற்சியே இறை வழிபாட்டிற்கு மூலமாய் அமைந்தது. இயற்கையில் தோன்றிய வழிபாடுகள் காலப் போக்கில் மனித வடிவத்தையும் உயராற்றலையும் பெற்ற உருவ வழிபாடுகளாக வளர்ந்தன. அருவ வழிபாட்டு நிலை உருவ வழிபாட்டு நிலையாக வளர்ந்தது. உணர்வு நிலையிலிருந்த மாந்தரினம் அறிவு நிலைக்கு உயர்ந்த பொழுது இயற்கை ஆற்றல் பற்றிச் சிந்தனையும் தடை, விடைகளும் தோன்றின. இயற்கை ஆற்றல் இறை ஆற்றலாக எண்ணப்பட்டது. சமுதாயத்தில் ‘கடவுட் கோட்பாடு’ கால் கொள்ளத் தொடங்கியது. இறைவன் பற்றிய சிந்தனைகள், எண்ணங்கள் கதைகளாகக் கூறப்பட்டன. கடவுட் கோட்பாடு வேதங்கள் என்ற பெயரில் உருப் பெறத் தொடங்கின. இறை வழிபாட்டினை முறைப்படுத்தி, நெறிப்படுத்தி இனத்திற்கேற்ப பயன் பெறச் செய்வதற்கு ஆகமங்கள் தோன்றின. வேதங்களும் ஆகமங்களும் இறைவனால் அருளப்பட்டவை என்பது முன்னோர் வாக்குகளாயின.

மாந்தரினத்தின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி மனித நேயத்தையும், மானுட நல்லுறவுகளையும் வளர்த்து இன்பமான வாழ்க்கைக்கு வழி வகுப்பதற்காகச் சமயங்கள் தோன்றின. சமயத்தை வழி நடத்தியவர்கள், வழி நடத்திய நூல்கள், கொள்கைகள் இவற்றின் வேறுபாட்டால் சமயங்கள் வேறுபடத் தொடங்கின. சமுதாயத்தை நன்னெறிப்படுத்தி ஒழுங்கான முறையில் இயக்கிச் செல்வதால் சமயத்திற்கு ’தர்மம்’ என்ற சொல்லை இந்திய இலக்கியங்கள் பயன்படுத்தியுள்ளன. இயற்கையாற்றல் எனும் இறையாற்றலைப் பெறுவதற்குத் துணை செய்வன சமயங்கள். ஆகவேதான் இறையாற்றலைக் கடலாகவும், சமயங்களை ஆறுகளாகவும் உருவகப்படுத்தி,

பொங்கு பல சமயமெனும் நதிகளெல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்;
பொங்கியோங்கும் கங்குகரை காணாக் கடலே;

என்று இயற்கையோடு வைத்துக் கூறினர் நம் தமிழ்ச் சான்றோர்.

மாந்தரினத்தின் சிந்தனையாற்றலால், எண்ண ஓட்டத்தால் உலகத்தில் தோன்றிய சமயங்கள் எண்ணிறந்தவை. நம் இந்திய நாட்டில் தோன்றிய சமயங்களும் பலப்பல. இந்தியச் சமயங்களில் பெரும்பாலும் இறைவன் என்ற பரம்பொருள் உலகத்து உயிர்களை உய்விப்பான் வேண்டி வேதங்களையும், ஆகமங்களையும் படைத்தான். அவ்வேதங்கள் என்று கூறப்படுவன வியாச முனிவர் என்பவர் தொகுத்ததாகக் கூறப்படும் இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் என நான்காகும். இவற்றை அடியொற்றிய ஆகமங்கள் இருபத்தெட்டு (பின்னிணைப்பு காண்க).

'மெய்த்த ஆகம விதி வழி வேதகாரணரை
நித்தல் பூசனை புரிந்து' (பெ. புராணம்)

வழிபட வேண்டும் என்பது அவற்றின் நெறியாகும்.

வேத ஆகமங்களை ஏற்றுக் கொள்ளாதவை, முரண்பட்டவை, ஏற்றுக் கொண்டவை என்ற அடிப்படையில் சமயங்கள் பலதிறப்பட்டனவாகப் பிரிந்தன. சைவ சித்தாந்த அடிப்படையில் நிற்போர் இந்திய நாட்டுச் சமயங்களை நான்கு பெரும் பிரிவுக்குள் அடக்குவர். அவை :

1) புறப்புறச் சமயங்கள்	: வேத ஆகமங்களைச் சிறிதும் ஏற்றுக் கொள்ளாதவை.
2) புறச் சமயங்கள்	: வேதங்களை ஏற்றுக் கொண்டு, சிவாகமங்களை ஏற்றுக் கொள்ளாதவை.
3) அகப்புறச் சமயங்கள்	: வேத ஆகமங்களைப் பொதுவாக ஏற்றுக் கொண்டு, பாசுபதம் முதலிய கொள்கை-களைக் கொண்டவை.
4) அகச் சமயங்கள்	: வேத ஆகமங்களை ஏற்றுக் கொண்டு, சைவ சித்தாந்தக் கொள்கையினின்று மாறுபடுபவை.

இவை நான்கும் தன்னகத்தே ஆறு பிரிவுகளைக் கொண்டு இருபத்து நான்கு சமயங்களாகப் பேசப்படுகின்றன. இவற்றுள் புறப்புறச் சமயங்களாக முதலில் ஆறு சமயங்களைக கூறுவர். அவை :

1) உலகாயுதம்
2) சௌத்திராந்திகம் (பௌத்தம்)
3) யோகாசாரம் ”
4) மாத்தியமிகம் ”
5) வைபாடிகம் ”
6) ஆருகதம் (சமணம்)

இவை இன்றும் மக்களால் பின்பற்றப்பட்டு வரும் சமயங்களாகும். அடுத்து புறச்சமயங்கள் ஆறு எனப்படுகிறது. அவை:

1) தருக்கம்
2) மீமாம்சை
3) ஏகான்மவாதம்
4) சாங்கியம்
5) யோகம்
6) பாஞ்சராத்திரம் (வைணவம்)

என்று சிவஞான முனிவர் சிவஞானம் போதப் பேருரையில் கூறுவர். இவற்றுள் பாஞ்சராத்திரமும், ஏகான்மவாதமும் தவிர மற்றவை கொள்கையளவிலேயேயுள்ளன. இவற்றை வேதாந்தம் என்று கூறுவர். மூன்றாவதாக அகப் புறச் சமயங்கள் ஆறு என்று கூறுவர். இவை அறுவகைச் சித்தாந்தம் என்ற பெயரிலும் கூறப்படுகிறது. அவை :

1) பாசுபதம்
2) மாவிரதம் (மஹாவ்ரதம்)
3) காபாலம் (காளம்)
4) வாமம் (சாக்தேயம்)
5) பைரவம் (வைரவம்)
6) ஐக்கியவாத சைவம்

என்பனவாகும். திருமூலரின் திருமந்திரத்தில் இவ்வறுவகைச் சமயங்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. ஆகவே திருமூலரின் காலத்தில் இச்சமயங்கள் வழக்கில் இருந்துள்ளன என்பது தெரிய வருகிறது. இறுதியாக அகச் சமயங்கள் அறுவகைப்படும். அவை :

1) பாடாணவாத சைவம்
2) பேதவாத சைவம்
3) சிவசமவாத சைவம்
4) சிவசங்கிராந்த வாத சைவம்
5) ஈசுவர அவிகார வாத சைவம்
6) சிவாத்துவித சைவம்

என்பனவாகும். இவ் ஆறு அகச் சமயங்களின் கொள்கைகளை உமாபதியாருடைய சங்கற்ப நிராகரணம் என்னும் நூல் விரிவாகக் கூறுகிறது. அகப்புறச் சமயங்கள் ஆறு. அகச் சமயங்கள் ஆறு எனக் கூறப்பட்ட பன்னிரண்டு சமயங்களும் சிவனோடு தொடர்பு கொண்டவை. இப்பன்னிரண்டு சமயங்களுக்கும் வேறான ஒன்றாகச் சித்தாந்த சைவம் கூறப்படுகிறது. இவைகள் ஒன்றுக்கொன்று சிற்சில மாறுபாடுகளைக் கொண்டவைகளே தவிர முற்றாக மாறுபட்டு நிற்பவை அல்ல. இவை சிவத்தைப் ,பரம்பொருள் எனக் கொண்டு, சித்தாந்தத்துட் கூறிய சில உண்மைகளை ஏற்றுக் கொள்ளாதவை.

சைவ சமயத்தைத் திருமந்திரம் 1) சுத்த சைவம், 2) அசுத்த சைவம், 3) கடுஞ்சுத்த சைவம், 4) மார்க்க சைவம் என்று நான்கு பிரிவாகக் கூறுகிறது. சைவத்தை இன்னும் பதினாறு வகையாகப் பாகுபடுத்திக் கூறும் மரபும் உள்ளது. அவை 1) ஊர்த்த சைவம், 2) அனாதி சைவம், 3) ஆதி சைவம், 4) மகா சைவம், 5) பேத சைவம், 6) அபேத சைவம், 7) அந்தர சைவம், 8) குண சைவம், 9) நிர்க்குண சைவம், 10) அத்துவா சைவம், 11) யோக சைவம், 12) ஞான சைவம், 13) அணு சைவம், 14) கிரியா சைவம், 15) நாலுபாத சைவம், 16) சுத்த சைவம் என்பனவாகும். சிவ தத்துவங்களை, சிவ வழிபாட்டு முறைகளை வற்புறுத்தும் நிலையில் சைவ சமயத்தைப் பல பிரிவாகப் பாகுபடுத்தி வைத்துள்ளனர். சைவ சமயம், காஷ்மீர சைவம், வீர சைவம், சித்தாந்த சைவம் என்று முப்பெரும் பிரிவுகளாக தனித்தனித் தத்துவப் பின்புலத்தோடு விளங்குகிறது.

சமயத்தில் பிரிவுகள் பலவாக இருந்தாலும் அவற்றை ஆறு, ஆறு பிரிவுகளாகப் பகுத்துப் பிரித்து வைத்துள்ளனர். திருமூலர் தம் நூலில்

நூறு சமயம் உளவாம் நுவலுங்கால்
ஆறு சமயம் அவ்ஆறுட் படுவன
கூறு சமயம் கொண்ட நெறி நில்லா
ஈறு பரநெறி இல்லா நெறியன்றே (1517)

என்று கூறுகிறார். பிற சமய நெறிகளைப் படிகளாகக் கொண்டு வளர்ந்த சமயம் சித்தாந்த சைவம் எனப்படுகிறது. ஆதிசங்கரர் தம் அத்துவைதக்

கொள்கைகளைக் கொண்டு சைவம், வைணவம், சாக்தம், சௌரம், கௌமாரம், காணாபத்தியம் என்று பிற்காலத்தில் அறுவகைச் சமயங்களைக் கூறினார். இவ்வறுவகைச் சமயங்களின் கூட்டுக் கலப்பே இன்று இந்துமதம் என்று கூறப்படுகிறது.

பல சமயங்களின் வழிநின்று இறையாற்றலைக் கண்டு உணர்ந்து வழிபடும் வழிபாடு இனறு பெருகி வந்துள்ளது. திருமூலர் சமயங்களின் பல கூறுபாடுகளையும் இறையாற்றலையும் வைத்துத் தம் கருத்தைக் கூறுகிறார்.

“ ஒன்றதே பேரூர், வழி ஆறதற்குள
என்றது போலும் இருமுச்சமயமும்
நன்றிது தீதிது என்றுரை ஆதர்கள்
குன்று குரைத்தெழு நாயை ஒத்தார்களே” (1538)

என்பது திருமந்திரம்

“ சுத்த வடிவியல்பாக உடைய சோதி
சொல்லிய ஆகமங்களெலாம் சூழப் போயும்
ஒரு பதிக்குப் பல நெறிகள் உளவானாற்போல”

எனச் சிவஞான சித்தியார் கூறுகிறது. ஒரு பதி, பல நெறிகள் என்பது அகச் சமயங்கள் சொல் வகையாலும் செயல் வகையாலும் வேறுபட்டாலும் கருத்து வகையால் ஒன்றாதலைக் குறிக்கிறது. தமிழ்நாட்டில் விளங்கும் சைவசமயம் சைவ சித்தாந்தம் என்னும் பெயரால் கூறப்பெறுகிறது. சைவ சித்தாந்தம் என்பது சைவ சமயத்தின் முடிந்த நிலை அல்லது முடிந்த முடிபு என்னும் பொருளுடையதாகும்.

சைவ சமயப் பிரிவுகள்

அகப் புறச் சமயங்கள், அகச் சமயங்கள் எனக் கூறப்பட்ட பன்னிரண்டு சமயங்களும் சைவ சமயப் பிரிவுகளாகக் கூறப்படுகின்றன. இவற்றுள் அகப்புறச் சமயங்களாகக் கூறுப்பட்ட பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், பைரவம், ஐக்கியவாத சைவம் ஆகியவை பற்றிக் காண்பது இங்குப் பொருத்தமுடையது.

1. பார்சுபதம் :

சிவபெருமான் யோக ஆசிரியனாக வந்து ஞானத்தை உபதேசித்தான். உயர்ந்த பாசுபத விரதம் ‘ஞானம்’ எனப்படும்.

அநுஷ்டானமே பாசுபத சமயத்தில் உயிர்நாடி. சரியை, கிரியை, யோகம், ஞானம் வழி நிற்கும் பாசுபத யோகிக்குச் சிவன் காட்சியளிப்பான். சாத்திர முறையால் தீட்சை பெற்றவனுக்கு ஈசனது ஞானம் எளிதில் கைகூடும். பாசுபத சமயம் வேதங்களைச் சார்ந்தது. மற்றவை ஆகமங்களைச் சார்ந்தவை. பசுபதி என்பது சிவனது திருநாமம். பசுபதி என்றால் மகாதேவன். அவன் இயற்றிய தத்துவநூல் அல்லது சாத்திரம் பாசுபத தரிசனம் இந்தத் தரிசனத்தைப் படைத்தவன் சிவன் - ஸ்ரீகண்டன் என்று மகாபாரதத்தில் சாந்திபருவம் கூறுகிறது. ஸ்ரீகண்டர் என்பவர் மனித உருவில் லகுலீசருக்குக் குருவாக விளங்கியவராதல் வேண்டும் என்பது ரா.கோ. பண்டார்கரின் கருத்து.[1]

வேத காலத்திலிருந்து பழமையான பரம்பரை கொண்டது பாசுபத சமயம். மேலும் இந்திய நாடு முழுவதிலும் பரவியதும் ஆகும். இக் கொள்கையை உருவாக்கியவர் 'மாயை' எனும் தத்துவத்தில் வைகும் உருத்திரர் ஆவர். இக்கொள்கை 'சங்கிராந்த சமவாதம்' எனப்படும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த லகுலீசர் (கார்வான் - மகாராஷ்டிர மாநிலம்) தமக்கு முன் நீண்ட காலமாக நாட்டில் இருந்து வந்த பாசுபத சமயத்தைப் புதுப்பித்தவர். அவரால் புதுப்பிக்கப்பட்ட சமயம் லகுலீச பாசுபதம் எனப்பட்டது. சிவனே லகுலீசராக வந்தார் என்பது லகுலீச பாசுபத அடியவர்கள் கருத்து. பாசுபத சமயத்தில் வைதிகம், அவைதிகம் என்ற இரு பிரிவுகள் உண்டு.

பாசுபத சமயத்தார் உடம்பில் சாம்பலையும், களிமண்ணையும் பூசிக் கொள்வர். கருப்பு உடைகளை அணிவர். முடியிடாமலும், முடியிட்டும் இருப்பர். முகம், தோள், கொப்பூழ், மார்பு ஆகிய இடங்களில் சிவலிங்க இலச்சினையைக் குறித்துக் கொள்வர். சிவபெருமானுடன் அவரது கணங்களையும், பேய்களையும் சேர்த்து வழிபடுவர். பாசுபத விரதத்தின் தனித்தன்மை : 1) மக்கள் தம்மைப் பழிக்கும்படி செய்து தம் பாவங்களை நீக்கிக் கொள்வது. இதைத் திருஷ்டாந்தம் என்பர். 2) பெண்களைக் கண்டு வெளிப்படையாகக் காம சேஷ்டைகள் செய்வது. இதை ச்ருங்காரணம் என்பர். சிவன் தாருகாவனத்தில் தன்னளவில் காமமில்லாதவனாயினும், ரிஷி கன்னிகைகளையும், ரிஷி பத்தினிகளையும் கண்டு காம உணர்ச்சிகளை அபிநயம் செய்தான். சிவன் இப்படிச் செய்து ரிஷிகளிடம் வசைமொழி பெற்றான் என்று கூர்மபுராணம் (2-39-15-17) கூறுகிறது. காற்றினால் நடுக்கம் வந்தாற்போல உடலை நடுங்கச் செய்வது கவாதனம் என்பர். ஒன்றுக்கொன்று தொடர்பற்ற பொருளற்ற சொற்களைப் பேசுவது அவிதத் பாஷணம் என்பர். இவை பாசுபத சூத்திரத்தில் கூறப்பெற்றுள்ளன.[2]

---

1. சைவ தத்துவம், ஸ்ரீஸ்ரீ, பக். 30-31.
2. மேற்படி, பக் 34-35.

2) மாவிரதம் :

(மஹாவ்விரதம்) பாசுபதம் கொள்கையில் கூறப்பெற்ற உயிர்கள் பந்தமுற்று, கன்மங்களால் கட்டப்பட்டு அவற்றின் வழி இன்ப துன்பங்களை நுகரும். இத்தகைய உயிர்கள் உய்தி பெற வேண்டுமாயின் சாத்திரங்கள் கூறும் முறையில் தீக்கை பெறுதல் வேண்டும். எலும்பு மாலை அணிதல் முதலிய சரியைகளில் (புறவழிபாட்டில்) வழுவாது ஒழுகினால் முக்தி கிடைக்கும். அவர் வீடுபேற்றிற்குரிய தகுதியைப் பெறுவர்.[3] அந்நிலையில் அவருக்குச் சிவபெருமானோடு ஒத்த எல்லாக் குணங்களும் வந்து தோன்றும் என்பது மாவிரதியர் கொள்கை. இக்கொள்கையை உருவாக்கியவர் 'வித்தை' எனும் தத்துவத்தில் வைகும் உருத்திரர். இக்கொள்கை 'உற்பத்தி வாதம்' எனப்படும்.

மாவிரத சமயத்தார் நெற்றியில் மூன்று கீற்றுகளாகத் திருநீறு அணிவதோடு அதனை உடல் முழுவதும் பூசிக் கொள்வர். தலையின் உச்சியில் எலும்பு மணிகளைக் கட்டிக் கொள்வர். காதில் அதனைக் குண்டலங்களாகவும் அணிவர். கழுத்திலும், முன்கையிலும் எலும்புமணித் தாழ்வடம், எலும்புமணி கோத்த கயிறு கட்டியிருந்தனர். தோளில் யோகப் பட்டிகையும், கறுப்பு மயிர்க் கற்றையாலான பூணூலும் அணிவர். கோவணமும் அதன்மேல் அசைந்தாடும் சிறிய உடையும் இடையில் காணப்படும். மண்டையோட்டில் பிச்சையேற்று உண்பது. பிணச் சாம்பலை உடம்பு முழுமையும் பூசிக் கொள்ளுதல் முதலியன மாவிரதிகள் கடுமையாகக் கைக்கொண்ட நெறியாகும்.[4]

3) காபாலம் :

காபாலிகக் கொள்கையில், உயிர்கள் பந்தமுற்று மாயை, கன்மங்களில் கட்டப்பட்டு இன்ப துன்பங்களை நுகரும். அந்நெறி யினின்று உயிர்கள் உய்தி பெறச் சாத்திரங்கள் கூறும் முறையில் தீக்கை பெறுதல் வேண்டும் என்பர். பச்சைக் கொடி ஒன்றைக் கைக் கொண்டு நாள்தோறும் மனிதர் தலையோட்டில் பிச்சை ஏற்று உண்பவர் முத்தராவார். இறைவனையே எண்ணியவாறு வாழ்வு கொண்ட இவர்களிடத்துச் சிவபெருமான் ஆவேசித்து நிற்பர். இதனால் இவர்கள் சிவனுடைய எல்லாக் குணங்களையும் பெற்று சிவசமமாவர் என்பர். காபாலிகரின் நடைமுறை வாழ்வு எல்லா உயிர்களுக்கும் மகிழ்ச்சி தருவதாகும். அதில் கன்மத்துக்கு இடமில்லை. கன்மத்தினால் முக்தி கிடைப்பதில்லை என்பர். காபாலிகரின் வழிபடு தெய்வம் பைரவர். அவரே உலகைப் படைத்துக் காத்து அழிப்பவர். மற்ற தெய்வங்கள் அவரது கூறாக (அம்சம்) இருந்து, அவரது கட்டளைப்படியே தம்தம் கட்டளைகளை நிறைவேற்றுபவர் என்பது காபாலிகர் கொள்கை.

---

3. அறுவகைச் சமயம், கு. சுந்தரமூர்த்தி, ப. 123
4. சைவ சமய வளர்ச்சி, பக். 81-82.

காபாலிகம் பாசுபத சமயம் போலப் பழமையான ஒன்று. இக்கொள்கையை உருவாக்கியவர் 'காலம்' எனும் தத்துவத்தில் உருத்திரர் ஆவர். இக்கொள்கை 'ஆவேசவாதம்' எனப்படும்.

காபாலிக சமயத்தார் உடம்பெல்லாம் திருநீறு பூசுவர், தலைமாலை அணிந்து கொள்வர். நீண்ட சடையுடையவர். புலித்தோலால் ஆகிய கோவணத்தை அணிவர். இடது கையில் மண்டையோட்டை (கபாலம்) ஏந்திப் பிச்சையேற்று உண்பர். இறைவனுக்கு நரபலி கொடுத்து வணங்கும் வழிபாடும் இவர்களிடம் இருந்தது. வட இந்தியாவில் வாழ்ந்த காபாலிகர்கள் பைரவர்க்கும், காளிக்கும் இரத்தத்தையும், மதுவையும் படைத்தனர். பக்தியை விடவும் ஹடயோகத்தையும், முக்தியை விடவும் சித்தியையும் வற்புறுத்திய பிற்காலத்துக் காபாலிகர்கள் ஸந்த்யா பாஷையில் (மறைமொழியில்) பஞ்சமகாரம், மஹாஸீகம் முதலிய பரிபாஷைச் சொற்களில் நேரான பொருளை வழக்கில் கொண்டு வந்து காபாலிகக் கொள்கையை இழிவுபடுத்திக் கொண்டார்கள்.[5] காபாலிகர் அறுவகை அணிகளை அணிந்தனர். கழுத்தாரம், மார்பணி, காதணி, தலைஅணி, சாம்பலணி, பூணூலணி ஆகிய ஆறும் காபாலிகரின் புனித அணிகலன்கள். இவ்வறுவகை அணிகளின் சிறப்பை உணர்ந்தவர்கள் உயிர்களின் பிறப்பிடமாகக் கருதப்படும் உறுப்பைத் தியானம் செய்து முக்தியடைவார்கள் என்பது பிற்காலக் காபாலிகர்களின் நம்பிக்கையாக இருந்தது. மண்டையோட்டில் உணவு உண்ணுதல், மதுவுண்ணுதல், சாம்பலை உண்ணுதல், உடலில் பூசிக் கொள்ளுதல், குழு உறவுகள், பைரவர் வழிபாடு ஆகிய இச்சடங்குகள் இக பர இன்பத்தைத் தரவல்லவை என்று கருதினர். தீக்கை மற்றுச் சடங்குகள் செய்வதால் எச்சாதியினரும் பிராமணர் ஆகலாம் என்பது இவர்கள் கொள்கை.

வாமம் (சாக்தேயம்):

அறிவுடையதும், அறிவற்றதுமான உலகம் அனைத்தும் சக்தியின் வளர்ச்சியாகும். வாம நூலில் விதித்தவாறு வாம நூற்கருத்துக்களைக் கடைப்பிடித்து சக்தியில் ஒன்றுபடுவதே வீடுபேறு ஆகும் என்பது வாம சமயத்தினர் கொள்கை. சித்தபுருடர் என்பவர் இந்நூலைச் செய்தார் என்பர்.[6] சக்தியைப் பெண்மைக் கடவுளாக வழிபடும் நெறியை உரைப்பது வாமம், மது, மத்ஸ்யம், மாமிசம், முத்திரை, மைதுனம் என்ற பஞ்ச மகாரங்களைக் கொண்டு சாதனை புரிவது வாமசாரமாகும். இந்தச் சொற்களுக்கு ஆன்மீக முறையில் மறைபொருள்கள் உண்டு. புலால் உண்ணுதல், மகளிரோடு இன்புறுதல், மதுவருந்துதல் ஆகிய பழக்கவழக்கங்களை வாம சமயத்தார் மேற்கொண்டிருந்தனர். மது,

5. சைவ தத்துவம், ஸ்ரீஸ்ரீ, ப. 358
6. அறுவகைச் சமய ஒப்பீடு - ப. 124.

மாமிசம், மைதுனம் என்பவை குழூஉக் குறிச்சொற்கள். உலகியலில் செய்வனவற்றை எல்லாம் இறை சிந்தனையோடு செய்யவேண்டும் என்பதே இவ்வழிபாட்டின் அடிப்படை. மதுவும், மாமிசமும், மைதுனமும் மந்திர ஒலியோடு முறைப்படி செய்யப்படும்போது, அவை அருவருப்பான செயல்களாக இல்லாமல் முறையான பிரணவ ஒலியோடு சேர்ந்தே ஆன்மீக வழிபாடாக மாறுகிறது[7] என்பது இவர்தம் கொள்கை. ஆனால் காலப்போக்கில் உயர்பொருளுக்கு இழிபொருள்கள் கற்பிக்கப்பட்டுச் சமுதாயத்தில் பழிக்கப்படும் நிலைக்கு இது தாழ்ந்தது.

பைரவம் :

பைரவரே பரம்பொருள், அவரடியிற் சேருவதே வீடுபேறு என்பது பைரவ சமயக் கொள்கை. இது பெரும்பாலும் சைவமசமயக் கொள்கையை ஒத்திருப்பது. சிறுபான்மை ஒழுகலாறுகள் (ஆசாரங்கள்) வழிபாட்டு முறைகளால் வேறுபட்டுள்ளது. பைரவக் கடவுளிடமிருந்து எட்டுத்தலைகள் தோன்றி உயிர்களுக்குப் பந்தமும் வீடும் அளிக்கும். போக மார்க்கமே முக்தியைத் தரும் என்பது இவர்கள் கொள்கை. நரபலி இடுதல், மண்டையோட்டில் உணவருந்துதல், மதுவருந்துதல், ஆகிய பழக்கம் இவர்களுக்குண்டு. சைவ நாயன்மார்களில் ஒருவரான சிறுத்தொண்ட நாயனாரிடம் பிள்ளைக்கறி கேட்டு வந்த இறைவனின் கோலம் பைரவக் கோலம் என்பர். தக்கயாகப் பரணியில் ஒட்டக்கூத்தர் பைரவ சமயத்தின் செயல்கள்பற்றி எடுத்துக் கூறுகிறார். பைரவர் தங்கள் தலைகளை அரிந்து கொற்றவையை வழிபட்டனர். பைரவி மந்திரத்தைச் செபித்தனர் என்பர்.[8]

ஐக்கிய வாத சைவம் :

உயிர்களுக்கு மாயை, கன்மம் என்னும் இரு மலங்களே உள்ளன. ஆணவமலம் என்பது இல்லை. மாயை, கன்மத்தால் கட்டப்பட்ட உயிர்கள் தம் பாவ, புண்ணியங்களுக்கேற்ப உடல், கருவி, உலகு, நுகர்வு ஆகியவற்றைப் பெற்றிடும். உயிர்கள் இவற்றை நுகர்ந்த வழிப்பெற்ற இருவினை ஒப்பாலும், இறையருளாலும் மலம் நீங்கப் பெற்று இறைவனை அடையும். உயிர் இயற்கையிலேயே அறிவுள்ளது என்பது ஐக்கிய வாத சைவக் கொள்கை. ஐக்கியவாத சைவர் வேதம், சிவாகமம் இரண்டையும் சிறப்பாக ஏற்றுக் கொண்டனர். அவற்றில் விலக்கியனவற்றை ஒழித்து, விதித்தவற்றை ஏற்று ஒழுகியவராயினர். ஆனால் மும்மலங்களில் ஆணவமலம் என்பதை ஏற்றுக்கொள்ளாமல், ஆணவமலம் பற்றிக் கூறும் சிவாகமச் சூத்திரங்களை இகழ்ந்தனர். ஆதலால் ஐக்கியவாத சைவம் அகப்புறச் சமயமாகக் கூறப்பட்டது. பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், பைரவம் ஆகிய ஐந்தும் வேதம்,

---

7. வழிகாட்டும் மதங்கள், சைவம், ப. 92.

8. சைவசமய வளர்ச்சி ப. 241

சிவாகமம் இரண்டையும் பொதுவகையாக ஏற்றுக் கொண்டன. வேத சிவாகமத்திற்குப் புறமாகிய பாசுபதம் முதலிய நூல்களைச் சிறப்பாகக் கொண்டு ஒழுகினர். வேத சிவாகமத்தில் கடைப்பிடிக்கக் கூடாது என விலக்கப்பட்டனவற்றை ஆதரித்து ஒழுகினர். ஆகவே மேற்கண்ட ஆறு சமயங்களும் சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டாலும், சைவ சித்தாந்தக் கொள்கைக்கு முரண்படுவதால் இவை அகப்புறச் சமயம் என வேறு வைத்து எண்ணப்பட்டன.[9]

அகப்புறச் சமயங்களாகக் கூறப்பட்ட ஆறும் சிவனைப் பரம்பொருளாக ஏற்றுக் கொண்டவை. ஆனால் வழிபாட்டு முறையில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாகப் பிரிந்து நின்றன. இவை சிறு சிறு குழுக்களாகவே இருந்தன. கருத்தாழம் மிக்க சமய நெறியாக மக்களிடம் பரவி நிலைத்து நிற்கவில்லை. உலகியல் இன்பத்திற்கும் வீடுபேற்றின்பத்திற்கும் இவர்கள் மேற்கொண்ட வழிமுறைகளும், வழிபாடுகளும் அறிவுக்கு ஒவ்வாதவையாக இருந்தன. சமய உலகில் தீவிரவாதிகளாக இவர்கள் இருந்தனர். உலகியலுக்கு ஒவ்வாத மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத எந்த ஒரு கொள்கையும் நிலைத்து நிற்பதில்லை. உலகாயுதம், பௌத்தம், சமணம் முதலிய சமயங்கள், நம்நாட்டில் பெரு வழக்கற்றுப் போனமைக்கு இதுவே காரணமாகும்.. பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், பைரவம் ஆகிய தீவிரவாத சைவ சமயப் பிரிவுகள் காலத்தால் மிகப் பழமையானவை. இருப்பினும் இவை மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப, சிந்தனையோட்டத்திற்கேற்ப மக்களின் அறிவுப் பசியை, ஆன்மீக உணர்வை மகிழ்விக்கும் நிலையில் தவறிவிட்டன. கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு நாடெங்கிலும் அன்பை அடிப்படையாகக் கொண்ட பக்திவெள்ளம் பெருக்கெடுத்தது. பக்தி நெறி தத்துவ நெறியாக வளர்ந்தது. இக்காலக் கட்டத்தில் வன்முறை, உயிர்ப்பலி, கொடூர பக்தி, ஒழுங்கீனம் ஆகியவற்றைப் போற்றிய இவை போன்ற சமயங்கள், அன்பு வழிப்பட்ட சமயங்களில் கலந்து மறைந்தன. தமிழ்நாட்டில் சைவம், வைணவம் என்றவிரு சமயங்களும் சமய இயக்கங்களாக உருமாற்றம் பெற்றன. அரசர்களையும், ஆள்வோரையும், அதிகாரமட்டத்தில் இருந்த உயர் சாதியரையும் சூழ்ந்திருந்த சமயம் மக்களை நோக்கிச் செல்லத் தொடங்கியது. மக்கள் சக்தி மகேசன் சக்தியாக மாற்றம் பெற்றது. மக்கள் சக்தியின் துணையோடு மன்னரையும் தட்டிக் கேட்கும் நிலைக்கும் சமய அடியார்கள் துணிந்தெழுந்தனர். அன்பும், அறிவும், ஆளுமைத் திறமும் கைவரப்பெற்றதால் நாட்டில் வலுவிழந்த சமயநெறிகளைத் தாம் பெற்றுக்கொண்டு, அதற்கு வலுவும், வாழ்வும் கொடுத்துத் தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொண்டு தமிழ்நாட்டில் சைவ சமயம் வளரத் தொடங்கியது. சைவ சமய வளர்ச்சியில், கடவுள் வழிபாட்டில், பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், பைரவம், ஐக்கிய வாதம் அனைத்தும் சேர்ந்து உருமாற்றம் பெற்றன.

---

9. அறுவகை சமயம், ப. 125.

சைவத்தில் கலந்த சமயப் பிரிவுகள்

சைவ சமயத்தைச் சார்ந்த பாசுபதர், காபாலிகர் முதலிய பல பிரிவினர் தமிழகத்தில் இருந்தனர். திருநாவுக்கரசர் காலத்தில் விரிசடை விரதிகள், அந்தணர், பாசுபதர், காபாலிகர், வித்தகக் கோல வெண்தலைமாலை விரதிகள் (மாவிரதிகள்) சித்தர், பித்தர் முதலியோர் தமிழகத்தில் இருந்தனர். நாயன்மார்கள் காலத்தில் சிவயோகியார், பிரமசாரி, மாதவ வேடத்தார் பைரவர் ஆகிய அடியார்கள் இருந்ததாகப் பெரியபுராணம் கூறுகிறது. பல திறப்பட்ட சிவனடியார்கள் பல இடங்களில் இருந்த மடங்களில் இருந்து சைவத்தை வளர்த்தனர். நாயன்மார்கள் காலத்தில் சுத்த சன்மார்க்க சைவம் வளரத் தொடங்கியதால் பாசுபதம், காபாலிகம் முதலிய சமயங்கள் வளர்ச்சி பெறவில்லை. ஆதிசங்கரர் (கி.பி. 788-820) தம் அத்துவைத சமயத்தை நாடெங்கும் பரப்பினார். நரபலி, கட்குடி போன்ற சமயச் செயல்களை வன்மையாகக் கண்டித்து, ஒழிக்க முற்பட்டார். புறச்சமயவாதிகளிடம் வாதம் செய்து அத்துவைதக் கொள்கையை நிலைநாட்டினார். ஒவ்வாத மரபுகள் பல நாயன்மார்கள் காலத்தில் சைவத்தில் வழக்கிலிருந்தன. பாசுபதர், காபாலிகர், பைரவர் போன்ற பயங்கரமான சைவவாதிகள் ஒவ்வாத மரபுகளைக் கடைப்பிடித்துக் கொண்டு தமிழகத்தில் ஆங்காங்கே இருந்தார்கள் நாயன்மார்களில் சிலரும் அஞ்சத்தகும் மரபுகள் சிலவற்றைக் கைக் கொண்டிருந்தனர்.

லகுலீச பாசுபதர்கள் குஜராத்தில் காரோகணத்தில் தங்கள் தலைமை ஆசாரிய பீடத்தை உடையவர்கள். லகுலீசர், கார்வான் (மகாராஷ்டிர மாநிலம்) என்ற ஊரில் பிறந்தவர். அவர் நினைவாகக் காராணை, காரோஹணம் என்ற பெயரில் ஊர்களும், வழிபாடுகளும் தமிழகத்தில் ஏற்பட்டுள்ளன. திருவொற்றியூர் சிவன் கோவிலில் படம்பக்க நாயக தேவர் கோயில் என்ற ஒன்று வீரராசேந்திரன் காலத்தில் (கி.பி. 1067-68) கட்டப்பட்டது. அக்கோவில் மூர்த்தத்தின் பெயர் 'காராணை விடங்கர்' காராணை என்பது ஒற்றியூரின் பழைய பெயராதல் வேண்டும் என்பர்.[10] காரோஹணம் என்பது காரோணம் என்று பிற்காலத்தில் மாற்றம் பெற்றிருக்க வேண்டும். ஆகவே பாசுபதர் இருந்த இடங்கள் கச்சிக் காரோணம் (காஞ்சிபுரம்) குடந்தைக் காரோணம் (கும்பகோணம்) நாகைக் காரோணம் (நாகப்பட்டினம்) என்று அழைக்கப்பட்டன. செங்கற்பட்டை அடுத்த களத்தூர்க் கோவில், ஆலக்கோயில், திருவலஞ்சுழி, திருவொற்றியூர், பந்தணைநல்லூர் ஆகிய இடங்களிலும் இவர்கள் கோமடம் அமைத்துச் சமயப்பணி செய்துள்ளனர். பாசுபதத்தார்

10. சைவசமய வளர்ச்சி, ப. 66.

தொடர்பால் இறைவனுக்குப் பாசுபதமூர்த்தி என்ற ஒரு பெயரும் வழங்கியுள்ளது. ஆனால் இப்பெயர் இறைவன் அருச்சுனன் தவத்திற்கு மனமிரங்கி பாசுபதம் வழங்கியதால் ஏற்பட்ட பெயர் என்று சிவபராக்கிரமம் கூறுகிறது. தமிழ்நாட்டில் இறைவனுக்குப் பாசுபதேசுவரர், (திருவேட்களம்) உருத்ராபதீசுவரர் (திருச்செங்காட்டங்குடி) பசுபதீச்சுரர் (ஆவூர் பசுபதீச்சுரம், திருக்கொண்டீசுரம், தென்குடித்திட்டை, திருப்பந்தணை நல்லூர், திருத்துறையூர், திருப்பாசூர், கருவூர்) என்ற பெயர்கள் பல இடங்களில் வழங்கிவருகின்றன. திருவாரூரில் மாவிரதியர், பாசுபதர் முதலியோர் இருந்து வணங்கி வழிபட்டதை மறைஞான சம்பந்த நாயனாரின் கமலாலயச் சிறப்பு எனும் நூல் எடுத்துக்காட்டுகிறது.[11]

நாயன்மார்களில் ஒருவரான மானக்கஞ்சாற நாயனார் சோழ நாட்டைச் சேர்ந்தவர். சிவபெருமான் மாவிரதியார் கோலம் பூண்டு வந்து, மணக்கோலத்தில் இருந்த மானக்கஞ்சாறர் மகளின் கூந்தலைத் தனக்குப் பஞ்சவடிப் பூணூலுக்குத் தருமாறு கேட்டார். இறைவனின் வேண்டுகோளைப் பூர்த்தி செய்வான்வேண்டித் தம் அருமை மகளின் அழகிய கூந்தலை அரிந்து கொடுத்தார் மானக்கஞ்சாறர். திருவொற்றியூர்க் கோயிலில் பாசுபத மூர்த்திக்குக் கோயில் உள்ளது. இங்கு லகுலீசர் (பைரவர்) திருவுருவம் காணப்படுகிறது. இந்த மூர்த்தியைக் கௌளீசர் என்று கூறுவர். கௌளீசர் என்பது லகுலீசர் என்பதன் திரிபு.[12]

சோழநாட்டுத் திருச்செங்காட்டங்குடியில் வாழ்ந்தவரான சிறுத்தொண்ட நாயனார், பல்லவ நாட்டில் பரஞ்சோதியார் என்ற பெயரில் படைத் தலைவராயிருந்து வடநாடு சென்று பகை முடித்து வெற்றி கொண்டு திரும்பியவர். சிவபெருமான் பைரவக் கோலம் பூண்டு வந்து சிறுத்தொண்டரிடம் பிள்ளைக் கறி சமைத்துத் தருமாறு கேட்டார். இறைவனின் வேண்டுகோளுக்காகத் தம் ஒரே மகனையும் வாளால் அரிந்து நரபலி கொடுத்துக் கறி சமைத்து இறைவனுக்குப் படைத்தார். வடநாட்டுத் தொடர்புடைய சிறுத்தொண்டருக்கு இறைவன் வடநாட்டுக் காபாலிக மரபில் பைரவக் கோலம் கொண்டு வந்து, தம்மை 'உத்தராபதியோம்' (வடக்கிலிருந்து வந்தவர்) என்று கூறினார்.

திருமுனைப்பாடி நாட்டுக் காவலரான நரசிங்க முனையரையர் என்னும் நாயனார். சிவனடியார்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து

11. மறையவரும் சைவரு மாவிரதியரும் பாசுபதர் தாமும் வந்தே
நறைமலர் தூய் நாடோறு நாயகனே காவெனவே நல்கும் நம்பன்
(கமலாலயச் சிறப்பு - பாடல் எண் 124)

12. மகேந்திரவர்மன், மயிலை சீனி. வேங்கிடசாமி, பக். 181-182

விருந்து படைக்கும் நெறியாளர். அவர் வீட்டுக்கு இறைவன் ஆடையற்ற ஒழுங்கீனமான அடியார்போல் வந்தார். அக்கோலத்தைக் கண்டு மனம் வெறுக்காமல் திருநீற்று நெறி காக்க, அவரை வணங்கி விருந்து படைத்தார்.

சீலமிலரேயெனினுந் திருநீறு சேர்ந்தாரை
ஞாலமிகழ்ந் தருநரகம் நண்ணாமை யெண்ணுவார்
பாலணைந்தார் தமக்களித்த படியிரட்டிப் பொன் கொடுத்து
மேலவரைத் தொழுதினிய மொழிவிளம்பி விடை கொடுத்தார்

(திருத். நரசிங் - 7)

என்று பெரியபுராணம் கூறுகிறது. பெரியபுராணம் வழி அறியலாகும் சிவனடியார்களில் சிலர் வடநாட்டுத் தொடர்புடைய சைவசமய நெறிகளைப் புறக்கணிக்காமல் ஏற்றுக்கொண்டு ஒழுகி வந்துள்ளனர். இவ்வழிபாட்டு வகைகள் பல்லவர் காலத்தில் தமிழகத்தில் பரவலாக இருந்திருத்தல் வேண்டும். மாமல்ல புரத்திலும், திருச்சிக் குகைக் கோவிலும், திருப்புள்ள மங்கைச் சிவன் கோவிலிலும் துர்க்கைக்குத் தலையை அறுத்துத் தரும் பக்தர்களைக் குறிக்கும் சிற்பங்கள் காணப்படுகின்றன. சிவபெருமான் பைரவக் கோலத்தில் பிரமனின் தலையை அரிந்து அவனை நான்முகனாக்கிக் கையில் காபாலம் ஏந்தினான் என்பது புராணக் கதையாக இருப்பதால், தலையை அரிந்து இறைவனுக்கு நரபலி இடும் வழக்கம் அக்காலத்தில் வழிபாட்டு நெறியாக இருந்துள்ளது. போரில் வெற்றி பெறுவதற்காக இறைவனை வழிபடும்போது, வீரர்கள் தலையை அரிந்து ‘நவகண்டம்’ கொடுத்தனர் என்பதைக் கல்வெட்டுச் சான்றுகள் நமக்குக் காட்டுகின்றன. அரசர்கள் காலத்தில் அரசனுக்கு வெற்றி ஏற்பட, திருக்கோயில்களைக் காக்க என்ற பல காரணங்களுக்காக வீரர்கள் இறைவனுக்கு உயிர்த்தியாகம் செய்துள்ளனர். அவற்றை ‘இரத்தக் காணிக்கை’ என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இன்றும் அப்பழக்கத்தின் எச்சமாக ‘முடிக் காணிக்கை’ என்பது நிலவி வருகிறது. நாட்டுப்புற மக்களின் வழக்கில் ‘உயிரைக் கொடுத்த சாமிக்கு, மயிரைக் கொடு’ என்ற பழமொழி வழங்குகிறது.

தமிழ்நாட்டில் இதுபோன்ற ஒவ்வாத மரபுகள் பல இருந்ததால், சைவசமயம் கலப்புற்ற சமயமாக இருந்தது. திருநாவுக்கரசர் தம் திருவாரூர்ப் பதிகத்தில்,

“அருமணித் தடம்பூண்முலை யரம்பையோ டருளிப்பாடி
உரிமையிற் றொழுவார் உருத்திரபல் கணத்தார்
விரிசடை விரதிகள் அந்தணர் சைவர் பாசுபதர் கபாலிகள்
தெருவினிற் பொலியும் திருவாரூர் அம்மானே”

என்று எடுத்துக்காட்டுகிறார். திருஞானசம்பந்தர் தமது திருச்சண்பைநகர் பதிகத்தில்,

> " காதலால் சைவர் பாசுபதர்கள் வணங்கும்
> சண்பை நகராரே"

என்று பாசுபத மதத்தாரைக் கூறுகிறார். காஞ்சிபுரத்து ஏகாம்பரேசுவரர் கோயிலிலும், அதனை அடுத்திருந்த மயானத்திலும் கபாலிகளும், பாசுபதரும் இருந்தனர் என்பதைத் திருநாவுக்கரசரால் சைவனான மகேந்திரவர்ம பல்லவன் தான் எழுதிய 'மத்தவிலாசப் பிரஹசனம்' என்னும் நாடக நூலில் கூறியுள்ளான். கபாலிகன், பாசுபதன், பௌத்தன் மூவரையும் வைத்து இவர்களின் ஒழுங்கீனமான சமயநெறிகளை நகைச்சுவையாகக் கூறியுள்ளான். தமிழ்நாட்டில் மயானத்தில் (சுடுகாடு) இறைவனை வழிபடும் வழக்கமும் இதுபோன்ற நெறிகளால் ஏற்பட்டிருக்கலாம். திருக்கடவூர் மயானம் (திருக்கடவூர்) திருநாலூர் மயானம் (கும்பகோணம்) திருக்கச்சி மயானம் (காஞ்சிபுரம்) ஆகிய ஊர்க்கோயில்கள் இக்கருத்தை வலியுறுத்தும் முறையில் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் பக்தி இயக்கத்திற்குத் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் தூண்போன்று விளங்கியவர்கள். சைவத்தின் இரு கண்களாக மதிக்கப்பெற்றவர்கள். சமயத்தை மக்கள் மத்தியில் கொண்டு சென்று, அதை மக்கள் இயக்கமாக மாற்றியவர் திருநாவுக்கரசர். திருநாவுக்கரசரின் பல சமய நூலறிவும், ஆழ்ந்த அனுபவமும், அன்பு அடிப்படையான பக்தியும் வேருக்கு நீராய் அமைந்தது. அந்தணர் குலத் தோன்றலாகிய திருஞானசம்பந்தர் தமிழையும், தமிழிசையையும் கொண்டு தமிழ்ச் சைவநெறி பரவ முன்னின்றார். தமிழ்நாட்டில் வழக்கிலிருந்த ஒவ்வாத மரபுகளைத் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் ஏற்கவில்லை. சைவத் தீவிரவாதிகளின் ஆழ்ந்த கடவுட்பற்றை ஏற்றுக்கொண்டு, ஒவ்வாத செய்கைகளைப் புறக்கணித்தார்கள். சைவ அடியார்கள் மத்தியில் செய்கை காரணமாய்ப் பிணக்கும் பிளவும் ஏற்பட்டால் சமண, பௌத்தர்களின் பலம் ஓங்கிவிடும் என்பதை நன்கு அறிந்து வைத்திருந்தனர். சைவத்தின் சிறந்த, உயர்ந்த கூறுகளை மட்டும் மக்களுக்குத் தேவாரப் பாக்கள் மூலம் விதைத்தனர். இதனால், சைவவாதிகள் மத்தியில் பிளவு ஏற்படவில்லை. தமிழ்ச் சைவம் மிகச் சிறந்த சமயமாக வளர்ந்தது. எந்தச் சமயங்களையும் வெறுக்காமல் எல்லாச் சமயங்களிலும் உள்ள நல்ல கருத்துக்களையெல்லாம் சைவ உருக்கொடுத்து சைவ சமயம் ஏற்றுக் கொண்டது. பக்தி என்பது இறைவன்மீது கொண்ட மிக ஆழமான அன்பு. ஆழமான அன்பைக் கட்டுப்பாட்டில் வைக்காவிட்டால் அது தடம்புரண்டு போய்விடும் என்று எண்ணினர். கட்டுப்பாடு என்று சமண,

பௌத்தங்களில் உள்ளதுபோல் கடுமையான வாழ்வியல் முறைகளைப் பின்பற்றச் சொல்லவில்லை. உலகியலுக்கு ஏற்றமுறையில் பின்பற்றக் கூடிய நெறியில் இறைபக்தியை ஏற்படுத்தினார்கள். ஆகவே தமிழ்ச் சைவத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைசெய்தவர்கள் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் என்று நாம் அறியமுடிகிறது.[13]

தமிழ்நாட்டில் அப்பர், சம்பந்தர் செய்த பக்தி இயக்கம் போல, கன்னட நாட்டில் பாசுபத ஆசாரியார்கள் செய்த பணியை வீரசைவர்கள் ஏற்று வீர சைவநெறி மறுமலர்ச்சி பெற வழிசெய்தார்கள். காளாமுகர், பாசுபதர்களின் கோவில்கள், மடங்கள் வீரசைவர்களின் புண்ணியத்தலங்களாக மாறின. கன்னடத்தில் 'வீரசைவர்', தமிழ் நாட்டில் 'வீரவைஷ்ணவர்'. மகாராஷ்டிரத்தில் 'வைஷ்ணவ வீரர்' என்ற வழக்கிலுள்ள 'வீர' என்ற சொல் 'உறுதியாகப் பரமார்த்தத்தில் ஊன்றிய கடவுள் பக்தர்' என்ற பொருளில் வழங்குகிறது. பக்தி வைராக்கியம் என்று கூட இதைச் சொல்லலாம். வீரசைவம் வீரபத்திரக் கடவுள், சங்கு கண்ணர் ஆகியவர்களையும், ரேவணசித்தர், மருளசித்தர், ஏகோராமர், பண்டிதாராத்யார், விச்வாராத்யர் என்னும் ஆச்சாரியார்களையும் கொண்டது. வீரசைவர் வீராகம நெறியில் ஒழுகுபவர். ஆகமங்களையும், ஆச்சாரியர்களையும் சிவபெருமான் தன் ஐந்து முகங்களினின்றும் தோற்றுவித்தார் என்பது வீரசைவ மரபு. வீர சைவநெறி இமயம் முதல் குமரிவரை வழிவழியாக வளர்ந்துள்ளது. வீரசைவர்கள் இலிங்கத்தைக் கையில் வைத்துப் பூசிப்பர்.

இலிங்காதாரணம் உடையவர்கள் இட்ட லிங்கத்தையன்றி வேறொன்றையும் வழிபடவேண்டியதில்லை என்னும் கொள்கை யுடையவர். மறந்தும் புறந்தொழா மாந்தர் என்று இவர்களைச் சொல்லலாம். கொல்லிப்பாக்கத்திலுள்ள சோமேசலிங்கம், பெல்லாரி மாவட்டத்திலுள்ள உஜ்ஜன் என்ற இடத்தைச் சார்ந்த சித்தேசலிங்கம், ஸ்ரீசைலத்து மல்லிகார்ஜுனலிங்கம், இமயத்துக் கேதாரநாதத்திலுள்ள ராமநாதலிங்கம், காசியிலுள்ள விசுவேசுவரலிங்கம் ஆகியவற்றிலிருந்து இவர்களின் பழமையான ஆசாரியர்கள் தோன்றினர் என்று கருதுகின்றனர். இலிங்காதாரணம் செய்துகொண்டவரிடம் சாதி, குலம் முதலிய வேற்றுமை இல்லை. பெண்களும் இலிங்காதாரணம் செய்துகொண்டு இறைவனைப் பூசித்து வீடுபெற உரிமை உடையவர்கள் என்ற எண்ணம் வீரசைவத்திற்கு மிகவும் வலுவூட்டியது. கன்னடநாட்டில் இச்சமயம் இலிங்காயதம் என்னும் பெயரால் வழங்கப் பெறுகின்றது.

13. சைவசமயம், கோ. சுந்தரமூர்த்தி, பக். 38-40.

தமிழ்நாட்டில் அப்பர், சம்பந்தர் போலக் கன்னடநாட்டில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய 'பசவேசர்' வீரசைவ சமயத்தைப் புத்துயிரூட்டிப் பரப்பினார். வீரசைவர்கள், பாசுபதர்களின் 'த்வைதாத்வைத மதம்', லிங்க வழிபாடுபற்றிக் கடுமையான உறுதியான ஆக்கிரகம், திருநீறு தரித்தல், ருத்திராக்ஷம் அணிதல், இலிங்கதாரணம் முதலிய பல தனிப்பட்ட ஒழுக்கமுறைகளைத் தமதாக்கிக் கொண்டனர். காஷ்மீரத்து ஈச்வராத்வயவாதிகளின் நூல்களையும் தமக்கு ஆதாரமாகக் கொண்டார்.[14] வீரசைவ சமய ஆசாரங்களைப் பற்றிக்கூறும் நூல் "பசவேசர் அருள் வசனங்கள்" என்று கூறப்படும். சைவ சமயக் குரவர்களில் ஒருவரும், திருவாசகம் என்னும் ஒப்பற்ற பனுவலைத் தந்தவருமான மாணிக்கவாசகர் வீரசைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது அறிஞர் பலரது கொள்கை. ஆகவேதான் சுந்தரமூர்த்தி நாயனார் தம் திருத்தொண்டத் தொகையில், தனியடியார் வரிசையில் மாணிக்கவாசகரைக் குறிப்பிடாமல் தொகையடியாரில் ஒருவராக வைத்துக் கூறியுள்ளார்.

வீரசைவ நெறியினை அருளாளர்கள் ஆங்காங்கே ஆதீனங்களும், குருபீடங்களும் அமைத்து வளர்த்துவந்தார்கள். அவ்வாதீனங்களுள் 1) மயிலம் பொம்மபுரம் சிவஞானபாலய தேசிகர் ஆதீனம், 2) கும்பகோணம் பெரியமடம், 3) துறையூர் சிவப்பிரகாச தேசிகர் ஆதீனம் 4) திருப்பேரூர் ஆதீனம் (சாந்தலிங்கர் மடம்), 5) விருத்தாசலம் குமாரதேவர் மடம், 6) சிதம்பரம் ஸ்ரீ பாதபூசை அம்பலத்தாடுவார் மடம், 7) திருக்கோவிலூர் ஆதீனம் (திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் மடாலயம்), 8) சிதம்பரம் மௌனசாமி மடம், 9) ஈசான மடம், 10) திருவண்ணாமலை குகை நமச்சிவாயர் மடம் ஆகியவை குறிப்பிடத்தக்கன. சிதம்பரம் ஸ்ரீ பாதபூசை அம்பலத்தாடுவார் மடம் முன்னர்ச் சிதம்பரத்தில் இருந்தது. இடைக்காலத்தில் இசுலாமியர் ஆட்சிக் காலத்தில் பாண்டிச்சேரிக்கு மாற்றப்பட்டது. இறைவன் அந்தண வடிவம் கொண்டுவந்து மாணிக்கவாசகரைத் திருவாசகப் பாடல்கள் சொல்வித்துத் தம் கையாலேயே எழுதிக் கைசாத்தும் இட்டுச் சந்நிதியில் வைத்த 'திருவாசக ஏடு' இம்மடத்தில் இன்றும் உள்ளது.[15] இம்மடத்தினர் இதனை ஒரு பெட்டகத்தில் வைத்துப் பூசித்து வருகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் மாசி மாத சிவராத்திரி வழிபாட்டில் மக்கள் வழிபாட்டிற்கு இவ்வேடு வைக்கப்படுகிறது. வீரசைவ வழிபாடான இலிங்க வழிபாடு தமிழ்நாட்டில் சைவசமய வழிபாட்டுடன் இணைந்த வழிபாடாகக் கலந்துள்ள நிலையைப் பரவலாகக் காணமுடிகிறது.

---

14. சைவத்துவம், ஸ்ரீஸ்ரீ, பக். 299-300
15. தமிழ்நெறிக்கட்டுரைகள், சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ப. 166

அப்பர், சம்பந்தருக்குப் பின்வந்த சுந்தரர் சைவசமய நெறியைத் தம் திருத்தொண்டத் தொகையில் மிகஅழகாகப் பாடியுள்ளார்.

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

(திருத்தொண்டர்த்தொகை : 10)

சுந்தரர் கருத்துப்படிச் சைவசமயம் அகச்சமயம், அகப்புறச்சமயம், புறச்சமயம், புறப்புறச்சமயம் ஆகிய எல்லாச் சமயநெறியையும் தம்பால் ஏற்றுக் கொண்ட முறைமையை அறியமுடிகிறது. ஆகவேதான் சைவத்தில் பல தெய்வ வணக்கத்தையும் பல சமயக் கோட்பாடுகளையும் நாம் காணமுடிகிறது. சாதி, குலங்களுக்கு அப்பாற்பட்ட நெறியில் இறைவனைக் காண்பதும், தொண்டு செய்வதுமே உயர்ந்த சமயநெறி, அந்நெறி ஒழுகியவர்களே சைவசமய நாயன்மார்கள் என்பதை எடுத்துக்காட்ட எழுந்த இலக்கியமே திருத்தொண்டர் புராணம். திருத்தொண்டர்களுள் சிவவேதியர் (ஆதிசைவர்). திருமறையோர் (அந்தணர்) மாமாத்திரர், வேந்தர், மன்னர், வணிகர், வேளாளர், இடையர், குயவர், பாணர், பரதவர், வேடர், சான்றோர், சாலியர், செக்கார், ஏகாலியர், புலையர் என்று பல திறப்பட்ட அடியவர்களைக் காண்கிறோம். மரபு அறியாதவர்கள்ச் சிலரையும் (அறுவர்) காண்கிறோம். இறை வழிபாட்டிற்குச் சாதியும், குலமும் ஆகிய இவையெல்லாம் தேவையற்றன, புறத்தன என்பது சைவசமயத்தின் உயர்ந்த குறிக்கோளாய் இருந்துள்ளது. ஆகவேதான் பல வழிபாடுகளையும் சைவம் உயர்வு, தாழ்வு கருதாமல் ஏற்றுக் கொண்டுள்ளது.

சைவசமயத்தில் பைரவர்

சிவபெருமானை முழுமுதற்பொருளாக, பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவம். நம் பண்டைத்தமிழ் இலக்கண இலக்கியங்களில் சிவன், சைவம் என்ற சொற்கள் இடம்பெறவில்லை. ஆனால் சிவபெருமான் பற்றிய கருத்துக்கள் பொதிந்த சொற்கள் விரவி வந்துள்ளன. தொன்மைத்தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்தில்,

'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்'

(தொல்-பொருள் மரபியல் 96)

என்ற பொருளாழமிக்க தொடர் சிவனின் பரத்துவத்தைக் குறிப்பதாக உள்ளது. சங்க இலக்கியத்தில் சிவனின் திருவுருவச் சிறப்பு ஆற்றல் ஆகியவைகளைக் குறிக்கும் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

'நன்றாய்ந்த நீள்நிமிர் சடை முதுமுதல்வன்' (புறம் 166)

'பிறை நுதல் விளங்கும் ஒருகண்போல' (புறம் 56)

'முக்கட் செல்வர்' (புறம் 5)

'நீல மணிமிடற்றுஒருவன்' (புறம் 91)

'ஆதிரை முதல்வன்' (பரிபாடல் 8)

'நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவன்'
(மதுரைக்காஞ்சி 453-55)

'தொல்லூழி தடுமாறித் தொகல் வேண்டும்
பருவத்தால் பல்வயின் உயிரெல்லாம் படைத்தான்
கண்பெயர்ப்பான்' (நெய்தற்கலி 2)

'மணிமிடற்று மாண்மலர்க் கொன்றையவன்'
(கலி. 142)

சிவபெருமானின் முதன்மையும், ஐந்தொழிலாற்றலும் இங்குப் பல நிலைகளிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் சிவபெருமானை, பிறவாயாக்கைப் பெரியோன், பிறைமுடிக் கண்ணிப்

பெரியோன், உலகுபொதி உருவத்து உயர்ந்தோன் என்றெல்லாம் சிறப்பித்துக் கூறுகிறது. சங்ககாலத்திலும், காப்பியக் காலத்திலும் தழைத்திருந்த இவ்வழிபாடு களப்பிரர் காலத்தும் பல்லவர் காலத்தும் சிறிது தொய்வுற்றது. சைவசமய இலக்கியத்தின் முன்னோடியாகவும், பக்தியியக்கத்திற்கு வித்திட்டவருமான காரைக்கால் அம்மையார் இலக்கியங்களின் வழி சைவசமயத்தை நிமிரச் செய்தார். திருமூலர் சைவசமய உண்மைகளைத் தத்துவங்களாக்கித் திருமந்திரம் என்ற ஒப்பற்றபனுவலை உலகுக்கு அளித்தார். பின்னர்வந்த சைவசமயக் குரவர்களால் சைவசமயமும் வழிபாடும் தலைதூக்கி நின்று பக்தியியக்கத்தை வளர்த்தது.

சைவசமயத்தின் முடிந்த முடிபுகளை, கருத்துக்களை சித்தாந்தம் என்று கூறுவர். சித்தாந்தம் என்பது முடிந்த முடிபு. இக்கொள்கைகளை இறை (பதி) உயிர் (பசு) தளை (பாசம்) எனும் முப்பகுப்புக்களில் முதன்முதலில் பகுத்துக் கூறியவர் திருமூலர்.

“பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப்போல் பசுபாசம் அநாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதியணுகிற் பசுபாசம் நிலாவே” (திருமந்திரம் 115)

திருமூலரின் திருமந்திரத்திற்குப் பின் எழுந்த திருமுறைகள் இக்கொள்கையைப் பரவலாகவும், ஆழமாகவும் கூறியுள்ளன. சைவ சித்தாந்தம் என்னும் இவ்வுயர் கொள்கையை முறைப்பட எண்ணி விளக்கிய பெருமை சிவஞானபோதம், சிவஞான சித்தியார், ஞானாமிர்தம், சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த சாத்திரங்களைச் சாரும்.

தோத்திரக் கருத்துக்களையும், சாத்திர உண்மைகளையும் மக்கள் உணர்ந்து, அதோடு ஒன்றி வாழ்வதற்காக அமைக்கப்பட்டவையே திருக்கோயில் வழிபாடு, திருக்கோயிலில் சிவன் மூவகை நிலைகளில் நின்று அருள்புரிகிறார். சிவனின் மூவகை நிலைகளை உருவம், அருவம், அருவுருவம் என்று கூறுவர். உயிர்களின் வினை மாசு நீங்குதற்பொருட்டு அவன் கொள்ளும் வடிவுகள் ஒன்பது.

1. சிவன்
2. சத்தி
3. நாதம்

} — அருவம்

4. விந்து
5. சதாசிவம்
6. மகேசுவரன்

} — அருவுருவம்

7. உருத்திரன்
8. மால் — உருவம்
9. அயன்

(சிவஞானசித்தியார் சுபக்கம்; பா. 164-165)

சைவசித்தாந்தத்தில் அரி, அயன், உருத்திரர் எனும் மும்மூர்த்திகளுக்கு மேலாய முதல்வனென்று சிவனைக் (மகேசுவரனைக்) குறிப்பர். உருத்திரனது பணி, சிருஷ்டி (படைத்தல்); திதி (காத்தல்); சம்ஹாரக் (அழித்தல்) காலங்களில் தொடர்ந்து நிலவுவது. சிவன் எண்வகைப் பொருளுமாகி, எட்டு வடிவினனாகி (அட்டமூர்த்தம்) இருப்பனென்னும் கருத்து இறைவன் எல்லாப் பொருளிடத்தும் கலந்து நின்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது.

'இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எரியும் காற்றாகி
அறாநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்டமூர்த்தியாகி'

(திருத்தாண்டகம்)

என்று அப்பரும்,

'நிலம் நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாயமைந்தனோடெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்'

(திருத்தோணாக்கம். 5)

என்று மாணிக்கவாசகரும் பாடுவார்கள். இயற்கையும் இறைவனும் ஒன்றாகி இறைவன் இயற்கை வடிவாகி நின்ற கோலத்தை ஒரே தொடரில் இளங்கோவடிகள் மிகச்சிறப்பாக,

'உலகுபொதி உருவத்து உயர்ந்தோன்'

(கால்கோள் 55)

என்று கூறுவார். இவ்வாறு இறைவனுக்குப் பல வடிவங்களை, உருவங்களைக் கூறுவது சைவசமயம். பிறவிச் சூழலில் வரும் உயிர் ஒருடலைக் கொள்வது போல இறைவனும் ஒருடலைக் கொள்வது இல்லை. இதனால் இறைவன் ஒருடல் வடிவத்தில் காட்சியளிக்க முடியாதென்பதன்று. தன்னை வழிபடும் அடியவன் எவ்வித உருவத்தில் வழிபடுகின்றானோ, அவ்வடிவத்தில் வெளிப்படுவான். உயிரை உய்யச்

செய்வதற்கு எவ்வித வடிவங்கள் வேண்டுமோ, அவ்வித வடிவங்களில் வெளிப்படுவான்.

> ‘ஒரு நாமம் ஒருருவும் ஒன்றுமில்லாற்காயிரம்
> திருநாமம் பாடி நாம் தெள்ளேணங்கொட்டாமோ’
>
> (திருத்தெள்ளேணம் 1)

என்பது திருவாசகம்.

சைவ ஆகமத்தின்படி மூலமூர்த்தி சிவலிங்கம் (அருவுருநிலை) இலிங்கம் என்பதற்குப் படைத்தல், காத்தல் முதலியவைகளால் உலகத்தைச் சித்தரிப்பது (லிங்க-சித்தரித்தல்) என்று பொருள் கூறுவர்.[1] புராண அடிப்படையில் தோன்றி, வழிபாட்டுக்கு உரியனவாகக் கருதப்படும் மூர்த்தங்கள் அனைத்தும் இலிங்கத்திலிருந்து தோன்றியனவே. இலிங்கத்திலிருந்து தோன்றிய வடிவங்கள் அறுபத்து நான்கு. இவை அஷ்டாஷ்ட விக்கிரகங்கள் (8X8=64) என்று ஆகமத்தில் கூறப்பட்டுள்ளன (பின்னிணைப்பு காண்க). எல்லாமாகவும் இருக்கும் பரம்பொருள்; இவற்றுக்கு வேறாகவும் விளங்குவது என்றும், அருள் காரணத்தாலேயே வரையறைக்குட்பட்ட ஒரு கோலத்தைத் தாங்கியுள்ளது என்றும் கூறுவர். இதை அப்பர்,

> “ விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேதவிதியல்லர் விண்ணும் நிலனும்
> திரிதரு வாயுவல்லர் செறுதீயுமல்லர் தெளிநீருமல்லர் தெரியில்
> அரிதரு கண்ணியாளை ஒருபாகமாக அருள்காரணத்தில் வருவர்
> எரியர வாரமார்பர் இமையாருமல்லர் இமைப்பாருமல்லர் இவரே”
>
> (4231)

என்று எடுத்துக்கூறுவார். இறைவனின் மகேசுவர வடிவங்களில் சில வடிவங்கள் சம்ஹார வடிவங்களாக (அழித்தல்) உள்ளன. உயிர்களின் வினை மாசு கழிய அவற்றிற்கு உலகு, உடல், கருவிகள் முதலியவற்றையெல்லாம் கொடுத்தருளும் இறைவன், ஒருகால எல்லையில் அவ்வுயிர்கள் இளைப்பாறுதற்குத் தன்பால் ஒடுக்குவான். அவ்வாறு ஒடுக்குதலை அழித்தல் என்பர். அச்செயல் சிவபெருமானாலேயே செய்யப்படுகின்றது. இவ்வாறு அந்தத்தைச் செய்யும் இறைவனே உலகிற்கு ஆதியாவன், தலைமையுடையவனும் ஆவன் எனச் சிவஞானபோதம் செப்புகிறது. அந்தத்தைச் செய்பவன் ‘சங்கார காரணன்’ எனச் சிவஞானபோதத்தில் குறிக்கப்பெற்றுள்ளான்.[2]

---

1. சைவசமயம் - ப. அருணாசலம் ப. 5
2. அறுவகைச் சமயம், கு. சுந்தரமூர்த்தி, ப. 182

இதை நம் பண்டைத்தமிழ் நூலாகிய கலித்தொகை மிக அழகாக,

"கொலைவன் சூடிய குழவித்திங்கள்" (கலித்தொகை 103)

என்று கூறக் காண்கிறோம். பரிபாடல் 'காய்கடவுள்' (பரிபாடல் 5) என்று கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது. இறைவன் இயற்றும் ஐந்தொழிலையும் (படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்) காட்டும் அழகிய திருவுருவம் ஆடல்வல்லான் வடிவம் என்று கூறுவர். தமிழன் கண்ட சிற்பச் செந்நூலறிவுக்கு இன்றும் என்றும் சான்றாய் நிற்பது இத்திருக்கோலம் என்று கூறலாம். இதுபோல சம்ஹார வடிவத்திற்குப் பல வடிவங்களைக் கூறுவர். அதில் ஒரு சிறந்த வடிவமே பைரவக்கோலம். சிவபெருமானுக்கு அஷ்டாஷ்ட விக்கிரகங்கள் என்று அறுபத்து நான்கு வடிவங்களைக் கூறினாலும் அதில் சிறப்பாக இருபத்தைந்து வடிவங்களை மகேசுவரவடிவங்கள் என்று கூறுவர். அவை

1) சந்திரசேகரர் - சந்திரனைத் தலையில் சூடிய கோலம்

2) உமா சகாயர் - உமாதேவிக்கு அருளிய கோலம்

3) இடபாரூடர் - இடபவாகனத்தில் எழுந்தருளிய கோலம்

4) ஆடல்வல்லான் - ஐந்தொழில்புரியும் தாண்டவக்கோலம்

5) கல்யாணசுந்தரர் - உமையை மணந்த திருமணக்கோலம்

6) பிக்ஷாடனர் - தாருகாவனத்து முனிவர்களின் செருக்கடக்க, பிச்சை ஏற்கும் கோலம்

7) காமாரி - மன்மதனை எரித்த கோலம்

8) காலாரி - காலனை உதைத்து அடக்கிய கோலம்

9) திரிபுராரி - திருபுரத்தை அழித்த கோலம்

10) ஜலந்தரர் - சலந்தரனை வென்ற கோலம்

11) கஜாரி - கயாசுரனை அழித்த கோலம்

12) வீரபத்திரர் - தக்கனை அழித்த கோலம்

13) ஹரியர்த்தமூர்த்தி - திருமாலை ஒருபாகமாக உடைய கோலம்

14) அர்த்தநாரி - தேவியைப் பாகமாக உடைய கோலம்

15) கிராதமூர்த்தி - அருச்சுனனுக்காக வேடர் கோலம்

16) கங்காளர் - எலும்பு மாலை அணிந்த கோலம்

17) சண்டேசானுக்ரகர் - சண்டீசனுக்கு அருளிய கோலம்

18) நீலகண்டர் - நஞ்சுண்டு கறுத்த கண்டமமைந்த கோலம்

19) சக்ரதாதா - திருமாலுக்குச் சக்கிராயுதத்தைக் கொடுத்த கோலம்

20) விக்னப்ரசாதர் - விக்னேசுவரனுக்கு அனுக்கிரகம் செய்த கோலம்

21) சோமாஸ்கந்தர் - உமையோடும் கந்தனோடும் கூடிய கோலம்

22) ஏகபாதமூர்த்தி - சங்கார காலத்தில் ஆன்மாக்கள் சக்தியில் ஒடுங்க, சக்தி சிவத்தில் ஒடுங்கிய கோலம்

23) சுகாசனர் - சுகாசனத்திலிருந்து தேவிக்கு உபதேசம் செய்த கோலம்

24) தக்ஷிணாமூர்த்தி- சனகர் முதலாகிய நால்வருக்கு ஆலின் கீழிருந்து அறமுரைத்த கோலம்

25) இலிங்கோத்பவர்-அயன், அரி, அடிமுடியறியவொண்ணா ஜோதிப் பிழம்பான கோலம்

இவை தவிர 'சரபமூர்த்தி' என்ற திருக்கோலம் திருமாலின் நரசிம்ம அவதார வேகத்தை அடக்கிய கோலமாக வழிபடப்படுகிறது. இறைவனின் திருக்கோலங்களை ஒட்டுமொத்தமாக நோக்கும்பொழுது, 1) இறைவன் மற்ற பிற தெய்வங்களுக்குத் தம் வல்லமை உணர்த்த எடுத்த கோலம் 2) அரக்கர்களை - அவுணர்களை - அடக்கி அருள்பாலிக்க எடுத்த கோலம் 3) உயிர்களை உய்விப்பான் வேண்டித் திருவிளையாடல் புரிந்த கோலம் என்று மூன்று நிலைகளைக் காணமுடிகிறது.

சிவபெருமானின் சம்காரக் கோலமாகக் கருதப்படும் பைரவக் கோலத்தில் மேற்சுட்டிய மூன்று நிலைகளையும் காணலாம். சிவனின் வேக வடிவங்களில் ஒன்று பைரவ மூர்த்தம் என்பர். செஞ்சடையும், நீலநிறமும் கொண்டு விளங்கும் இப்பெருமானிடம் திருவடிகளில் சிலம்பும், மார்பில் தலைமாலையும், கைகளில் சூலம், மழு, பாசம், உடுக்கை என்பனவும் காணப்படுகின்றன. முக்கண்களோடும், கோரப்பற்களோடும் சீற்றம் கொண்ட முகத்தோடும் விளங்குபவர். இவரே

ஊழி இறுதியில் தாண்டவமாடி யாவற்றையும் அழிப்பவர் என்பர். நான்மறைகளே நாய் வடிவுடன் வாகனமாயிருக்கிறது என்று கூறுவர். இறைவனின் மூவகைத் தாண்டவமாகச் சிருஷ்டித்தாண்டவம், ஆனந்தத்தாண்டவம், ஊர்த்துவதாண்டவம் என்பதைக் குறிப்பிடுவர்.

இதில் சிருஷ்டித்தாண்டவம் என்பது திருக்கைலாயத்தில் தேவர்கள் நடுவில் ஆடுவது. (பிரதோஷ நடனம்) இது ஊழிக்காலம் முடிய உலகத்தோற்றம் உண்டாக ஆடும் சிருஷ்டி நடனம்.

ஆனந்தத் தாண்டவம் என்பது ஐந்தொழில் புரியும் நடனம். இதுவே சிதம்பரத்தில் சிற்சபையில், நித்தியமாய் நிரந்தரமாய் ஆடிக் கொண்டிருக்கும் அற்புத நடனம்.

ஊர்த்துவதாண்டவம் என்பது பைரவமூர்த்தத்தில், வீரபத்திர மூர்த்தத்தில் நின்று உலக ஒடுக்கத்திற்காக ஆடுவது. சம்ஹார நடனம் - என்பது திருவாலங்காட்டில் காளியுடன் ஆடியது. இதைச் சங்கார ருத்திரர் என்பர். சகல தத்துவங்களையும் சங்கரித்து ஆன்மாக்களை ஈடேற்றும் கோலம்.

பைரவருக்கு அவர்தம் திருவிளையாடல்களை வைத்துப் பல பெயர்கள் வழங்குகின்றன. அவை:

1) பிரம்மசிரச்சேதர்
2) சரபேசர்
3) அந்தகாசுர சம்ஹாரர்
4) சட்டைநாதர் & ஆபதுத்தாரணர்
5) க்ஷேத்திரபாலர்
6) வடுகநாதர்

என்பவையாகும். சிவபெருமானின் எல்லையற்ற ஆற்றலை விளக்கும் பொருட்டும், சிவனே எல்லாக் கடவுளர்களிலும் உயர்ந்தவர் என்பதைக் காட்டும் பொருட்டும் புராணங்களில் சிவபெருமானின் திருவிளையாடல் பலவாறு பேசப்பட்டுள்ளது. சைவசமயம் மற்ற சமயக் கருத்துக்களையும் கடவுளர்களையும், வழிபாடுகளையும் ஏற்றுக்கொண்டபொழுது, அவற்றைப் பரம்பொருளோடு உறவுபடுத்திக் கூறினர். விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், வீரபத்திரர் ஆகிய நான்கு கடவுளர்களையும் பரம்பொருளின் மக்களாகக் (சிவகுமாரர்கள்) கூறும் வழக்கும் ஏற்பட்டது. இந்நால்வரும் அடியார்கள் ஈடேறும் பொருட்டு இறைவன் கொண்ட கோலங்களாகும். முன்னர்க் கூறப்பட்ட இருபத்தைந்து மகேசுர வடிவங்களும், சிவகுமாரர்களாகக் கூறப்பட்ட நால்வரும், இறைவன்

சுத்த மாயா தத்துவத்திற் கொண்ட வடிவங்கள். தோற்றம் வேறுபடினும் உள்நிற்பது ஒன்றே அப்பரம்பொருள் என்ற விளக்கம் சமய அடிப்படையில் தரப்பட்டது.

திருக்கோயில்களில் இறைவழிபாடு மூன்றுநிலைகளில் நடைபெறுதல் வேண்டும். அவை,

1) திருவுருவ வழிபாடு
2) எந்திர வழிபாடு
3) மந்திர வழிபாடு

என்று கூறுவர். இதில் திருவுருவ வழிபாடு என்பது மூன்று நிலையாக அருவம், உருவம், அருவுருவம் என்று கூறுவர். இம்மூன்றும் ஒரே திருக்கோயிலில் இடம்பெற்றிருக்குமேயானால், அதுவே மிகச்சிறந்த, உயர்ந்த தலமாகக் கருதப்படும். சைவசமயத்தில் தில்லைத் திருக்கோயிலை மட்டும் 'கோயில்' என்று வழங்கும் வழக்கு உள்ளது. சைவர்களுக்குக் கோயில் என்பது தில்லைச் சிதம்பரம். வைணவர்களுக்குக் கோயில் என்பது திருவரங்கம். தில்லைச் சிதம்பரம் கோயிலில் மேற்குறிப்பிட்ட மூவகை வழிபாடும் உள்ளதால், இது சைவர்களின் தலைமைத் திருத்தலமாகக் கருதப்படுகிறது. இங்கு அருவ நிலையில் (சித்சபை) பரவெளியும் உருவநிலையில் ஆடல்வல்லானும்., அருவுருவ நிலையில் திருமூலநாதரும் (சிவலிங்கம்) வழிபாட்டிற்குரியராய் அமைந்துள்ளனர். இவைதவிர, உருவம், எந்திரம், மந்திரம் என்ற மூன்று நிலை வழிபாடுகளும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இவற்றை மூன்றாகப் பிரித்துக்கூறினாலும் எந்திரப் பிரதிஷ்டையோடு கூடிய திருவுருவ வழிபாடுகளே திருக்கோயில்களில் அமைந்துள்ளன. மந்திரமின்றி வழிபாடுகள் நடைபெறுவதில்லை. ஆகவே ஒரு குறிப்பிட்ட தெய்வத் திருக்கோலத்திற்கு இம்மூன்றும் உண்டு. இறைவடிவத்தை ஒரு உருவத்திற்குள் கொண்டுவந்த பின்னர் அதற்குச் சக்தி ஊட்டும் எந்திரம் என்ற வரிவடிவச் சக்கரத்தையும் மந்திரமொழிகளையும் கூறி வழிபடுதல் சைவமரபு. இதைத் திருமூலர்.

"மந்திரம் சக்கரமானவை சொல்லிடில்
தந்திரத் துள்ளெழுத் தொன்றெரி வட்டமாம்;
தந்திரத் துள்ளும் இரேகையில் ஒன்றில்லை;
பெந்தம தாகும் பிரணவம் உன்னிடே" (1264)

என்று திருமந்திரத்தில் கூறுகிறார். மந்திரம் சக்கரம் என்பவற்றின் உண்மைப் பொருள் "நாதமாகிய உண்மை எழுத்து ஒன்றே சோதிமண்டலமாம்" என்பர். உண்மை எழுத்துக்களை உணர்த்தும் கருவிகளாகிய ஆகாய ஒலியையும், அதற்கு அறிகுறியாய் உள்ள வரி

வடிவத்தையும் இங்கு மந்திரம், எந்திரம் (சக்கரம்) என்று கூறுவர். இவ்வெந்திரங்களைச் சக்கரங்களை வழிபடுவதன் பயனையும் திருமூலர் காட்டுகிறார்.

"கொண்ட இம்மந்திரம் கூத்தன் எழுத்ததாய்ப்
பண்டை உள்நாவில் பகையற விண்டபின்
மன்றுள் நிறைந்த மணிவிளக் காயிடும்
என்றும் இதயத் தெழுந்து நமவே" (திருமந்திரம் 1273)

கலைகளுக்குரிய மந்திரங்களாகக் கொள்ளப்பட்ட சக்கர எழுத்துக்கள்; இறைவன் எழுத்தாகவே ஆகி, யோக முறைப்படி உள்நாக்கில் மாறுபாடு நீங்க ஒலிக்கப்படவேண்டும். இவ்வாறு ஒலிப்பதால் திருவைந்தெழுத்து (நமசிவாய) மனத்திலே தோன்றி இறையம்பலத்தில் நிறைந்து நிற்கின்ற, சிவமாகிய தூண்டாமணி விளக்காய் என்றும் ஒளிவிட்டு விளங்கும் என்று திருமந்திரத்தில் எந்திர எழுத்துக்களின் சக்கரத்தின் பயனைக் கூறுவார் திருமூலர்.

பைரவர் வழிபாட்டில் உள்ள எந்திர வழிபாடு (சக்கரம்) பற்றித் திருமூலர் ஆறு மந்திரங்களில் கூறுகிறார். வயிரவச் சக்கரம் என்ற தலைப்பில் வயிரவச் சக்கரத்தின் அமைப்பு, வயிரவர் படைக்கலம், வயிரவத்தியானமுறை, வயிரவ வழிபாட்டுமுறை, வழிபாட்டின் பயன் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

வயிரவச்சக்கர அமைப்பு

"அறிந்த பிரதமையோ டாறும் அறிந்து
அறிந்த அச் சத்தமி மேலவை குற்ற
அறிந்தவை ஒன்றுவிட் டொன்றுபத் தாக
அறிந்த வலமது வாக நடத்தே" (திருமந். 1274)

அமாவாசை, பௌர்ணமி என்னும் இருபக்கங்கள் பதினைந்து திதிகளையும் ஆறு ஆறு திதிகளாகப் பிரிக்கும் முறையில் சக்கரத்தை அமைக்க வேண்டும். மந்திர எழுத்துக்களைக் கூறிய முறைப்படி, முப்பது அறைகளில் அடக்கவேண்டும். நடுவில் உள்ள ஆறு அறைகள் வெற்றிடங்களாய் நிற்கும். அவற்றிற்கு நடுவில் 'ஓம் பம்' என்னும் பிரணவ பீசங்களையும், அவற்றின் கீழ்த் தொடங்கி, 'பைரவாய நம' என்னும் ஆறெழுத்துக்களை ஆறு அறைகளில் எழுதச் சக்கரம் நிறைவுபெறும். அமாவாசை தொடங்கி ஓர் எழுத்தைப் பத்துமுறை செபித்துப் பௌர்ணமி முடிவில் நடுவில் உள்ள மூலமந்திரத்தைச் செபிக்கவேண்டும். இதுபோலப் பௌர்ணமி தொடங்கி அமாவாசை முடிய செபித்தல் வேண்டும். பைரவர்

எக்காலமும் காப்பவர் ஆகவே காலபைரவர் எனப்படுவதால் கதிரளவை (சௌரமானம்) மதியளவை (சந்திரமானம்) இரண்டிற்கும் பொதுவான திதிக்காலத்தை ஒட்டி அவரை வழிபடுதல் வேண்டும். இவ்வாறு வயிரவச் சக்கர அமைப்புமுறை கூறப்பட்டுள்ளது (வயிரவச் சக்கரம் பின்னிணைப்புக் காண்க).

ஸ்ரீ ஸ்வர்ணாகர்ஷண பைரவர்

"ஸ்வர்ண கால பைரவம் த்ரிசூலயுக்தபாணிநம்
வேதரூப ஸாரமேல ஸம்யுதம் மஹேச்வரம்
ஸ்மாச்ரி தேஷு ஸர்வதாஸமஸ்தவஸ்து தாயினம்
மகீந்த்ரி வம்ச பூர்வபுண்ய ரூபிணம் ஸமாச்ரயே"

என்பது பைரவ மந்திரம். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தில்லைச் சிதம்பரத்தில் உள்ள தீட்சிதர்கள், இங்குள்ள பைரவ மூர்த்தியின் பாதத்தில் செப்புத் தகட்டில் பைரவச் சக்கரம் எழுதி அர்த்தயாமப் பூசையில் வைத்து வழிபட்டார்கள். மறுநாள் காலையில் பைரவமூர்த்தியின் ப்ரபாவத்தால் சொர்ணமயமான (பொன்னாகிய) அந்தத் தகட்டைப் பெற்றனர் என்பது சிதம்பரத்தில் வழங்கும் முதியோர்மொழி. ஆதலால் இங்குள்ள பைரவரை சொர்ணாகர்ஷண பைரவர் என்றும் கூறுவர். இம்மூர்த்தி நடராசருடைய சித்ஸபையில் கீழ்ப்புறத்தில் அமைந்துள்ளது. சிதம்பரத்தில் நாள் வழிபாட்டில் விழாக்காலங்களில் இம்மூர்த்தியைக் கனகசபையில் எழுந்தருளச் செய்து சிறப்பு வழிபாடுகள் செய்வதுண்டு. நாள்தோறும் பூசை முறையுள்ள தீட்சிதர்கள் இம்மூர்த்திக்கு வழிபாடு செய்துவருவர். இவருடைய வழிபாட்டால் ஸ்வர்ணலாபமும், பயநிவர்த்தியும், சர்வ அபீஷ்டசித்தியும் ஏற்படும் எனப் பெரியோர் கூறுவர்3. திருப்பதியில் திருமலையில் இருக்கும் ஏழுமலையான் (வேங்கடாஜலபதி) சக்கரம் ஸ்வர்ணாகர்ஷண சக்கரம் என்பதால்தான், பொன்னும், பொருளும் குவியும் திருப்பதியாக இது விளங்குகிறது என்பர். ஸ்வர்ணாகர்ஷண பைரவர் நான்குகரம், முக்கண் கொண்டவராய், பொன்னிற வண்ணத்தவராய் இருப்பர். இவர் கரங்களில் உள்ள பாத்திரம் பொன்னும் மணியும் கொண்டதாய் இருக்கும். நீண்ட திரிசூலம் கொண்டவராய் இருப்பர் என்று கூறுவர்.4

3. The History of Chidambaram Sri Nataraja's Temple - Sethu Dikshitar - pp. 77-78.
4. Elements of Hindu Iconography - Vol. II, Part-I, p. 179.

வயிரவர் படைக்கலம்:

"ஆமேவப் பூண்டருள் ஆதி வயிரவன்
ஆமே கபாலமும் சூலமும் கைக்கொண்டங்கு
ஆமே தமருக பாசமும் கையது;
ஆமே சிரத்தொடு வாளது கையே" (திருமந். 1276)

நரசிங்கப்பெருமாள், திரிவிக்கிரமன் இவர்களது தோலை ஆடையாகப் போர்த்துள்ளவர் ஆதிவயிரவர். திரிவிக்கிரமனது முதுகெலும்பையே சிவபெருமான் வீணாதண்டமாகக் கொண்டு வீணாதரமூர்த்தியாக விளங்குகின்றார் என்பர். ஆதிவயிரவர் சூலம், தமருகம், வாள் என்பனவற்றை வலக்கைகளினும், பாசம், கபாலம், வெட்டப்பட்ட பிரமனின் தலை என்பனவற்றை இடக்கைகளிலும் கொண்டு விளங்குகிறார். வயிரவர் ஆறு கைகளிலும் படைக்கலம் முதலியவற்றைக் கொண்டு விளங்கும் காட்சி கூறப்பட்டுள்ளது.

வயிரவத்தியான முறை

"கையவை ஆறும் கருத்துற நோக்கிடு'
மெய்யது செம்மை விளங்கு வயிரவன்
துய்ய ருளத்தில் துலங்குமெய் உற்றதால்
பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே" (திருமந். 1277)

வயிரவமூர்த்தி ஆறு கைகளையுடையவர். திருமேனி செந்நிறம் உடையது. பிரமன் தலையைக் கிள்ளிக் குருதிப்பலி ஏற்றமையால் செம்மை விளங்கு வயிரவனானார். தூயவர் உள்ளத்தில் துலங்கி நிற்பதாகிய வடிவம் உனது நெஞ்சிலும் உள்ளதாக எண்ணி, வஞ்சனையற்ற மெய்யான அன்போடு மந்திர வழிபாடு செய்யவேண்டும்.

வயிரவ வழிபாட்டுமுறை

"பூசனை செய்யப் பொருந்தி ஓர் ஆயிரம்
பூசனை செய்ய அது உடன் ஆகுமால்
பூசனை சாந்து சவ் வாது புழுகுநெய்
பூசனை செய்துநீர் பூசலை வேண்டுமே" (திருமந். 1278)

வயிரவ வழிபாட்டினைச் செய்ய விரும்பினால், வயிரவச் சக்கரத்தினை ஓர் ஆயிரம் நாள் வழிபடல் வேண்டும். அவ்வாறு வழிபடின் அச்சக்கர வழிபாட்டின் பயன் கூடுவதாகும். அவ்வழிபாட்டினைச் சந்தனம், சவ்வாது, புனுகு, நெய் என்னும் இவைகளைச் சிறப்பாகக் கொண்டு செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் பகை நீங்கி வெற்றி கிடைக்கும். வாம

சமயத்தைச் சார்ந்தவர்கள் இம்மந்திரத்தின் இரண்டாம் அடியை, 'பூசனை செய்ய மதுவுடன் ஆகுமால்' என்று மாற்றியமைத்துப் பொருள்கொண்டு மாறாக ஒழுகினார்.

வயிரவ வழிபாட்டின் பயன்

" நடந்த வயிரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண்ணது போக்கித்
தொடர்ந்த உயிரது உண்ணும்பொழுது
படர்ந்த உடல்கொடு பந்தாடல் ஆமே" (திருமந். 1275)

" வேண்டியவாறு கலகமும் ஆயிடும்
வேண்டிய ஆறினுள் மெய்யது பெற்றபின்
வேண்டிய ஆறு வரும்வழி நீநடர்
வேண்டிய வாறது வாகும் கருத்தே" (திருமந். 1279)

வயிரவமூர்த்தி சூலகபாலங்களை ஏந்திய வேகவடிவத்தினர். தம் அடியவரை வென்ற பகைவரைத் தாம், போர்ச் சூழ்ச்சி அற்றவராகச் செய்து, அவர்தம் உயிரையும் போக்கித் தமது வெற்றிக்கு அறிகுறியாக அவர்களது உடல்களைப் பந்துபோல் எறிந்து வீரவிளையாடல் செய்தருளுவார். இம்மந்திரம்

" ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்" (திருக்குறள் 264)

என்னும் வள்ளுவத்தை இங்கு நாம் எண்ணிப் பார்க்கவைத்துள்ளது. இவ்வாறு ஒரு வரிசையில் ஆறு அறைகளைக் கொண்ட வயிரவச் சக்கரத்தை வழிபாட்டால் பகைமை நீங்கி, ஆற்றல் ஓங்கி அருள்பெறுவர் என்று திருமந்திரத்தின் ஆறு மந்திரங்களும் கூறுகின்றன. இறைவனை எழுத்து வடிவமாகக் கண்டு உணர்ந்து வழிபடும் வழக்கம் சைவத்தில் பெரிதும் உணர்த்தப்பெற்ற ஒன்று. இறைவன் எண்ணாகி, எழுத்தாகி இருக்கிறான் என்பது சைவ மரபு. இம்மரபு வளர்ச்சியே சக்கர வழிபாடு (எந்திர வழிபாடு) என்று கூறலாம். மந்திர ரூபமாக விளங்கும் இறைவனை எந்திர ரூபமாக, எழுத்து வடிவமாக, பஞ்சாட்சர வடிவில் கூறுவதுண்டு. தில்லைச் சிற்றம்பலவாணர் ஐந்தெழுத்து வடிவினர்.

நமசிவாய

" ஆடும்படிகேள் நல்லம் பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே நகரம், கூடு
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரு, முகம்வா முடியப்பார்" (உண்மை விளக்கம் 33)

என்று நமசிவாய மந்திர வடிவமாக அவரைக் கூறுவர்.

சிவாய நம

"சேர்க்கும் துடி சிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்" (உண்மை விளக்கம் 34)

என்று சிவாய நம மந்திர வடிவமாகக் கூறுவர். இறைவன் திருவுருவத்தையே ஸ்தூல மந்திரமாகவும், சூக்கும மந்திரமாகவும் சைவசித்தாந்த சாத்திரம் கண்டோர் கூறினர். நடராசப் பெருமான் திருக்கோலத்தினைச் சுற்றியிருக்கும் திருவாசியினை ஓங்காரமாகக் கூறுவர். ஓம் என்ற பிரணவமந்திர ஒலியின் வரி வடிவமாகக் கணபதியைக் கூறுவதுமுண்டு. இறைவன் திருமேனியை எழுதி வணங்கும் வழிபாடு நம் பண்டைத்தமிழ் மரபாக இருந்தமையைத் திருமுருகாற்றுப்படை கூறும் எழுதெழில் அம்பலம், எழுத்துநிலை மண்டபம் (திருப்பரங்குன்றம்) நமக்கு உணர்த்துகின்றது. சிவபெருமானின் பஞ்சசபைகளில் [திருவாலங்காடு (இரத்தினசபை), சிதம்பரம் (கனகசபை) பொன்னம்பலம், மதுரை - வெள்ளியம்பலம் (ரஜத சபை). திருநெல்வேலி (தாமிரசபை), திருக்குற்றாலம் (சித்திர சபை)] ஒன்றான திருக்குற்றாலம் சித்திரசபையாக இறைவனை எழுதி வழிபடும் இடமாக உள்ளதும் இங்கு எண்ணத்தக்கது. சிவபெருமானைப் பைரவ வடிவத்தில் வணங்குவதுபோல, இறைவனின் சக்தியை (இறைவியை) பைரவியாக வணங்கும் மரபும் உள்ளது. பைரவரை 'ஆனந்த பைரவர்' என்றும் இறைவியை 'ஆனந்த பைரவி' என்றும் கூறுவர். எரித்துச் சாம்பலாக்கப்பட்ட உலகத்தை மீண்டும் உண்டு பண்ணுவதற்காக இறைவன் ஆனந்த பைரவராகவும், இறைவி ஆனந்த பைரவியாகவும் தாண்டவமாடிக் கொண்டு இருப்பதால் சிருங்காரம், வீரம், ஹாஸ்யம், அற்புதம், பீபத்ஸம், ரௌத்ரம், பயானகம், கருணை, சாந்தி என்று ஒன்பது விதமான ரஸங்கள் வெளிவருகின்றன என்று கூறப்படுகிறது. வடநாட்டில் பைரவி வழிபாடு, பைரவர் வழிபாடு போல அச்சம்தரும் வழிபாடாக உள்ளது (வரைபடம் காண்க). திருமூலர் தம் திருமந்திரத்தில் வயிரவி மந்திரம் எனும் தலைப்பில் ஐம்பது மந்திரங்களை அந்தாதியாய்த் தருகிறார்.

"பன்னிரண்டாங்கலை ஆதி பயிரவி
தன்னில் அகாரமும் மாயையும் கற்பித்துப்
பன்னிரண்டாதியோ டந்தப் பதினாலும்
சொன்னிலை சோடசம் அந்தம் என்றோதிடே" (திருமந்.1058)

உயிர்களது துன்பத்தை நீக்குவதற்கு அமைந்த சக்தியின் வடிவங்களுள், வராகி, வயிரவி என்னும் இருவடிவங்கள் முதன்மையாகச் சொல்லப்படுவன. இங்கு வயிரவ வடிவ நிலையினை விளங்கிப் பல மந்திரங்களாகக் கூறுகிறார். வயிரவ மந்திரத்தை ஓதிப் பயன்பெறுக என்று முதல்மந்திரத்தில் கூறியுள்ளார்.

"அந்தம் பதினாலதுவே வயிரவி
முந்தும் நடுவும் முடிவும் முதலாகச்
சிந்தை கமலத் தெழுகின்ற மாசத்தி
அந்தமும் ஆதியும் ஆகிநின்றாளே." (திருமந். 1059)

உள்ளக் கமலத்தில் விளங்குகின்ற பராசக்தியாக வயிரவி உலகிற்கு முடிவும் முதலுமாய் உள்ளாள். வயிரவியை "ஹோம் ஹைம் ஹௌ: பைரவியே நம" என்ற மூலமந்திரத்தால் வணங்கி வழிபாடு செய்தல்வேண்டும், என்கிறார் திருமூலர்.

"சூலம் கபாலம் கையேந்திய சூலிக்கு
நாலங் கரம்உள: நாகபாசாங்குசம்
மாலங் கயன்அறியாத வடிவற்கு
மேலங்கமாய் நின்ற மெல்லியலாளே" (திருமந் 1064)

வயிரவிக்கு அழகிய கைகள் நான்கு. அவைகளில் சூலம், கபாலம், நாகபாசம், அங்குசம் என்பனவற்றை ஏந்தியிருப்பாள். இவள் திருமாலாலும், பிரமனாலும் அறியப்படாத அழல் வடிவத்தையுடைய சிவபெருமானுக்குச் சிறந்த திருமேனியாகின்ற அருளேயன்றி வேறல்லள் என்று கூறுகிறார்.

"நின்ற வயிரவி நீலி: நிசாசரி
ஒன்றும் இரண்டும் ஒருங்கிய உள்ளத்துச்
சென்றருள் நாயகி தேவர் பிரானுக்கே;
நன்றருள் ஞாலத்து நாடிரும் சாற்றியே" (திருமந். 1080)

துன்பத்தை நீக்கும் வயிரவி நீலநிறத்தை உடையவள். இரவில் உலாவுபவள். ஒன்றும் இரண்டும் அதாவது மனமாகிய ஒன்றும், வாக்கு காயமாகிய ஏனை இரண்டும் ஒருவழிப்பட்டோரது உள்ளத்தில் தானே விளங்கி அருள்புரிபவள். சிவபெருமானுக்கே உரிய சக்தியானவள் வயிரவி என்று கூறுகிறார். வடநாட்டில் சுடுகாட்டுத் தெய்வமாக எண்ணப்படும் வழிபாட்டு நிலையை இத்திருமந்திரத்தில் காட்டுகிறார் திருமூலர்.

"ஆதி வயிரவி கன்னித் துறைமன்னி
ஓதி உணரில் உடலுயிர் ஈசனாம்
பேதை உலகில் பிறவிகள் நாசமாம்
ஓத உலவாத கோலம் ஒன்றாகுமே" (திருமந். 1082)

சிவமும் சக்தியும் பிரிப்பின்றியிருப்பினும், சிலவிடத்துச் சிவத்தன்மையும், சிலவிடத்துச் சத்தித் தன்மையும் முனைந்து தோன்றும். வடக்கில் கயிலைமலை சிவமலையாகின்றது. அதுபோலத் தெற்கில் குமரிமலை சக்திமலையாய் இருந்தது. காலவேறுபாட்டால் அம்மலையைக் கடல் தன்னுள்ளே அகப்படுத்திக் கொண்டது. குமரிமலை குமரிமுனை எனப்படுவதாயிற்று. ஆகவே, திருமூலர், 'கன்னித்துறை மன்னி' என்று கூறினார். வயிரவியைத் துதித்தும், தியானித்தும் நின்றால் உடலில் உள்ள உயிர் சிவமாகும் என்பது திருமந்திரம்.

புராணங்களில் பைரவர்

இறைவனின் எங்கும் நிறைந்த பரம்பொருள் தன்மையையும், சர்வவல்லமையையும் விளக்குவான் வேண்டி இறைவனைப் பலவடிவங்களில் வைத்து வழிபாடு செய்துள்ளனர். சமயப்பூசல், சமயப்போர், சமயஉயர்வு காரணமாகப் பிற சமயத்தாரை அச்சுறுத்துவான் வேண்டியும், அச்சமயத்திலிருந்து தம் சமயம் உயர்ந்தது, தம் கடவுள் எல்லோரையும் உள்ளடக்கி உயர்ந்து நிற்பவர் என்பதைக் காட்டுவான் வேண்டியும் பல புராணக்கதைகளை விரித்து எழுதியுள்ளனர். உயர்ந்த பல தத்துவங்களை மக்களுக்கு எளிமையாக விளக்குவான் வேண்டி எழுந்த புராணக்கதைகள் நாளடைவில் மக்கள் நம்பிக்கையை இழக்கும் நிலைக்கு மாறிவிட்டது. ஆணவம் கூடாது; ஆசையை அகற்ற வேண்டும். அன்பை அறிவைக் கைக்கொள்ளவேண்டும்; தொண்டுநெறி நிற்க வேண்டும் என்பவைகளே எல்லாப் புராணக் கதைகளிலும் அடித்தளமாய உள்ளன.

சிவபெருமானைப் பற்றி எண்ணிறந்த புராணக்கதைகள் உள்ளன. சிவமஹாபுராணம், சிவபராக்கிரமம், சிவமகாத்மியம் என்ற பெயர்களில் பல கதைகள் வழங்கிவருகின்றன. சிவபெருமானின் ஒருகூறாக விளங்கும் பைரவர் பற்றியும் சில கதைகள் வழங்கிவருகின்றன. அக்கதைகளின் அடிப்படையில் அவ்வடிவங்களுக்குப் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

1) பிரம்ம சிரச்சேதர்

சிவபெருமானுக்கு ஐந்து தலைகள், அவை ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்பன. பிரம்மனுக்கும் ஐந்து தலைகள் இருந்தன. சிவனுக்கும் ஐந்து தலைகள். எனக்கும் ஐந்து தலைகள். காக்கும் கடவுளான காத்தற் தொழிலைப் புரியும் திருமாலோ, அழிக்கும் கடவுளான சிவனோ உயர்ந்தவரல்லர். காத்தலையும்,

அழித்தலையும்விடப் படைக்கும் தொழிலான உயர்ந்த தொழிலைப் புரியும் நானே சிறந்தவன் என்று எண்ணி இறுமாப்புக்கொண்டான் பிரம்மன். வேதங்கள் நான்கும் அவனுக்குச் சிவனே உயர்ந்தவர் என்று எடுத்துக்கூறின. அவன் ஏற்கவில்லை. சிவபெருமானின் வேகசக்தி (உக்கிரசக்தி) ஒன்று தோன்றியது. கொடூரவடிவத்தில் கொடிய ஆயுதங்களுடன் தோன்றி, பிரம்மனுக்குப் பாடம் புகட்ட எண்ணி அவனது ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி எறிந்தது. பிரம்மன் நான்முகனானான். தன் தவற்றையும், சிவபெருமானின் பெருமையையும் உணர்ந்தான். பைரவ மூர்த்தியாகத் தோன்றிய இவ்வடிவமே பிரம்ம சிரச்சேதர் என்ற பெயரில் வழிபடப்படுகிறது என்று கூர்மபுராணம் கூறுகிறது.

காசிக் காண்டத்தில் பைரவசரித்திரம் வேறுவிதமாகக் கூறுப்பட்டுள்ளது. பிரம்மன் பொய் சொன்னதால் (அடிமுடிதேடிய கதை) அவன் தலையைப் பைரவர் கிள்ளி எறிந்துவிடுகிறார். அதனால் அவருக்குப் பிரம்மஹத்தி தோஷம் (பிராமணனைக் கொன்ற குற்றம்) ஏற்படுகிறது. பிரம்மனின் கபாலம் கையில் ஒட்டிக்கொண்டிருக்கிறது. பிரம்ம ஹத்தியைப் போக்குவதற்கு உலகம் முழுவதும் அலைகிறார். நர்மதை நதிக்கரையில் முனிவர்களிடம் வந்து தன் குறையை முறையிடுகிறார். நீ காசிக்குப் போனால், உன் பிரம்மஹத்தி விலகும் என்று முனிவர்கள் கூறுகிறார்கள். காசி எங்கிருக்கிறது என்று கேட்பாயாகில் ஆனந்த கானகம் என்ற அரணமிருக்கிறது அதுதான் காசி என்று பல அடையாளங்களைக் கூறுகிறார்கள். இறுதியாக எந்த இடத்தில் உன் கையிலிருக்கும் பிரம்மனின் கபாலம் தெரித்துவிழுகிறதோ, அதுதான் காசி என்று புரிந்துகொள், கபாலம் தெரித்துவிழுந்தால் உன் பிரம்மஹத்தி நீங்கியதென்று தெரிந்துகொள். நீ கையில் கபாலத்தோடு சுற்றுவதால் உன்னை எல்லோரும் கபால பைரவர் என்று அழைப்பார்கள் என்று கூறுகிறார்கள். முனிவர்களின் வாக்குப்படி காசிக்குச் சென்று கபாலம் நீங்கிக் காசி விசுவநாதராகிய சிவபெருமானை வணங்கினார். காசி விசுவநாதர் பைரவருக்கு அருள்பாலித்தார். காசியில் காலனின் அதிகாரம் செல்லாது ஆகையால் காலனின் காரியத்தை நீ கவனித்துக் கொள் என்று சொல்லிக் காலபைரவர் என்ற பெயரையும் வைத்துக் காசியில் சேனாதிபதியாய் இருக்கும்படிச் செய்தார் என்று கூறுகிறது. வராஹ புராணக்கதையும் இவ்வாறே எடுத்துரைக்கக் காண்கிறோம். ஆகவே காசி செல்வோர் கபால பைரவரை வணங்கிக் கையில் கபால பைரவரின் நினைவாய்க் கருப்புக்கயிறு தரித்துக் கொள்ளும் வழக்கம் உள்ளது.

சரபேசர்

இரணியனது ஆணவத்தை அடக்கிப் பரம்பொருள் தான் என்பதை உலகுக்குக் காட்ட திருமால் அவதாரம் எடுத்தார். நரன்-மனிதன், சிம்மம்-விலங்கு, அறிவுவடிவம்-மனிதன், ஆற்றல்வடிவம்-விலங்கு, இவ்விரண்டும் கலந்த வடிவம் கொண்ட நரசிம்மம் இரணியவதம் செய்து வெற்றி கண்டது. இரணியவதம் முடிந்த பின்னரும் நரசிம்மத்தின் கோபமும் வெறியும் குறையவில்லை. உலகத்தை அழிக்கத் தொடங்கியது. உலகத்தில் அமைதி ஏற்படுத்த எண்ணிய சிவபெருமான் விலங்கு, பறவை போன்ற யாளி முகங்கொண்ட ஒரு அற்புத வடிவமாய் சிம்பிளாய்ச் (சரபமாய்ச்) சென்று அழித்து அதன் தோலைப் போர்வையாகப் போர்த்திக் கொண்டார். இவ்வடிவத்தில் வழிபடப்படும் மூர்த்தம் வயிரவமூர்த்த பேதம் என்று கூறுவர்.

அந்தகாசுர சம்ஹாரர்

இரணியாட்சன் மகனாகிய அந்தகாசுரன் பயங்கரமான உருவம் கொண்டவன். அவன் சிவபெருமானை எண்ணிப் பஞ்சாக்கினி நடுவில் நின்று கடுந்தவம் புரிந்தான். அவனுடைய தவத்திற்கு இரங்கிய சிவன், அவனுக்கு என்ன வரம்வேண்டும் என்று வினவினார். தன்னை யாராலும் வெல்லமுடியாத பேராற்றலும் பெரும்போக நுகர்ச்சியுந் தந்தருள வேண்டும் எனச் சாற்றினான். கேட்ட வரம் கிடைத்தது. வரம்பெற்ற அந்தகாசுரன் தேவர்களையடக்கி அவர்களைப் பெண் வடிவம் பூண்டு பணிசெய்யுமாறு பணித்தான். தேவர்கள் வளைக்கரம் பூண்டு அந்தகாசுரனை அர்ச்சித்தனர். அப்படியும் அந்தகாசுரன் ஆணவம் குறையவில்லை. அந்தகாசுரனின் கொடுமையை ஆற்றவொணாத் தேவர்களும் திருமாலும் நான்முகனும் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். தேவர்தம் குறைதீர்க்க எண்ணிய சிவபெருமான், தம்முன் நின்ற தம் குமாரர் வைரவமூர்த்தியை நோக்கி அந்தகாசுரனின் ஆண்மையை அழித்து அமரர் துயரந்தீர்க்கவெனக் கட்டளையிட்டான். சிவப்பணியைச் சென்னிமேற்கொண்ட பைரவமூர்த்தி மூவிலைச் சூலங்கொண்டு அந்தகாசுரனை அழித்து அமரர் துயர் துடைத்து அந்தகாசுர சம்ஹார மூர்த்தி ஆனார்.

> "நஞ்சினை உண்டிருள் கண்டர் பண்டந்தகனைச் செற்ற
> வெஞ்சின மூவிலைச் சூலத்தர் வீழி மிழலையார்
> அஞ்சனக் கண்ணுமை பங்கினர் தங்கையங்காடிய
> மஞ்சனச் செஞ்சடையார் என வல்வினை மாயுமே" (தே.2891)

என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு. இப்புராணக் கருத்தைத் திருமூலர், தம் திருமந்திரத்தில்,

" கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத் துயிர்களை எல்லாம்
வருத்தஞ் செய்தானென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டு கொன்றானே"

என்று விரித்துக் கூறுவார்.

சட்டைநாதர் & ஆபதுத்தாரணர்

மகாபலிச் சக்கரவர்த்தியின் கர்வத்தை அடக்குவதற்காகத் திருமால் வாமன அவதாரம் கொண்டு திரிவிக்ரமனாய் வந்து, மகாபலியின் ஆணவத்தை அடக்கினார். வாமன உருக்கொண்ட திருமால் மதம்பிடித்து உலகை அழிக்க முற்பட்ட பொழுது, சிவபெருமான் பைரவக் கோலம் கொண்டு திரிவிக்ரமனை உரித்துத் தோலைப் போர்த்துக்கொண்டார். ஆகவே தோலை, இவர் சட்டையாகப் போர்த்துக்கொண்டதால் சட்டைநாதர் என்ற பெயர் ஏற்பட்டது. திரிவிக்ரமனது முதுகெலும்பையே சிவபெருமான் வீணாதண்டமாகக் கொண்டு வீணாதரமூர்த்தியாக விளங்குகிறார் என்பர். சீர்காழியில் ஸ்ரீ சட்டைநாதருக்குத் தனிக் கருவறை உண்டு. இங்குள்ள ஸ்ரீ சட்டைநாதருக்குப் புனுகுச்சட்டம் வழிபாட்டின் போது பூசப்பெறுகிறது. சட்டம் பூசப்பெற்றவர் சட்டநாதர் என்று மருவி அழைக்கப்பட்டார். பைரவர் கரிய சட்டை அணிந்திருப்பவர் என்பதால் புனுகுச்சட்டம் பூசப்பெறுகிறது என்பர். சட்டைநாதர் திருவுருவம் கடுசர்க்கரைப்படிமம் என்ற வகையைச் சார்ந்தது. கடுசர்க்கரைப் படிமத்திற்குப் புனுகு சார்த்துவதால், அப்படியும் வலுப்பெறும் என்பது சிற்ப சாஸ்திரம். ஆகவேதான் புனுகு இத்திருமேனிக்குப் பூசப்படுகிறது.

திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்து உலகை அழித்தபோது சிவபெருமான் பைரவக்கோலம் கொண்டு நரசிம்மத்தின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார். ஆகவே சட்டைநாதர் என்ற பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர். தஞ்சை மாவட்டத்துப் பழைய கோயில்களில் சோழர்காலச் சிற்பங்களாக ஸ்ரீ சட்டைநாதர் படிமங்கள் காணப்படுகின்றன.

உலகத்தின் ஊழிக்காலத்தில் உலகம் பிரளயத்தால் அழிந்தபோது சிவபெருமான் தோணியப்பர் என்ற நாமம் தாங்கி உலகத்தைக் காத்தருளினார். தோணியப்பரின் வடிவமே ஆபதுத்தாரணர் என்ற பெயரில் வழிபடப்படுகிறது. உயிர்களின் ஆபத்துக்காலத்தில் வந்துநின்று காத்தருள் செய்யும் வடிவம் ஆபதுத்தாரணர் என்பர். தஞ்சை மாவட்டத்துச் சீர்காழியில் ஆபதுத்தாரணருக்குத் தனிக்கருவறை உள்ளது. திருத்தோணிபுரம் என்ற பெயரும் சீர்காழிக்கு வழங்கிவருகிறது.

தருமையாதீனம் பத்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள் சீர்காழியில் உள்ள ஆபதுத்தாரணர் (பைரவர்) பெயரில் முப்பது பாடல்களை ஆபதுத்தாரணர் மாலையாகப் பாடிச் சூட்டினார்.

"கலையாரு முத்தமிழ்க் கல்வியும் யோகமும் காசினியில்
நிலையாகிய பெருஞ் செல்வமும் நீதியு நீ யருள்வாய்
மலையாசன வடுகேச கங்காள வயிரவனே
தலைமாலை சூழ்புயனே காழியாபதுத்தாரணனே"

என்பது சீர்காழி ஆபதுத்தாரணராகிய பைரவரைக் குறிக்கும் பாடல் (பின்னிணைப்புக் காண்க)

"துங்க மாமணித் தூணில் வந்து
இரணியன் தோள்வலிவுதனை வாங்கும்
சிங்கஏற்று உரி அரைத்து அசைத்து
உலகுஎல்லாம் தேர்ந்துஅளந்து அவன்மேனி
அங்கம் யாவும், ஓர் கதையதாய்க்
கொண்டு அதன் அங்கியாய்ப் புனைகாழி
சங்கவார் குழைச் சட்டநாயகன்
துணைத் தாமரைச் சரண் போற்றி"

என்று சீர்காழிப்புராணம் சட்டைநாதர் வாழ்த்தைக் கூறுகிறது.

க்ஷேத்திரபாலர்

க்ஷேத்திரம்-பூமி, பாலகர்-காப்பவர், க்ஷேத்திரமாகிய உலகத்திற்கு ஊழிக்காலத்தில் நேர்ந்த துயரத்தை நீக்கிக் காத்தருளினமையால் சிவபெருமானுக்கு க்ஷேத்திரபாலகமூர்த்தி என்னும் பெயர் விளங்குவதாயிற்று என்று ஒரு புராண வரலாறு கூறுகிறது. இலிங்கபுராணம் க்ஷேத்திரபாலர் வரலாற்றை வேறுவிதமாகக் கூறுகிறது. பெண்ணினால் மட்டும் கொல்லக்கூடிய அசுரன் தானாகாசுரன் என்பவன். அவனால் துன்புறுத்தப்பட்ட பிரம்மா முதலிய தேவர்கள் துன்பம் நீங்கச் சிவனை வேண்டினர். சிவன் தனது கூறாகக் (அம்சமாக) காளியைத் தோற்றுவித்தான். காளி தானாகாசுரனைக் கொன்றாள். பிறகு அவளுடைய கோபத்தீயினால் எல்லா உலகமும் வருந்தியது. சிவன் மாயையாய் பால உருக்கொண்டு அக்காளியினுடைய கோபத்தீயைப் பருகுவதற்கு இடுகாட்டில் குழந்தையாய்க் கிடந்து அழுதார். அழும் அக்குழந்தையைக் காளி கண்டு கையிலேந்தி மார்புடன் அணைத்துப் பால் கொடுத்தாள். பாலுடன் அவளுடைய கோபத்தீயையும் குழந்தை பருகிவிட்டது. அவ்வாறு பருகியதால் காளியின் கோபம் தணிந்தது. உலகம் அழிவிலிருந்து

காக்கப்பட்டது அவர்தான் க்ஷேத்திரபாலர் என்றும், சிவனுடைய மூர்த்தங்களில் ஒன்றென்றும் இலிங்கபுராணம் கூறுகிறது.[5]

> " விரிதிசை புரப்பானெட்டு வியன்கணத் தலைவர்க்கேவிக்
> கிரியுரை தண்டமேந்திக் கேந்திர பாலனாகிப்
> புரிசடை முதல்வன் சூழ்ந்து புறந்தருள் தோணி மேற்கொண்
> டரிபடா துலகங் காக்கு மன்னையோ டிருந்தா னெந்தை"

என்று சீர்காழித் தலபுராணம் க்ஷேத்திரபாலரின் கோலத்தை விளக்குகிறது. க்ஷேத்திரமாகிய திருக்கோயில், புண்ணியநதிகள், தூயதவச்சாலை இவையெல்லாம் பைரவரின் காவலுக்கு உட்பட்டவை. ஆலயத்திலும், ஊரின் எல்லைகளிலும் காவல்தெய்வமாக விளங்குவதாகவும் கூறப்படுகிறது. புனிதத்தலமாகக் கருதப்படும் காசியைக் காக்கும் காவல் நாயகம் க்ஷேத்ரபாலராகிய காலபைரவமூர்த்தி என்று கூறுவர். ஆகவேதான் க்ஷேத்ரபாலராகிய பைரவருக்கு நாய் வாகனமாக அமைந்தது. ஆனால் புராணங்கள், சிவன் பைரவக்கோலம் கொண்டபொழுது வேதங்கள் நாய் வடிவம்கொண்டு வாகனமாய் அமைந்தன என்று கூறுகின்றன. நிர்வாண ரூபத்தையும் மூன்று கண்களையும் சர்ப்ப ஆபரணத்தையும் குண்டலங்களையும் சிரசிலே மாலையையும் கோரப்பல், சூலம், கபாலம், உடுக்கை, கட்கம் ஆகியவற்றை உடையவராகவும் நாய் வாகனத்தின்மீது அமர்ந்திருக்கும் பைரவரை (க்ஷேத்திரபாலரை) வணங்குகிறேன் என்பது பைரவ பூஜையின் தியானமந்திரம் (பின்னிணைப்பு காண்க). க்ஷேத்திரபாலரின் மறுபெயர்களாகக் கஞ்சுக, காரி, முக, நிர்வாணி, சித்தா, கபாலி, வடுகர், பைரவர் என்பனவற்றை பிங்கல நிகண்டு கூறுகிறது. க்ஷேத்திரபாலர் எனப்படும் பைரவர் அறுபத்து நான்கு யோகினிகளுக்கும் தலைவர் என்று கூறப்படுகிறது.

வடுகநாதர்

துந்துபி என்னும் அசுரனின் புதல்வன் முண்டாசுரனென்பான். தம் தவவலிமையால் பெறற்கரிய வரம்பெற்று, தேவர்கள், கடவுளர்கள் யாவரையும் துன்புறுத்தினான். தேவர்கள் இறைவனிடம் முறையிட்டார்கள். இறைவன் வடுகமூர்த்தி வடிவம் கொண்டு அசுரனை அழித்தார் என்பது புராண வரலாறு. பைரவர் வடிவங்களில் மிக அமைதியான வழிபாட்டிற்கேற்ற வடிவம் வடுகநாதர். வடுகநாதர் என்பவர் இளமையும் கருணையும் அழகும்மிக்க சாந்தசொரூபம் என்பர். வடு என்ற சொல் பிஞ்சு, இளமை என்ற பொருள்களை உணர்த்துவது இங்கு எண்ணத்தக்கது. இவர் கைகளில் அட்சமாலை, கமண்டலம் கொண்டவர்.

---

5. The History of Chidambaram Sri Nataraja's Temple, pp. 54-55.

வடஇந்தியப் பகுதிகளில் வடுகநாதர் 'Batuga' என்ற பெயரில் இளமைக்கோலத்தில் காணப்படுகிறார் (நிழற்படம் காண்க). அறிஞர் டி.ஏ. கோபிநாதராவ் வடுகநாதரை எண்கரம் கொண்ட உக்கிர வடிவமாகக் கூறுகிறார். தஞ்சை, மதுரை, காஞ்சிக் கோயில்களில் வடுகநாதரின் சிற்பத் திருமேனிகள் சாந்தசொரூப வடிவில் உள்ளன.

சிவபெருமானின் அழிக்கும் ஆற்றலை, உயிர்களைக் காக்கும் ஆற்றலைப் பைரவ மூர்த்தமாகச் சைவசமயம் கூறுகிறது. பிறசமயக் கடவுளர்களைக் காட்டிலும் சிவன் தலைமைத் தன்மையும் தன்னிகரற்ற ஆற்றலும் உடையவன் என்பதைக் காட்டவே புராணங்கள் பைரவரைப் பல வடிவங்களில் கூறியுள்ளன. இந்தியநாடு முழுவதும் பரவியிருக்கும் வைரவர் வழிபாடு மக்களின் மனநிலைக்கேற்ப, கலையுணர்வுகட்கு ஏற்ப உருவங்களைப் பெற்றுள்ளன. இவ்வழிபாடுகள் பரவிநிற்கும் சூழ்நிலைக்கேற்ப, சமய உணர்க்கு ஏற்பக் கதைகளைப் பெற்றுள்ளன. சைவசமயம் மட்டுமல்லாமல், சமணம், பௌத்தம் ஆகிய புறப்புறச் சமயங்களிலும் பைரவர் வடிவங்கள் உள்ளன. இவ்வடிவங்களில் கலைநாட்டமும் தத்துவ உணர்வும் உள்ளடக்கம் பெற்றிருப்பது சமயங்களின் அறிவு நுட்பத்தைக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

பைரவர் வடிவங்கள்

சிவபெருமானின் ஆற்றலுக்கு வடிவம் கொடுத்த சைவசமயம் சிவனுக்கு அறுபத்து நான்கு வடிவங்களைக் கூறியது. அவற்றை அஷ்டாஷ்ட வடிவங்கள் (8 x 8 = 64) என்று கூறுவர். கலைகள் அறுபத்து நான்கு என்று கூறியவர்கள் கலை முதல்வனான இறைவனையும் அறுபத்து நான்கு வடிவங்களில் வைத்துக் கூறியுள்ளனர் (பின்னிணைப்புக் காண்க). அவற்றில் இருபத்தைந்து வடிவங்களை மஹேசுவர வடிவங்கள் (சிறப்புயர் வடிவங்கள்) என்பர். பைரவரும் அவ்வகை வடிவங்களும் ஒன்றாக வைத்து எண்ணப்படுகிறது.[1]

இறைவனுக்கு (சிவபெருமானுக்கு) ஐந்துமுகங்கள் ஐந்து திசைகளை நோக்கியவண்ணம் அமைந்தவை.

1. ஈசானம்	- மேல்நோக்கியது	- சதாசிவம்	- ஆகாயம்
2. தத்புருஷம்	- கிழக்குநோக்கியது	- மகாதேவர்	- காற்று
3. அகோரம்	- தெற்குநோக்கியது	- பைரவர்	- நெருப்பு
4. வாமதேவம்	- வடக்குநோக்கியது	- உமாவக்தர்	- நீர்
5. சத்தியோஜாதம்	- மேற்குநோக்கியது	- நந்திவக்தர்	- மண்

இறைவனின் வடிவம் மண்ணிலிருந்து தொடங்கி ஆகாயம் வரை பரவியிருக்கிறது என்பதைச் சர்வவியாபி என்று கூறுவார்கள். அதைதான் மேற்கண்ட வரிசை எடுத்தியம்பக் காண்கிறோம். பின்னர் இந்த ஐந்துமுகக் கோட்பாடு முருகன் வழிபாட்டில் ஆறுமுகக் கோட்பாடாக வளர்ந்து வந்துள்ளது. இறைவனின் முகம் ஐந்தும் இறைவியின் முகம் ஒன்றும் (அதோமுகம் - கீழ்நோக்கியது - இறைவி) ஆக ஆறுமுகப்பெருமான் அவதாரமாகச் சொல்லப்பட்டது.

சிவபெருமானின் மூன்று கண்களாக இயற்கையின் ஒளிச் சக்திகள் ஞாயிறு, திங்கள், நெருப்பு என்ற மூன்றும் கூறப்பட்டுள்ளன. இறைவனின் ஐந்து முகங்களுக்குக் கூறப்பட்ட பத்துக் கைகள் எட்டுத் திசைகளையும் மேல், கீழ் இரண்டுமாகப் பத்தாகக் கூறப்பட்டுள்ளன. பைரவர் வடிவத்தில் ஒரு கையில் கமண்டலமும் மற்றொரு கையில் அட்சமாலையும் கூறப்பட்டுள்ளது. உயிர்களின் ஒடுக்கத்திற்குக் கமண்டலத்தையும் உயிரணுக்களின் தோற்றம், பெருக்கத்திற்கு அட்சமாலையையும் கூறுவர்.[1] அட்சமாலை என்பது உருத்திராக்கம் எனக்

1. Development of Hindu Iconography - p. 573.

கூறப்படும் வித்துக்களால் ஆகிய மாலை. உருத்திராட்சம் என்ற தொடர் உருத்திரனின் கண்கள் என்ற பொருள் தருவது. திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளான சிவபெருமான் கண்களில் இருந்து விழுந்த கண்ணீர்த்துளிகள் முளைத்து மரமாயின. அம்மரங்களில் விளைந்த பழங்களின் விதையே உருத்திராட்சம் ஆகும். மருத்துவப்பயனும் மின்னாற்றலும் உடைய உருத்திராட்சம் ஒருமுகம்,. இருமுகம் எனப் பன்முகங்கள் கொண்டதாக அமைந்துள்ளது. அவற்றில் 9 முக உருத்திராக்கம் பைரவரின் வடிவம் என்பர். இவ்வுருத்திராக்கப்பலன் பிரம்மஹத்தி, பிராணஹத்தி முதலியவற்றைப் போக்கும் இயல்பு என்று கூறப்பட்டுள்ளது. உடற்சுத்தம், உயிர்ச்சுத்தம் பெறுவதற்கு இவ்வழிபாடு கூறப்பட்டுள்ளது.

இறைவனைப் பல வடிவங்களில் கூறுவதுபோல பைரவரையும் பல வடிவங்களில் கூறும் மரபு உள்ளது. இறைவன் எண்திசை வடிவானவன். எண்பெரும் வீரச்செயல்களைப் புரிந்தான் என்று கூறுவார்கள். ஆகவே, காவல் தெய்வமான பைரவரும் எட்டு வடிவம் தாங்கிஉள்ளார். அதை அஷ்டபைரவர் என்று கூறுவர். பைரவர் தமது கூறாக (அம்சம்) எட்டு பைரவர்களாகப் படைத்தார் என்று தந்திரசாரா என்ற நூல் கூறுகிறது. அவை:

1. சிதாங்க பைரவர்
2. ருரு பைரவர்
3. சண்ட பைரவர்
4. குரோத பைரவர்
5. உன்மத்த பைரவர்
6. காபால பைரவர்
7. பீடண பைரவர்
8. சங்கார பைரவர்

'பீ' என்றால் அச்சம், ரவம் என்றால் ஆரவாரம், பேரொளி அவற்றை எழுப்பி, அவற்றை அடக்கியவர் என்பதால் பீரவம் என்ற பெயர் ஏற்பட்டு அது பைரவர் என்று மாறித் தமிழ்நாட்டில் வைரவர்; வயிரவர் என்ற பெயர்களில் வழங்கப்படுகிறது.

'சிவ பராக்கியம்' என்னும் நூல் அஷ்டபைரவர் என்னும் எட்டு பைரவர்களைக் கூறுகிறது. அதில் சிற்சில மாற்றம் உள்ளது. அவை:

1. கால பைரவர்
2. கல்பாந்த பைரவர்
3. க்ரோதந பைரவர்
4. காபால பைரவர்
5. ஸம்ஹார பைரவர்
6. உந்மத்த பைரவர்
7. சண்ட பைரவர்
8. உக்ர பைரவர்

இவ்வெட்டு பைரவர்களும் எட்டெட்டுப் பைரவர்களாகப் பிரிந்து (8 X 8 = 64) அறுபத்து நான்கு பைரவ வடிவங்களைத் தாங்கியுள்ளனர். (பின்னிணைப்பு, நிழற்படம் காண்க).

வாமனபுராணம் வேறு எட்டுப் பைரவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. சிவனுக்கும் அந்தகாசுரனுக்கும் நடந்த போரில் சிவனின் தலையிலிருந்து பெருக்கெடுத்து இரத்தம் எட்டு வடிவங்களைத் தாங்கியது. அவ்வெட்டும் எட்டுப் பைரவ வடிவங்கள் ஆயின.[2] அவை:

1. வித்யராஜா	5. ஸ்வச்சந்தராஜா
2. காலராஜா	6. லலிதராஜா
3. காமராஜா	7. விக்னராஜா
4. சோமராஜா	8. சிவா

அஷ்ட பைரவர்களும் எனப்படும் எட்டுப் பைரவர்களுக்கும் எட்டுத் தேவியரை (சக்தி) வைத்துக் கூறியுள்ளனர். அவை அஷ்டசக்தி எனப்படுகிறது. தமிழ்நாட்டில் இருந்த பழமையான வழிபாடுகளில் ஒன்று கன்னிப் பெண்டிர் வழிபாடு. அதை Virgin mother Goddess என்று ஆங்கிலத்தில் கூறுவர். ஏழு கன்னிப் பெண்களைக் கன்னிமார்கள், கன்னிமாப்பெண்டுகள், கன்னித்தெய்வங்கள் என்ற பெயரில் இன்றும் நாட்டுப்புறங்களில் வழிபடக் காண்கிறோம். சிலப்பதிகாரம் இக்கன்னித் தெய்வத்தை 'அறுவர்க்கிளைய நங்கை' என்ற பெயரில் குறிப்பிடுகிறது. பின்னர் வடமொழி மரபுக்கு ஏற்ப இவ்வேழு கன்னித் தெய்வங்களும் 'சப்தமாதர்கள்' என்ற வழிபாடாக மாறியது. இங்குக் கன்னித்தன்மை கருத்தில் கொள்ளப்படவில்லை. சமயத்தொடர்பான ஏழு ஆண் தெய்வங்களுக்கான ஏழு பெண் தெய்வங்களாகக் கூறப்பட்டன. அவை: 1. கௌமாரி, 2) வைஷ்ணவி, 3) வராஹி, 4) பிராம்மி, 5) சாமுண்டா, 6) மகேஸ்வரி, 7) இந்திராணி என்பவையாகும். இவ்வழிபாடு தமிழ்நாட்டில் எல்லாக் கோயில்களிலும் பிற்காலத்தில் புகுத்தப்பட்டது. ஆனால் வடநாட்டுத் தொடர்பான இவ்வழிபாடு அவ்வளவு பெருவழக்குப் பெறவில்லை.

பைரவர் வழிபாட்டிலும் எட்டுப் பைரவர்களுக்குரிய எட்டுத் தேவியரைக் குறிக்கும்பொழுது, இவ்வேழு பெண் தெய்வங்களான சப்த மாதர்களையும் மகாலட்சுமி என்ற பெண் தெய்வத்தையும் சேர்த்து அஷ்டசக்திகளாகக் கூறியுள்ளனர்.

2. Encyclopedia of Puranic Belief and Practices - Vol. I

விஷ்ணுதர்மோத்தரம் என்ற நூலில் பைரவர் வடிவங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. பைரவர் ஒட்டிய வயிறும், உருண்டையான மஞ்சள் வண்ணக் கண்களும், இரு கோரைப் பற்களும், உயர்ந்த நாசியும் உள்ளவர். மண்டையோட்டு மாலையையும், பாம்புகளையும் அணிகலன்களாகக் கொண்டவர். கரிய நிறம், யானைத்தோலைப் போர்த்தியது போன்ற வண்ணம் உடையவர் என்று கூறப்பட்டுள்ளது. பைரவர்களில் 'மஹாபைரவர்' என்பவர் எட்டுக் கரங்களை உடையவராகக் காணப்படுகிறார். பைரவர், க்ஷேத்திரபாலரின் வடிவங்களை உத்ரகர்ணா, பூர்வகர்ணா, தீபதா, அம்சுமதபேதா, சுப்ரபேதா, சில்பரத்னா முதலிய நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.[3]

பைரவரின் கரங்களைப் பற்றிக் கூறும்பொழுது, இருகரங்கள் கொண்ட பைரவ வடிவங்கள் வலக்கரத்தில் சூலத்தையும், இடக்கரத்தில் கபாலத்தையும் கொண்டவையாய் அமைந்துள்ளன என்பர். நான்கு கரங்கள் கொண்ட பைரவ வடிவங்கள் சூலம், கபாலம், பாசம், தமருகம் கொண்டவையாகவும், வலக்கரங்கள் இரண்டும் வரதம், சூலம் என்ற முறையிலும், இடக்கரங்கள் இரண்டும் தமருகம் (அல்லது) அபயம், கபாலம் (அல்லது) கண்டி என்ற முறையிலும் அமைந்துள்ளன. ஆறுகரங்கள் கொண்ட பைரவ வடிவங்கள் வலக்கரங்கள் சூலம், கட்கம் (கட்டுவாங்கம் பின்னிணைப்புக் காண்க). கண்டி என்ற முறையிலும், இடக்கரங்கள் கேடகம், கபாலம், நாகபாசம் என்ற முறையிலும் அமைந்துள்ளன. எட்டுக்கரங்கள் கொண்ட பைரவ வடிவங்கள் அஷ்டபுஜ பைரவர் என்று அழைக்கப்படுகிறது. திருவண்ணாமலையில் இவ்வழகிய உருவம் காணப்படுகிறது. (நிழற்படம் காண்க) வலக்கரங்கள் நான்கும் சூலம், நாகபாசம், கட்டுவாங்கம், அபயம் என்ற முறையிலும், இடக்கரங்கள் நான்கும் கபாலம், கண்டி, அக்னி, தண்டம் என்ற முறையிலும் அமைந்துள்ளன. சில இடங்களில் வலக்கரங்கள் நான்கும் சூலம், கட்கம், கண்டி, தண்டம் என்ற முறையிலும் அமைந்துள்ளன. சில இடங்களில் வலக்கரங்கள் நான்கும் சூலம், கட்கம், கண்டி, தனுசு என்ற முறையிலும் இடக்கரங்கள் நான்கும் கேடகம், காபாலம், நாகபாசம், பாணம் என்ற முறையிலும் அமைந்துள்ளன. சில இடங்களில் வில், அம்பு அமைந்தும் காணப்படுகிறது. அம்சுமதபேதா என்ற நூலும் சில்பரத்தினம் என்ற நூலும் பைரவ வடிவங்களை மூன்று நிலைகளில் கூறுகின்றன.

1. சாத்வீக வடிவம் - நாற்கரம் கொண்டவை
2. இராக்ஷஸ வடிவம் - அறுகரம் கொண்டவை
3. தாமஸ வடிவம் - எண்கரம் கொண்டவை

பைரவரின் ஒவ்வொரு வடிவத்திற்கும் ஏற்றவாறு வண்ணமும், அணிகலன்களும் மாறுபட்டுள்ளன. சில வடிவங்கள் நாயை வாகனமாகக்

3. Arts Asiatiques, Extrait - Bhairava, pp. 23-44

கொண்டுள்ளன. நாய் வாகனமற்ற நிலையில் சில வடிவங்கள் உள்ளன. அஷ்டபைரவர் வடிவங்களில் யானை, குதிரை, எருது, அன்னம், கழுகு, மயில், நாய் ஆகியவை வாகனங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

அறிஞர் டி.ஏ. கோபிநாதராவ் அவர்கள் காட்டும் வடுக பைரவமூர்த்தம் எண்கரங்களைக் கொண்டதாய் அமைந்துள்ளது. எண்கரங்கள் கட்டுவாங்கம், பாசம், சூலம், தமருகம், அமிருத காபாலம், பாம்பு, அபயம் என்ற நிலையில் உள்ளன. எட்டாவது கரம் துண்டிக்கப்பட்ட தலையையோ, தசைத்துண்டுகளையோ தாங்கிய நிலையில் உள்ளது. செஞ்சடை, செம்மேனி என்ற வண்ணத்தில் அமைந்துள்ளது. நாய் வாகனமாய் உள்ளது. அவர் காட்டும் மற்ற நான்கு வடுக பைரவ மூர்த்தங்கள் எண்கரங்கள் என்ற அமைப்பில் இல்லை. 'ரூபமந்திரம்' என்ற நூல் குறிப்பிடும் வடுக பைரவர் எண்கரம் கொண்டவராக உள்ளார். இதைத்தான் அறிஞர் டி.ஏ. கோபிநாதராவ் எடுத்துக்காட்டியுள்ளார். தஞ்சை மாவட்டம் பட்டீசுவரத்தில் உள்ள வடுக பைரவர் சூலம், தமருகம், பாசம், காபாலம் தாங்கியவராய் நிர்வாணக் கோலத்தில் அமைந்துள்ளார். இரு கோரைப் பற்கள் கொண்டவராய், கடிசூத்திரம் என்னும் பூணூலாகப் பாம்பை அணிந்துள்ளார். இவ்வடிவம் பிற்காலச் சோழர் மரபைப் பின்பற்றிச் சோழர்காலச் சிற்பமாக அமைந்துள்ளது. கல்கத்தாவிலுள்ள இந்தியப் பொருட்காட்சியகத்தில் இரு பைரவ வடிவங்கள் உள்ளன. அவை சாளுக்கியரின் கலைமரபை ஒத்துள்ளன. அஞ்சத்தக்க வடிவமும், கைகளில் குறுவாளும் உடையனவாய்க் காணப்படுகின்றன. பீடத்தில் 'தேள்' வடிவம் காணப்படுகிறது. இவ்வடிவங்களைத் தென்னாட்டுச் சிற்பக்கலை மரபில் காணமுடியவில்லை.[4]

சில்பசாரா என்ற நூல் கோவிந்த பைரவர் என்ற ஒரு வடிவத்தைக் கூறுகிறது. நான்கு கரங்களைக் கொண்ட இவ்வடிவம் சங்கு, சக்கரம், அமிர்தகபாலம், அட்சமாலை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. வைணவ மரபையொட்டி இவ்வடிவம் அமைந்துள்ளது எனலாம். இவ்வடிவத்தில் இறைவியாக வைஷ்ணவியையும் வாகனமாகக் கருடனையும் காணமுடிகிறது.[5] பௌத்த சமயக் கதைகளிலும் பைரவ வடிவங்களைக் காணமுடிகிறது. 'சம்பாரா பைரவர்' புலித்தோல் ஆடை அணிந்தவராய் இரண்டு கரங்களைக் கொண்டவராய் அமைந்துள்ளார். பன்னிரண்டு கரங்களைக் கொண்ட வடிவமும் உள்ளது. இவ்விறைவனின் சக்தியாக (இறைவியாக) 'வஜ்ர வராஹி' கூறப்படுகிறாள். பைரவர் காவல் தெய்வம் என்ற கருத்து, பௌத்த சமயத்திலும் நிலவுகிறது. உலகத்தின்

---

4. Elements of Hindu Iconography - Vol. II, Part. I, pp. 176 - 178.
5. Encyclopedia of Indian Culture, Vol. I, pp. 198 - 199.

நான்கு திசைகளிலும் நான்கு தெய்வங்கள் காவலாக நிறுத்தப்பட்டனர். அவர்களுக்குச் சதுர்மகாராஜிகர் என்பது பொதுப்பெயர். உலகத்தில் மனிதர் செய்கிற நன்மை, தீமைகளை அறிந்து, அவற்றை அவ்வப்போது இந்திரனுக்குத் தெரிவிக்கவேண்டியது இவர்கள் கடமை. இவர்களைத் திசைக்காவலராக நியமித்தவன் இந்திரன்.

	பெயர்	திசை	அரச நிலை
1.	திருதராட்டிரன்	கிழக்கு	கந்தர்வர்
2.	விருதாட்சன்	தெற்கு	கும்பாண்டர்
3.	விருளாட்சன்	மேற்கு	இயக்கர்
4.	வைசிரவணன்	வடக்கு	நாகர்

இந்த நான்கு தெய்வங்களும் சக்கனுக்கு (இந்திரனுக்கு) அடக்கமானவர் என்பது பௌத்தர்களின் நம்பிக்கை.[6]

சமண சமயத்தில் க்ஷேத்ரபாலர் என்ற பைரவர் வடிவம் இரண்டு வடிவங்களில் காணப்படுகிறது. ஒன்று இருபது கரங்களைக் கொண்டதாய், கரங்களில் ஆயுதங்கள் தாங்கியதாய், பாம்பை மார்புப் பூணூலாக அணிந்ததாய், நாய் வாகனத்தை உடையதாய் உள்ளது. அறுபத்துநான்கு யோகினிகளுக்கும் தலைமை ஏற்றதாய் அமைந்துள்ளது. மற்றொன்று ஆறு கரங்களைக் கொண்டதாய் அமைந்துள்ளது. சமண புராண மரபுப்படி க்ஷேத்ரபாலர் நாய் வாகனத்துடன் இருந்து க்ஷேத்ரங்களைக் காப்பதற்காக அமைந்த காவல் தெய்வம்.

சைவ சமயத்தில் க்ஷேத்ரபாலர் என்பதும் காவல்தெய்வம். சமண சமயம் மீன்பிடித்தல், வேட்டையாடுதல் போன்ற உயிர்க்கொலை செய்யும் தொழில்களை வெறுத்தது. பயிர்த்தொழிலை மிகச்சிறந்த தொழில் என்று போற்றியது. பயிர்த்தொழில் போனற் தொழில்களைப் பிராமணசமயம் எனப்படும் வைதீக சமயம் இழிவான தொழில் என்று தாழ்வுபடுத்தியது. பயிர்த்தொழில் செய்யும் வேளாளரும், வாணிபம் செய்யும் வணிகரும், ஏனைய தொழிலாளரும், சமண சமயத்தை ஏற்றுக் கொண்டனர். தொழில் இடங்களை, வாழ்விடங்களைக் காக்கும் தெய்வமாகச் சமணசமயத்தில் 'க்ஷேத்திரபாலர்' வழிபாடு ஏற்பட்டது. க்ஷேத்திரம் என்பது நிலம். பின்னர் இச்சொல் தலம், கோயில், நதிகள், தவச்சாலை என்ற பொருளில் மாறி வழங்கப்பட்டது. மக்களைக் காப்பதற்காகத் தோன்றிய காவல் தெய்வம், வைதீக சமயத்தில் அசுரர்களிடமிருந்தும், அரக்கர்களிடமிருந்தும் முனிவர்களைக் காப்பதற்காகவும், கோயில், நதிகள், தவச்சாலை ஆகியவற்றைக் காப்பதற்காகவும் உரிய தெய்வமாக மாற்றம் அடைந்திருக்க வேண்டும்.

---

6. பௌத்தமும் தமிழும் - ப. 194.

சைவசமயம் க்ஷேத்ரபாலர் வடிவங்களை விரிவாகக் கூறுகிறது. ஊரின் வடகிழக்கு மூலையில் க்ஷேத்ரபாலர் கோயில் அமையவேண்டும். இக்கோயில் கருவறை மேற்குமுகமாக நோக்கியிருப்பது உத்தமமானது. தெற்கு நோக்கியிருப்பது மத்தியமானது. கிழக்கு நோக்கியிருப்பது அதமமானது என்று கூறப்பட்டுள்ளது. நிர்வாணக்கோலமாய் நின்ற நிலையில் முக்கண்களோடு, இரண்டு, நான்கு, ஆறு, எட்டு என்ற வகையில் கரங்களோடு அமைந்திருக்கும். பைரவர் வடிவத்தில் கரங்களில் காணப்படும் ஆயுதங்களே இங்கும் காணப்படுகின்றன. க்ஷேத்ரபாலரும் சாத்வீகமூர்த்தி, இராஷ்ஸ மூர்த்தி, தாமஸமூர்த்தி என்ற மூன்று வகையாக வகைப்படுத்திப் பார்க்கப்பட்டுள்ளது. இவை அம்சுமதபேதாகமம் கூறும் கருத்துக்கள்.

சுப்ரபேத ஆகமமும், காரணாகமும் சிற்சில மாற்றங்களுடன் க்ஷேத்ரபாலரின் வடிவத்தைக் கூறுகின்றன. க்ஷேத்ரபாலர் நாகயக்ஞோபவீதம் என்னும் பாம்புப் பூணூல் அணிந்திருப்பார், மண்டையோட்டு மாலைகளை அணிந்திருப்பார் என்று கூறுகின்றன. அகோரசிவாச்சாரியார் தம்முடைய விக்னேஸ்வர பிரதிஷ்டாவிதி என்னும் நூலில் க்ஷேத்ரபாலருக்கான தியான சுலோகங்களைக் குறிப்பிட்டுள்ளார். நாய் க்ஷேத்திரபாலரின் வாகனமாக அச்சுலோகம் குறிப்பிடுகிறது. க்ஷேத்ரபாலரின் வடிவ விளக்கங்களைக் காணும்பொழுது, க்ஷேத்ரபாலர் பைரவரின் வேறான வடிவம் அல்ல என்பது தெரியவருகிறது. ஆகமங்கள் பைரவரையும் க்ஷேத்ரபாலரையும் தனித்தனி வடிவங்களாகக் காட்டியுள்ளன.[7] சமண சமயத்தின் செல்வாக்கால் வைதிகசமயம் ஏற்றுக் கொண்ட வடிவம் க்ஷேத்ரபாலர் என்று எண்ணத்தோன்றுகிறது. தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகில் க்ஷேத்திரபாலர் பெயரில் ஓர் ஊர் க்ஷேத்திரபாலபுரம் என்று வழங்குகிறது.

க்ஷேத்ரபாலரின் வடிவத்தில் நாய் இருப்பதுபோல் பைரவ வடிவத்தில் பல இடங்களில் நாய் வாகனம் இல்லாமல் இருப்பதும் காணமுடிகிறது. பேரூர், வேதாரண்யம் ஆகிய இடங்களில் உள்ள பைரவருக்கு நாய் வாகனம் இல்லை. சில இடங்களில் இரண்டு நாய்கள் உள்ளன (சாக்கோட்டை). பைரவ வடிவத்தில் சில மாறுபட்ட வடிவமைப்பு உடையனவாய் உள்ளன. விருத்தாசலத்தில் உள்ள பைரவர் வடிவம் பத்துக்கரங்களைக் கொண்டதாய் உள்ளது. தஞ்சாவூர், நகரச் சிவன் கோயில்களில் ஒன்றான வயிரவன்கோயில் ஆகிய ஊர்களில் பைரவரின் செப்புத் திருமேனிகள் உள்ளன. தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள தாராசுரம் என்ற ஊரிலும், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் என்ற ஊரிலும் பைரவர் அமர்ந்த கோலவடிவங்கள் உள்ளன. ஆந்திரமாநிலத்தில் பனகல் பச்சல

---

7. Elements of Hindu Iconography - Vol. II - Part - II, pp. 495 - 498.

சோமேசுவரர் கோயிலில் உள்ள தெலுங்குச் சோழர் காலபைரவர் நடராசரைப்போல் நடனமாடும் அமைப்பில் உள்ளது. இவ்வகை வடிவங்கள் மிக அரிய வடிவங்களாகக் கருதப்படுகின்றன. திருவாரூர் பைரவர் கையில் கட்டுவாங்கம் என்னும் கருவியைக் கொண்டுள்ளார். நகரச் சிவன் கோயில்களில் ஒன்றான சூரக்குடி கோயிலில் கையில் கதாயுதம் தாங்கிய நிலையில் பைரவர் வடிவம் உள்ளது.

சிருங்கேரியில் உள்ள பைரவர் மூன்று கால்களையுடையவராகக் காட்டப்பட்டுள்ளது. இது ஒரு அற்புத வடிவம் என்றே கூறவேண்டும். திருவண்ணாமலைக் கோயிலில் சுவர்ச் சிற்பங்களாக அஷ்டபைரவரின் எட்டு வடிவங்களும் காட்டப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டம் திருக்குற்றாலத்தில் அஷ்டபைரவரின் எட்டு ஆலயங்கள் காணப்படுகின்றன. தஞ்சை மாவட்டம் சீர்காழியில் அஷ்ட பைரவரின் எட்டு உருவங்களும், சட்டைநாதர், ஆபதுத்தாரணர் வடிவங்களும், வழிபாட்டில் உள்ளன. தென்னார்க்காடு மாவட்டம் நெல்லிக்குப்பத்திற்கு அருகில் திருக்கண்டேச்சுரம் என்னும் கோயில் உள்ளது. இக்கோயில் கல்வெட்டில், இவ்வூர் இறைவன், 'சீரார் வழுவூர்ச் சிவன், திருவடுகூர் மகாதேவர்' என்று குறிக்கப்பட்டுள்ளார். இக்கோயில் பைரவர் ஆறு கரங்களுடன் வளைந்து நிற்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூருக்கு அருகில் பெரிச்சி கோயில் என்றழைக்கப்படும் பெரிச்சியூர் உள்ளது. இங்குத் தமிழகக் கலைமரபிற்குப் புதியதான க்ஷேத்திரபாலரின் அழகிய வடிவம் உள்ளது. சாளுக்கியப் பின்னணியில் அமைந்த வடிவம் கருவறையில் நின்ற திருமேனியில் க்ஷேத்திரபாலர் வடிவம் அமைந்துள்ளது. எட்டுத் திருக்கரங்களுடன் அமைந்துள்ள இவ்வடிவம் ஒரு கையில் அறுபட்ட தலையொன்றை முடிக்கற்றையோடு பிடித்துள்ளது. மற்றொருகையில் பிணத்தைக் குத்தி ஏந்தியநிலையில் கங்காளத்தண்டு உள்ளது. இவருக்கு அருகே உள்ள நாய், இறைவனின் இரண்டாம் இடக்கையிலிருந்து தொங்கும் தலையின் தசைப்பகுதியை ஆவலோடு சுவைத்துக் கொண்டிருக்கிறது.[8] இது ஹொய்சலர்களின் பைரவச் சிற்பத்தை நமக்கு நினைவூட்டுகிறது (நிழற்படம் காண்க).

வடநாட்டு மரபில் தோன்றிய பைரவ வடிவங்கள் தமிழ்நாட்டுக் கலைமரபில் மூவகை நிலைகளாகப் பிரித்துக் காட்டப்பட்டு வடிவமும் அழகும் பெற்றுள்ளமையை பைரவத் திருமூர்த்தங்கள் காட்டுகின்றன.

---

8. இரா. கலைக்கோவன், தினமணிக்கதிர் - 16-12-1990.

பைரவர் வழிபாடு

தமிழ்நாட்டில் இன்று நாம் காணும் வழிபாடுகளைத் திராவிட வழிபாடு என்றோ, ஆரிய வழிபாடு என்றோ வரையறையிட்டுக் கூறமுடியாது. வேதங்களுக்கு முற்பட்ட இந்திய மக்களின் பண்பாட்டோடு ஒன்றி நின்ற வழிபாடு, வேதங்கள் காட்டிய வழிபாடு, உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், ஆகமங்கள் வழியே வந்த வழிபாடு ஆகியவற்றின் கூட்டான ஒன்றே இன்றைய வழிபாடாக இருந்து வருகிறது. வேதங்களில் வழிபடு கடவுளரின் திருக்கோலங்கள் இல்லை. ஆகமங்களில் வழிபடு கடவுளரின் திருக்கோலங்களைக் காணமுடிகிறது. வேதங்களில் வேள்வி வழிபாடு, ஆகமங்களில் பூசனைகள் என்று இருவேறு வழிபாட்டு நிலைகளை நாம் காண்கிறோம். வேத காலத்தில் விக்கிரக வழிபாடு இருந்ததில்லை. சிந்துவெளி நாகரிகத்தில் பெண் தெய்வ வழிபாடு, சிவலிங்க வழிபாடு ஆகியவை இருந்துள்ளன. மக்களின் இனக் கலப்புக் கேற்ப சமுதாயத்தில் வழிபாட்டு எண்ணமும், வடிவமும், முறையும் பலவாறாகப் பெருகி வளர்ந்து வந்துள்ளன. மக்களின் கலப்புப் பண்பாட்டின் வெளிப்பாட்டை இன்றைய வழிபாட்டு நெறிகள் தாங்கியுள்ளன. இமயம் முதல் குமரி வரையுள்ள இப்பண்பாட்டின் வெளிப்பாட்டைப் பக்தி இலக்கியங்கள் நமக்கு அப்படியே காட்டுகின்றன.

சைவம், வைணவம் என்ற இரு நிலைக்குமுரிய திருமுறைகளும், திவ்வியப்பிரபந்தமும் திருக்கோயில்களை அடிப்படையாக வைத்துத் தோன்றியவை. தெய்வத் திருமேனியின் வழிபாடு, திருக்கோயில் வழிபாடுகளாகிக் கூட்டுவழிபாட்டு உணர்வுக்கு வழிவகுத்தது. தெய்வத் திருவடிவத்தைச் சிறப்பித்துக் கூறுமுகமாகத் திருக்கோயில்கள் இடம் பெற்றுள்ளன. தலங்கள் சிறப்பாகப் பேசப்பட்டன. ‘கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’, ‘கோபுரதரிசனம் கோடிப் புண்ணியம்’, ‘கோபுர தரிசனம் பாவவிமோசனம்’ என்று திருக்கோயில்களுக்கு முதன்மை கொடுக்கப்பட்டது. தலம், மூர்த்தி, தீர்த்தம் என்ற மூன்றும் சிறப்பாகப் பேசப்பட்டன. ஒருதலம் (ஊர்) சிறக்க வேண்டுமென்றால், அது நீர்வளம் மிக்குடையதாக இருக்கவேண்டும். அந்த ஊரின் வாழ்வை வளர்க்கும் நீர்வளம் புண்ணிய நதியாகத் தீர்த்தமாகப் பேசப்பட்டது. ஊரும், நீரும் சிறக்க வேண்டுமெனில் அங்குள்ள மூர்த்தி (தெய்வத் திருவுருவம்) சிறந்திருக்க வேண்டும் என்று முதலும், மூலமும், முடிவுமாக மூர்த்தியைச் சிறப்பித்துக் கூறினார்கள்.

மூர்த்தியின் சிறப்பைக் கூறும்பொழுது, பழம் பெருமைகளைக் கூறிச் சிறப்பைக் காட்டினார்கள். பௌராணிகக் கதைகள் சிறப்பிடம் பெற்றன. பாரதக் கதை நம் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பேசப்படும் உயர்கதையாக இருந்து வருகிறது. இக்கதை வடமொழிக் கதையாக இருந்தாலும், இப்பாரதக் கதையைத் தமிழில் பாடியதும், பாட வைத்ததும் சிறப்பாகக் கருதப்பட்டது. பாரதம் பாடிய பெருந்தேவனார், மாபாரதம் தமிழ்ப்படுத்தும், மதுராபுரிச்சங்கம் வைத்தும் என்ற தொடர்கள் இவ்வுண்மையைக் காட்டுகின்றன. ஆகவே பாரதக் கதைமாந்தர்களுக்கு அருள் பாலித்தது என்று திருக்கோயில்கள் தெய்வத் திருமேனிகள் சிறப்பாகப் பேசப்பட்டன. இயற்கையின் பெருஞ்சக்திகளான, நீர், நெருப்பு, காற்று, ஞாயிறு, திங்கள் ஆகியவை (அக்னி, வாயு, வருணன், சூரியன், சந்திரன்) வழிபட்ட திருத்தலங்கள் என்று கூறப்பட்டன. இந்திரன், தேவர்கள் வழிபட்ட தலம் என்றும், காலன் வழிபட்ட தலம் என்றும், ஈ, எறும்பு முதலாக யானை ஈறாக எல்லா விலங்குகளும் வழிபட்ட தலம் என்றும் தலப்பெருமைகள் கூறப்பட்டன. தமிழில் தலபுராண இலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்பே திருமுறை ஆசிரியர்கள் இதனைக் கையாண்டுள்ளனர்.

வடக்கு உயர்ந்தது, தெற்கு தாழ்ந்தது என்ற எண்ணத்தை மாற்றும் பொருட்டு வடக்கை விடத் தெற்கு உயர்ந்தது என்று பாடப்பட்டது.

‘தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி’

என்று வழிபாட்டின் தொடக்கமே மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் முறையில் அமைந்தது. தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்கள் வடநாட்டுக் கோயில்களைவிட உயர்ந்தவை எனும் முறையில் ‘காசிக்கு வாசி உயர்ந்த தலங்கள்’ என்று திருமுதுகுன்றம் (விருத்தாசலம் - விருத்தகாசி), திருவால்வாய் (மதுரை) ஆகிய தலங்கள் கூறப்பட்டன. தெட்சிண கைலாசம் என்று தெற்குக் கயிலாயமாகத் திருக்காளத்தி, திருச்சிராப்பள்ளி, திருகோணமாலை (இலங்கை) ஆகிய மூன்றும் கூறப்பட்டன. பூலோகக் கைலாசமாகத் திருவையாறு, திருக்குற்றாலம், சிதம்பரம் ஆகிய மூன்றும் கூறப்பட்டன.

திருக்கோயில்கள் வழிபாட்டு நிலையில் உயர்ந்து நின்றது போலத் தெய்வத் திருமேனிகள் பலவும் புராண வழக்குக் கதைகளின் வழி ஏற்றம் பெற்றன. இறைவன் எட்டு வீரச் செயல்களைச் செய்தான்

என்பதால் அஷ்ட மூர்த்தி (அட்ட மூர்ததி) என்றும், அவன் கோயில் கொண்டிருக்கும் தலம் அட்டவீரட்டத்தலங்கள் என்றும் கூறப்பட்டன.

"பூமன் சிரங்கண்டி, அந்தகன் கோவல், புரம் அதிகை
மாமன் பறியல், சலந்தரன் விற்குடி, மா வழுவூர்
காமன் குறுக்கை, யமன் கடவூர் இந்தக் காசினியில்
தேமன்று கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே"

என்ற பாடல் அட்ட வீரட்டத்தலங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

1. திருக்கண்டியூர்	- பிரமன் சிரம் கொய்தது
2. திருக்கோவலூர்	- அந்தகாசுரனைச் சங்கரித்தது
3. திருஅதிகை	- திரிபுரத்தை எரித்தது
4. திருப்பறியலூர்	- தக்கன் சிரம் கொய்தது
5. திருவிற்குடி	- சலந்தராசுரனைச் சங்கரித்தது
6. திருவழுவூர்	- யானையை உரித்தது
7. திருக்குறுக்கை	- காமனை எரித்தது
8. திருக்கடவூர்	- இயமனை உதைத்தது

இவ்வெட்டுத் தலங்களில் உள்ள தெய்வத் திருமேனிகள் (வடிவங்கள்) மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இதில் திருக்கண்டியூர், திருக்கோவலூர் இரண்டிற்கும் கூறப்படும் கதை பைரவர் வரலாற்றை அடியொட்டி அமைந்தது. பைரவர் வழிபாடு புராணக் கதை மரபோடு ஒட்டி இங்கு அமைந்துள்ளமை எண்ணத்தக்கது.

தமிழ்நாட்டிலுள்ள மிகப்பெரிய கோயில்களுள் திருவிடைமருதூர்க் கோயில் குறிப்பிடத்தக்கது. இந்திய நாடு முழுமைக்கும் மூன்று கோயில்களை எல்லை போல வைத்துக் கூறுவதுண்டு.

வடக்கே - சைலம்	- மல்லிகார்ஜுனம் (மருதூர்)
தெற்கே - திருநெல்வேலி	- புடார்ஜுனம் (திருப்புடைமருதூர்)

இரண்டிற்கும் மத்தியில் (இடையில்) மத்தியார்ஜுனம். இது திரு + இடை + மருதூர் = திருவிடைமருதூர் என அழைக்கப்படுகிறது. இங்குள்ள இறைவன் எல்லா மூர்த்தங்களையும் விட உயர்ந்தது என்பதைக் குறிக்க இறைவனை மகாலிங்கம் என்று கூறுவர். மகாலிங்கம் என்ற பெயருக்கேற்ப திருவிடைமருதூரைச் சுற்றியுள்ள ஒன்பது திருக்கோயில்களை மகாலிங்கரது பரிவாரத் தெய்வக்கருவறைகள் போலக் கூறுவது உண்டு.

திருவலஞ்சுழி	- விநாயகர்
திருவேரகம் (சுவாமிமலை)	- முருகன்
திருவாவடுதுறை	- நந்திதேவர்
சூரியனார் கோவில்	- நவக்கிரகங்கள்
சிதம்பரம்	- நடராஜர்
திருவாலங்குடி	- தக்ஷிணாமூர்த்தி
திருவாரூர்	- தியாகராஜர்
திருவாப்பாடி	- சண்டேசர்
சீர்காழி	- பைரவர்

சந்நிதிகளாகக் கூறப்படுவதுண்டு. சீர்காழியில் சட்டையப்பர், தோணியப்பர், ஆபதுத்தாரணர் என்ற பல பெயர்களின் பைரவர் வழிபாடு இடம் பெற்றுள்ளதால் சீர்காழி பைரவத்தலமாகக் கருதப்படுகிறது.

தமிழ்நாட்டில் திருக்கோயில் வழிபாட்டை ஓர் இயக்கமாக வழி நடத்திச் சென்றவர்கள் திருமுறை ஆசிரியர்கள். அதிலும் சமயக்குரவர் நால்வர் செய்த திருப்பணி குறிப்பிடத்தக்கது. வடநாட்டுச் சிவவழிபாட்டை ஏற்றவிடங்களிலெல்லாம் சமயக்குரவர் தமிழகக் கோயில் வழிபாட்டில் இணைத்துக் கூறியுள்ளனர்.

திருஞான சம்பந்தர் பாசுபதர், காபாலிகர், மாவிரதியார் முதலிய பைரவக் கடவுள் வழிபாட்டினைத் தம் திருப்பதிக்கங்களில் பல இடங்களில் காட்டுகிறார்.

"சைவர் பாசுபதர்கள் வணங்குஞ்சண்பை நகராரே"
(திருச்சண்பைநகர் - 4)

"கறைகொள் கண்டர் கபாலமேந்துங்கையர் கங்காளர்"
(திருநறையூர்ச்சித் தீச்சுரம் - 1)

"காதார் குழையர் காளகண்டர் காரோணத்தாரே"
(திருக்குடந்தைக்காரோணம் - 4)

"கங்காளர் கயிலாய மலையாளர்" (திருவையாறு - 3)

"நிணந்தரு மயானநிலை வானமதி யாதொரு சூலமொடு பேய்க்
கணந்தொழு கபாலி கழ லேத்தி" (திருமயிலாடுதுறை - 11)

"பாசுபத விச்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணி" (திருமாகறல் - 8)

என்று சிவனின் பல வடிவத்தைக் கூறியவர் திருஅம்பர் மாகாளம் என்றும் திருப்பதியில் இறைவனை,

"கரியுரித்தாடும் கங்காளர்நங் காளியேத்தும் அழகனார்"

என்று பாடுகிறார். நம் தமிழ்நாட்டில் பேய்மகளிர் வழிபாடு இருந்துள்ளது என்பதை நமக்குச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. பேய்மகளிர் வழிபாடு இன்று நாட்டுப்புற வழிபாட்டில் பேய்ச்சி, பேய்ச்சியம்மன் என்ற பெயர்களின் வழங்குகிறது. ஊர்ப்பெயர்களில் பேய்ச்சி என்ற சொல் இடம்பெற்றுள்ளது என்பதற்குப் பேய்ச்சிப்பாறை போன்ற பெயர்கள் எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளன. பண்டைய வழிபாடுகளில் ஒன்றான பேய் மகளிர் வழிபாடு இடைக்காலத்தில் காளி வழிபாட்டுடன் இணைந்தது. ஊர்த்துவ காளி சுடுகாட்டில் இறைவனுடன் நடனம் ஆடுபவள் என்று கூறப்பட்டது. திருவாலங்காட்டில் இறைவனும், இறைவியும் ஊர்த்துவதாண்டவம் ஆடினர் என்பது புராண வழக்கு. திருஞானசம்பந்தர் தம் திருஅம்பர் மாகாளப் பதிகத்தில் 'கரியுரித்தாடும் கங்காளர்நங் காளியேத்தும் அழகனார்' என்று காளி வழிபாட்டிலும் உயர்ந்தது சிவப்பரம்பொருள் வழிபாடு என்று மறைமுகமாக கூறிச் செல்கிறார்.

திருநாவுக்கரசர் கையில் உழவாரப்படை கொண்டு திருக்கோயில்களைத் தூய்மை செய்யும் பணி செய்தாரெனினும், சமுதாயத்தில், சமயத்தில் படர்ந்து கிடந்த களைகளைப் போக்கியமையையே அவர்தம் தொண்டு எனக் கூறலாம். உழவாரச் சின்னம் வேளாண்மைச் சமுதாயத்தைத் தட்டியெழுப்பிச் சமணம் சார்ந்திருந்த அரசையும் (க்ஷத்திரியர்) சமணத்திற்கு ஊக்கம் கொடுத்த வணிகச் சமுதாயத்தையும் (வைசியர்) எண்ணிப் பார்க்க வைத்தது. அப்பர் சைவ உலகிற்குச் செய்த திருத்தொண்டு அளவிடற்கரியது. ஆகவேதான் அந்தணர் குலத்தில் தோன்றிய அப்பூதியடிகள் அப்பரை இறைவனாகவே எண்ணினர். இதுபோன்று அடியவர்களை ஆண்டவனாக எண்ணும் மரபு சைவத்திலும் வைணவத்திலும் (நம்மாழ்வார் - மதுரகவியாழ்வர்) உண்டு. அப்பர் பிற சமயங்களையும், பிற கடவுள் வழிபாடுகளையும் சைவத்தில் ஒன்றுபடுத்தியவர். இவர்தம் திருமுறைகளில் சமய ஒருமை உணர்வு நன்கு தென்படுகிறது.

"ஏறேற்ற மாவெறி யெண்கணமும் பின்படர
மாறேற்றா வல்லரணஞ்சீறி மயானத்தில்
நீறேற்ற மேனியர்"

(திருவாரூர் - 190)

என்று இங்குச் சைவத்தின் எண்கணத்தாராக அருளிப்பாடியவர், உரிமையிற்றெழுவார், உருத்திரபல்கணத்தார், விரிசடை விரதிகள், அந்தணர், சைவர், பாசுபதர், காபாலிகள் ஆகியவர்களைக் கூறுகிறார். இது தவிர இன்னும் பல்பாடல்களில்

" கண்டராய் முண்டராகிக் கையிலோர் கபாலமேந்தி"
(திருப்பழனம் - 3, திருக்கச்சியேகம்பகம், திருக்கோடிகா)

திருச்சேறைப்பதிகத்தில்,

" விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோல கால பயிரவனாகி வேழம்
உரித்துமை யஞ்சக்கண்டு வொண்டிரு மணிவாய்விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செவ்வனாரே"(எண்.6)

என்று சிவபெருமானின் பைரவக் கோலத்தை அப்படியே காட்டுகிறார். சிவபெருமானை எலும்பாபரணன், தலையறுத்த பாசுபதன் (திருக்காளத்தி 2) என்றும், தலையறுத்து மாவிரதந் தரித்தான் (திருக்கீழ்வேளூர் 4) என்றும்,

" பசுபதி பாசுபதம் தேசமூர்த்தி கண்ணப்பன் கண்ணப்பக் கண்டு கந்தார்
கழிப்பாலை மேய, கபாலப்பன்" (திருக்கழிப்பலை 6)

என்றும், 'வெண்தலைக் கையிலேந்தி' (திருப்புறம்பயம் - 4) 'தலைப்பசி கொண்டுழல்வார்' (திருவாரூர் 7) என்றும் கூறுகிறார்.

திருவீழிமிழலைப் பதிகத்தில்,

" சவந்தாங்கு மயானத்துச் சாம்பலெலன்பு
தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் தன்னைப்
பவந்தாங்க பாசுபத வேடத்தானை" (எண் 2)

என்று இறைவனின் பைரவக் கோலத்தையும், அடியவர்கள் கொண்டிருந்த நிலையையும், பைரவ வழிபாட்டையும் சிவனோடு ஒன்றுபடுத்திப் பாடுகிறார்.

இறைவனைத் தோழமை நெறியில் கண்டு வழிபட்ட சுந்தரமூர்த்தியார் இறைவனின் பைரவக் கோலத்தைப் பல பதிகங்களில் பாடுகிறார்.

"கையது கபாலங் காடுறை வாழ்க்கை
கட்டங்க மேந்திய கையர்" (திருப்பாச்சிலாச்சிராமம் 7)

என்ற பாடலில் பைரவர் வழிபாட்டில் 'கட்டுவாங்கம்' (நிழற்படம் காண்க) என்ற ஆயுதம் பைரவர் ஆயுதமாகக் கூறப்படுவதை எடுத்துக் காட்டுகிறார். திருவலிவலம் பதிகத்தில்,

"ஏன்ற அந்தணன் தலையினை அறுத்து
நிறைக்க மால் உதிரத்தினை ஏற்றுத்
தோன்று தோள்மிசைக் களேபரந் தன்னைச்
சுமந்த மாவிரதத்தகங்காளன்"

என்று பிரம்மசிரச்சேத மூர்த்தியாகக் கூறப்படும் பைரவர் கதையை இங்குக் காட்டுகிறார். வடதிருமுல்லைவாயில் பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் இறைவனைப் 'பாசுபதா பரஞ்சுடரே' என்று கூறி பாசுபதனாய் வந்த பைரவரைக் காட்டுகிறார். திருநாட்டியத்தான்குடி, திருநின்றவூர், திருக்கோளிலி, திருப்பழமண்ணிப்படிக்கரை, திருக்காளத்தி, திருபைஞ்ஞீலி, திருக்கச்சூர், ஆலக்கோயில், திருநாகைக் காரோணம், திருக்கடவூர் மயானம், திருவலம்புரம், திருவாரூர், திருவெண்பாக்கம், திருநறையூர்ச் சித்தீச்சுரம், திருநன்னிலத்துப் பெருங்கோயில் ஆகிய ஊர்ப் பதிகங்களில் பைரவரைக் காபாலகர், பாசுபதர் என்ற பெயர்களில் கூறி வழிபாடு செய்கிறார் சுந்தர மூர்த்தியார். ஆனால் மாணிக்கவாசர் தம் திருவாசகத்தில் தேவார மூவர்கள் கூறியதுபோல பைரவரைக் கூறவில்லை. திருப்பூவல்லி பதிகத்தில் மட்டும்

"காரார் கடனஞ்சை யுண்டுகந்த காபாலி"

என்று கூறுகிறார். திருவாசகம் பாடிய மணிவாசகர் வீரசைவநெறியைப் பின்பற்றிய வராகையால் சிவலிங்கத்தின் மூர்த்தி பேதங்களாகவுள்ள எல்லாத் திருவுருவங்களையும் அதிகமாகப் பாடவில்லை. மணிவாசகரின் பாடல்கள் ஆன்ம அனுபவப் பாடல்கள். ஆகவே சமயத்தின் வேறுபாடுகள், திருவுருவ வேறுபாடுகள் ஆகியவற்றில் மணிவாசகரின் கருத்து அதிகமாகச் செல்லவில்லை என்றே கூறத் தோன்றுகிறது. திருமாளிகைத் தேவர் திருவிசைப்பாவில்,

"வண்டார் குழல் உமை நங்கை முன்னே
மகேந்திரச் சாரல் வராகத் தின்பின்
கண்டார் கவ லவில்லாடி வேடர்
கடிநாயுடன் கை வளைந்தாய்" (கோயில் 6)

என்று இறைவன் நாயுடன் வந்த காட்சியைக் காட்டுகிறார். சேரமான் பெருமாள் நாயனாரின் பொன்வண்ணத்தந்தாதி, நக்கீரர் திருவெழு கூற்றிருக்கை, கார்எட்டு, கபிலதேவரின் சிவபெருமான் திருவந்தாதி ஆகிய நூல்களிலும் இறைவனின் பைரவக் கோல வழிபாடு பேசப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தலபுராண இலக்கியங்கள் திருக்கோயில் வழிபாட்டைச் சிறப்பித்துக் கூறுவதற்காக அமைந்தவை. திருவாரூர்த் தலபுராணமான 'கமலாலயச் சிறப்பு' என்னும் நூல், இங்கு இறைவன் பைரவக் கோலத்தில் வந்து காபாலிகனாகச் சித்து விளையாடல்கள் புரிந்தான், இறைவனின் எழிற்கோலம் கண்டு கபாலீச்சுரம் என்னும் திருக்கோயில் அமைத்து இறைவனை வழிபட்டனர் என்று கூறுகிறது. பைரவர் வழிபாடு 'பைரவ உபாஸனை' என்ற பெயரில் நடைபெற்றுள்ளது. இது விரக்தன், காபாலிகன், பைராசி போன்ற ஸாதகர்களால் செய்யக்கூடியது என்பர். திருவாரூரில் இதுபோன்ற தீவிர வழிபாடு இருந்துள்ளது. எனவே தான் திருவாரூர்க் கோயிலில் இடம்பெற்றுள்ள பைரவர் சிற்பம் கையில் கட்டுவாங்கத்துடன் அமைந்துள்ளது. திருமுதுகுன்றம் என்றழைக்கப்படும் விருத்தாசலத்தில் பைரவர் வழிபாடு சிறந்த நிலையில் இருந்துள்ளது. 'பைரவாஷ்டமி' என்று பைரவரைத் தனியாக வழிபடும் வழக்கம் உள்ளது. பைரவ உபாஸகர்கள் என்னும் தீவிர பைரவக் கடவுள் வழிபாட்டினர் இருந்து வந்துள்ளனர்.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலுள்ள திருப்புத்தூர்க் கோயில் செட்டிநாட்டு நகரத்தார்களின் ஒன்பது நகரக் கோயில்கள் ஆகியவற்றில் பைரவர் வழிபாடு சிறந்து விளங்கி வருகிறது. திருப்புத்தூரில் பைரவர் வழிபாடு சிவலிங்க வழிபாட்டை விட உயர்ந்து நிற்கிறது. பாண்டி நாட்டுப்பாடல் பெற்ற திருத்தலங்கள் பதினான்கனுள் திருப்புத்தூர் ஒன்று. இங்கு பைரவமூர்த்திக்கெனத் தனிக் கருவறை உள்ளது. உற்சவர் திருவுருவமும் உள்ளது. திருப்புத்தூரைச் சுற்றி அமைந்துள்ள ஏழு ஊர்களில் பைரவர்களுக்குக் கோயில்கள் அமைந்துள்ளன. இவை அஷ்ட பைரவர் என்னும் வழிபாட்டை நினைவுபடுத்தும் முறையில் அமைந்துள்ளன என்று கூறலாம். இக்கோயில் பற்றி எழுந்துள்ள திருப்புத்தூர்ப் புராணம் பதின்மூன்று பகுதிகளாய் 1336 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. இதில் பைரவர் தோற்றம் சிறப்புப் பற்றிக் கூறும் பகுதி 'வைரவச் சருக்கம்' என்ற பெயரில் 154 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. இங்குப் பைரவரை

> "தேவதேவ திகழ்வடு கேசனே
> காவலாள பிரமகபாலனே"

என்று குறிப்பிடுகிறது. மேலும் இறைவன்

"..... பெம்மான் மறைகளே ஞமலியாகித்
தன்னை வெஞ்சுமக்குமாறு சமைத்தனன்"

என்று வேதங்கள் தமக்கு நாய்களாக வடிவந்தாங்கி வர உருவேற்று வந்தான் என்று கூறுகிறது. அஷ்ட பைரவர்களைப் பற்றிக் கூறுமிடத்தில்,

" மாற்றருஞ்சீர் சீதாங்க வைரவனே ருருவைரவன்னென்றும் மெய்ப்
போற்று சண்ட வைரவனே குரோத வைரவனே செம்பொன்னார்மேனி
மேற்றிகழுன் மத்த வைரவனே காபால வைரவனே வென்றி
யேற்றுயர் பீடண வைரவன்னொடு சங்காரவைரவ னென்றெண்மீர்"

என்று எட்டுப் பைரவர்களின் பெயர்களை வரிசையாகக் கூறுகிறது. காசி நகரில், பிரகதாரணன் என்ற முனிவன் செய்த உருத்திரயாகத்தில் வயிரவக் கடவுள் பாலனாய்த் தோன்றிப் பரமயோகியாய் நின்றான்.

" கரம் இரண்டினும் தண்டமும் கபாலமும் கவின
தரளமாலை மஞ்சீரம், அங்கதம் முதல் தயங்க
பொருவில் மந்திர பூடணனாய் வடுவாகிப்
பரமயோகியாய் நின்றனன் ஆண்டெழு பகவன்"

என்று திருப்புத்தூர்புராணம் கூறுகிறது.

செட்டிநாட்டு நகரத்தார்கள் கோயில்களை அடிப்படையாக வைத்து தம் இனத்தை வகுத்துக் கொண்டவர்கள். கோயில் விளங்கக் குடி விளங்கும் என்பது இவர்தம் கோட்பாடு. ஆகவே வைசிய இனத்தாரான இவர்கள்தம் வணிகத்தில் இறைவனுக்கும் ஒரு பங்கு வைத்து இறைவனையும், தொழிலில் கூட்டாளியாக்கிக் கொண்டார்கள். இலாபப் பங்கீட்டில் இறைவன் பங்கு இறைப்பணிக்குப் பயன்படுத்தப்பட்டது. தம் இனத்தை ஒன்பது கோயில்களின் அடிப்படையில் அமைத்துக் கொண்டார்கள். அவை 1) இளையாத்தங்குடி, 2) பிள்ளையார்ப்பட்டி, 3) சூரக்குடி, 4) வைரவன்பட்டி, 5) இலுப்பைக்குடி, 6) இரணியூர், 7) நேமம், 8) வேலங்குடி, 9) மாத்தூர் என்பவையாகும். இவ்வொன்பது கோயில்களும் சிவபெருமானுக்கு ஏற்பட்டவையேயாகும். இவர்களுக்குச் சைவம், வைணவம் என்ற சமய வேறுபாடில்லை. என்றாலும் பெரும்பாலும் சிவத்தொண்டையே உயிர்த் தொண்டாகச் செய்து வருவர். இவ்வொன்பது கோயில்களிலும் பைரவர் வழிபாடு மிகச் சிறந்த நிலையில் உள்ளது.

சோழர்காலத்தில் சிவன் கோயில்களில் இறைவிக்கெனத் தனிக்கோயில் கட்டப்பெற்றது. அக்கோயில்கள் 'திருக்காமக்கோட்டம்' என்ற பெயர்பெற்றன. சோழர்களுக்கு முந்திய பல்லவர்கள் காலத்தில் திருக்காமக்கோட்டம் எடுக்கும் வழக்கம் இல்லை. இறைவனும் இறைவியும் ஒரே கருவறையில் வைத்து வழிபாடு செய்யப்பட்டனர். சோழர்களின் திருக்கோயில் கட்டிட வளர்ச்சியில் 'திருக்காமக்கோட்டம்' அமைக்கப்பட்டது போல நகரத்தார்களின் கோயில்களில் (இளையாத்தங்குடி, வைரவன்பட்டி, சூரக்குடி) 'பைரவக்கோட்டம்' தனியாக அமைக்கப்பட்டது. இறைவனை (சிவலிங்கத்தை) ஒட்டிய தனிக்கோயிலாகவே அமைத்துள்ளனர். ஒன்பது நகரக் கோயில்களில் வைரவன்பட்டி (வைரவன்கோயில்) என்ற பெயரில் ஒரு ஊரும், கோயிலும், பைரவருக்காகவே தனியாக அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து பைரவர் வழிபாடு இப்பகுதியில் பெரு வழக்குப் பெற்றுள்ளமை தெரிய வருகிறது.

திருப்புத்தூருக்கு அருகில் குன்றக்குடிச் சாலையில் 4 கிலோ மீட்டர் தொலைவில் வைரவன்பட்டி என்ற ஊரும் வைரவன் கோயிலும் அமைந்துள்ளது. இங்குள்ள இறைவன் பெயர் வளரொளிநாதர், இறைவி பெயர் வடிவுடையம்மை.

> "வளரொளியை வயிரத்தை மாசொன்றில்லாப்
> பொன்னுருவைப் புள்ளிருக்கு வேளூரானைப்
> போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே"

என்பது அப்பர் வாக்கு. இக்கோயில்பற்றி 'வைரவன் கோயிற்புராணம்' என்ற தலப்புராணம் சேந்தன்படி வி. நடராசக் கவிராயரால் இயற்றப் பெற்றுள்ளது. பதினேழு படலங்களையுடைய இப்புராணத்தில், வயிரவப் படலம் என்பது ஒன்று. இங்குள்ள இறைவன், நான்முகன், திருமால், தேவர்கள் காண ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்ஜோதியாக நின்றான். ஆகவே அவனுக்கு 'வளரொளி நாதர்' என்று பெயர் ஏற்பட்டது.

> "கிளர்முடி அண்டகோளம் கெழும நாற்புயமும் எண்திக்கு
> அளவினைக் காட்ட மேனி அனந்த சூரியரிற் சீர்ப்ப
> தளர்வுறு சுரர்பால் வைத்த தண்ணிய கருணையாலே
> வளர்ஒளி நாமத் தீரன் வயிரவக் கோலம் கொண்டான்"

வளரொளி நாதனாகிய சிவபெருமான் பைரவக் கோலம் கொண்ட திருக்காட்சியை இப்பாடல் இயம்புகிறது. பைரவர் கும்பாண்டான்,

வக்கிரதமிட்டிரன், மகாதமிட்டிரன் ஆகிய மூன்று அசுரர்களுடனும் போர் செய்து அழித்தான் என்று தலபுராணம் கூறுகிறது. அசுரர்களை அழித்து அப்பகுதியில் வயிரவநகரம் என்ற பெயரில் குளத்தையும், ஊரையும் ஏற்படுத்தினான் என்பது தலபுராண வரலாறு. வைரவருக்குத் துணையாக விநாயகரும் இப்போரில் ஈடுபட்டதால் வைரவன்பட்டிக்கு அருகில் பிள்ளையார்பட்டி என்ற ஊரும் கோயிலும் ஏற்பட்டதாக இளையாத்தங்குடி மான்மியம் என்ற நூல் கூறுகிறது. இப்போரின் நினைவாக இங்குச் 'சம்பாசட்டி' என்ற விழா கொண்டாடப்படுகிறது. கும்பாசுரனை அழித்தால் 'கும்பாசட்டி விழா' என்றும் அசுரனை அழித்தால் 'சம்கார சட்டி விழா', 'சம்பாசட்டி விழா' என்றும் கூறுவர்.[1] இவ்விழா திருக்கார்த்திகையிலிருந்து இருபத்தோராம் நாள் கொண்டாடப்படுகிறது. செட்டி நாட்டு நகரத்தார்கள் மரபில் 'விநாயகர் சதுர்த்தி' போன்ற விழாக்கள் கொண்டாடப்படுவதில்லை. திருக்கார்த்திகை கழிந்த இருபத்தோராம் நாள் சஷ்டி, சதயம் கூடிய நாள். திருக்கார்த்திகையிலிருந்து இருபத்தோரு நாட்கள் இறைவனுக்கு நோன்பு இருப்பர். நூல் இழை இருபத்தோரு இழைகளை நாள்தோறும் எடுத்து வைப்பர். இருபத்தோராம் நாள் 'பிள்ளையார் நோன்பு' என்ற பெயரில் நோன்பை நிறைவு செய்வர். வளரொளி வடிவான இறைவனை ஒளி வடிவமாக உள் வைக்கும் முகமாக, அரிசி மாவில் கருப்பட்டிச்சாறு கட்டி மாவிளக்கு செய்து நூல் இழையில் தீபம் ஏற்றி, ஒளியோடு (சுடரோடு) உண்பது இன்றும் மரபாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. வைரவன்பட்டியும் பிள்ளையார்பட்டியும் அருகருகே இருக்கும் திருக்கோயில்கள். இந்நோன்பு வளரொளி இறைவன் வழிபாட்டால் ஏற்பட்டு இன்று 'பிள்ளையார் நோன்பு' என்ற பெயரில் நடைபெற்று வருகிறது. இவ்வழிபாடே பின்னர் சட்டி விழா, சம்பாசட்டி விழா என்ற பெயரில் மாற்ற பெற்றிருக்க வேண்டும்.

வைரவருக்குத் திருப்புத்தூர் சிரசு ஸ்தானம், வைரவன் கோயில் இருதய ஸ்தானம், இலுப்பைக்குடி பாதஸ்தானம் என்று மூன்றின் சிறப்பையும் வைத்துக் கூறுவர். வைரவன் கோயில் தென்பாண்டி நாட்டில் கேரளசிங்க வளநாடாகிய, ஏழகப் பெருந்திருவான வீரபாண்டியபுரம் என்று அழைக்கப்பட்டுள்ளது. வைரவன் கோயில் வளவேந்திராசன் என்னும் பாண்டிய மன்னனால் சாலிவாகன சகாப்தம் 634 கலியுகம் 3813 ஆம் ஆண்டில் (கி.பி. 712) அமைக்கப் பெற்று, செட்டிநாட்டு நகரத்தார்களின் ஒரு பிரிவினரால் திருப்பணி செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

1. ஒன்பது நகரக்கோயில்கள், வ. தேனப்பன், பக். 169-170.

வைரவன்பட்டி, சூரக்குடி, இரணியூர், இலுப்பைக்குடிக்கோயில் வைரவர் சிற்பங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. வைரவன்பட்டி, இரணியூரில் உள்ள வயிரவர் சிற்பங்கள் 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தன என்று கூறுவர். சூரக்குடியில் உள்ள வயிரவர் சிற்பத்தில் சூலத்திற்குப் பதிலாகக் கையில் கதை (கதாயுதம்) காணப்படுகிறது. இவ்வடிவம் எங்கும் காணமுடியாத அரியதொரு வடிவமாகும். இலுப்பைக்குடி வயிரவர் சிற்பத்தில் வயிரவருக்கு இரண்டு நாய்கள் காணப்படுகின்றன.

திருக்கோயில் வழிபாட்டில் இறைவனுக்கு ஒருகாலப் பூசை தொடங்கிப் பன்னிரண்டு காலப்பூசைகள் வரை நடைபெறுவதுண்டு. பூசைகளின் காலத்தை வைத்து உத்தமோ உத்தமம் என்று ஒவ்வொன்றாக வரிசைப்படுத்திக் கூறுவர். பூசையே இல்லாமல் இருக்கும் கோயில்களை அதமோதமம் என்பர். பெரும்பான்மையான கோயில்களில் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுவதுண்டு. அவை, உஷத்காலம், காலைச்சந்தி, உச்சிக்காலம், மாலைச்சந்தி, இரண்டாம் காலம், அர்த்தசாமம் என்பர். அவை நம் தமிழர் கண்ட சிறுபொழுதுகளான வைகறை, காலை, நண்பகல், மாலை, எற்பாடு, யாமம் என்பவையாகும். இவற்றில் அர்த்தயாமப் பூசையாக நடைபெறும் இரவுப் பூசையை ஒடுக்ககாலப் பூசை என்று கூறுவதுண்டு. உயிர்களை இறைவிக்குள் அடக்கி, இறைவியை இறைவனோடு ஒடுங்கச் செய்வது, இதைப் பள்ளியறைப் பூசை என்பது வழக்கு. இப்பூசையின் இறுதியில் சண்டேசுவரரைப் பூசை செய்து, பைரவராகிய க்ஷேத்திரபாலர் பால் சென்று பூசை நிகழ்த்திக் கோயில் திறவுகோலை அவரிடம் ஒப்படைப்பது என்ற மரபுண்டு. ஒவ்வொரு கோயிலிலும் பைரவமூர்த்தி காவல் தெய்வமாக இருப்பதால் இப்பூசைகள் நடத்தப் பெறும். வைரவன்பட்டிக் கோயிலில் இறுதிப் பூசையான இப்பூசை சிறப்பாக நாடோறும் நடத்தப் பெறுகிறது. மூலவரும், உற்சவருமாக இங்கு பைரவரே இடம் பெற்றுள்ளதால் இப்பூசை சிறப்பாய் நடைபெறுகிறது.

நகரத்தார்களின் வழிபாட்டில் பைரவர் வழிபாடு சிறப்புப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் மக்கட் பெயரில் 'வைரவன்' என்ற பெயர் இப்பகுதியில் தான் அதிகம் வழங்குகிறது. பைரவர் வழிபாடு இங்கு உயர்நிலை பெறுவதற்குச் சில காரணங்கள் கூறப்படுகின்றன. அவை ஏற்புடையது என்று கூறுவதற்கில்லை. நகரத்தார்கள் பண்டைய வாழ்க்கையில் பலவகையான துன்பங்களில் உழன்றவர்கள். துன்பங்களை அழிக்கும் வல்லமை பெற்ற வயிரவரை நகரத்தார்கள் மிகவும் போற்றி வழிபட்டனர் என்று கூறப்படுகிறது. அப்படியெனில் இறைவனின் மற்ற

வடிவங்களை மூர்த்தங்களைக் குறைவாக நகரத்தார்கள் எண்ணியிருக்க வேண்டும் என்ற தவறான கருத்துக்கு இது இடம் தருகிறது. நகரத்தார்கள் எனும் மரபினர் தஞ்சை நாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவர்கள். அங்குப் பெண்களுக்கு ஏற்படவிருந்த அரச அநீதி கண்டு அஞ்சி அங்கிருந்து இடம் பெயர்ந்து காஞ்சி நகர் சென்று வாழ்ந்தவர்கள். 'நகரேஷு காஞ்சி' என்று சிறப்புப் பெற்ற காஞ்சியில் இருந்து வாழ்ந்தபொழுது இவர்களுக்கு நகரத்தார்கள் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. பின்னர் பாண்டிய மன்னன் வேண்டுகோளுக்கிணங்கப் பாண்டி நாட்டில் வெள்ளாற்றுப் பகுதியில் குன்றக்குடிக்கு அருகில் குடியேறி வாழ்ந்துள்ளனர். வைசியர்களான இவர்களின் சமய வாழ்வில் பௌத்தமும், சமணமும் இருந்துள்ளது. இவர்கள் பெரும்பாலும் பௌத்த, சமண சமயத்தைத் தழுவியவர்கள் என்று கூடச் சொல்லலாம். பின்னர் தமிழகத்தில் ஏற்பட்ட பக்தி இயக்கப் போராட்டத்தின் விளைவாய் இவர்கள் முழுவதும் சைவசமயமாக மாறியுள்ளனர். பௌத்த சமய வழிபாட்டில் நான்கு திசைகளையும் நான்கு திசைக் காவலர்கள் காத்து வருவதாக ஒரு மரபு உண்டு. இது முன்னரே கூறப்பட்டுள்ளது. அதில் தெற்குத் திசைக்குத் தலைவன் விருதாட்சன், இவன் கும்பாண்டர்களுக்கு அரசன் என்பது பௌத்த சமய மரபு. சைவ சமயக் கூட்டுறவால், பாண்டியன் அரவணைப்பால் குடியேறி வாழ்ந்த மக்கள், தம் பௌத்த இடர்களை இறைவன் கடிந்து தம்மைக் காப்பாற்றுவான் என்ற எண்ணம் மேலிட வாழ்ந்திருக்க வேண்டும். தெற்குத் திசையில் உள்ள கும்பாண்டர்களை இறைவன் பைரவக் கோலம் கொண்டு அழித்துத் தம்மைக் காத்ததாகக் கூறிக் கொண்டனர். மாந்திரினத்தின் வாழ்வுக்கும், தாழ்வுக்கும் இறைவனைக் காரணமாக வைத்துக் கூறுவதே சமய மரபு. சமயப் போராட்டத்தில் கும்பாண்டர்களை அழித்து இம்மக்கள் சைவசமய வாழ்வு பெற்றமையை, இக் கோயில் தல புராணம், புராண அடிப்படையில் கும்பாண்டான் என்னும் அசுரனாக உருவகித்துக் கூறுகிறது என்பதே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

நாட்டுப்புற மக்கள் வழிபாட்டில் ஊர்க்காவல் தெய்வமாக 'முனீசுவரன்' என்ற தெய்வத்தைக் கூறுவதுண்டு. இவ்வழிபாடு தமிழ்நாட்டின் பல பகுதிகளில் உள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், பசும்பொன் தேவர் மாவட்டம் ஆகியவற்றில் 'முனியய்யா' என்ற பெயரில் இவ்வழிபாடு நடைபெறுகிறது. முனீசுவரன் என்று வழிபடப் பெறும் வடிவம் பெரும்பாலும் சிவனின் பைரவக் கோலத்தை ஒட்டியே அமைந்துள்ளது. நின்ற கோலமாய்க் கையில் வாள், வேல், கத்தி, கதை, வில் ஆகிய கருவிகளுடன் அமைந்துள்ளது. காவல் தெய்வம் ஆகையால்

நாய் உடன் வைத்து வழிபாடு செய்யப் பெறுகிறது. புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் கோட்டையில் (கோட்டை மதிற்சுவரில்) கோட்டை முனியய்யா என்ற தெய்வம் பெரும்பான்மையான மக்களால் வழிபாடு செய்யப் பெறுகிறது. இது பைரவரின் வடிவம், தற்பொழுது இவ்வுருவத்திற்குக் 'கோட்டைப் பைரவர்' என்று பெயரிடப்பட்டுள்ளது. திருக்கோயில் வழிபாட்டில் யாமப் பூசையில் பைரவரிடம் கோயிலை ஒப்படைத்து, வைகறைப் பூசையில் கோயிலைப் பெற்றுக் கொள்வது போல, நாட்டுப்புறத் திருவிழாக்களிலும், ஊர்த் திருவிழாக்களிலும் முதலிலும், முடிவிலும் முனீசுவரனை வழிபடும் வழக்கம் உள்ளது. பௌத்த சமயத்திலும் பௌத்தக் கோயில்கள் புத்தருடைய பல பெயர்களில் ஒவ்வொன்றன் பெயரால் 'தருமராசா கோயில்', 'சாத்தனார் கோயில்', 'முனீசுவரர் கோயில்' என்ற பெயரில் வழிபாட்டில் இருந்துள்ளன என்பதும் இங்கு எண்ணத்தக்கது.

சிந்துவெளிப் பண்பாட்டில் தோன்றிய சிவலிங்க வழிபாடும் தாய்த் தெய்வ வழிபாடும், நம் பண்டைத்தமிழர் வழிபாட்டில் தோன்றிய காவல்தெய்வ வழிபாடும், கன்னித் தெய்வ வழிபாடும் இணைந்த நிலையில் பைரவ வழிபாடு அமைந்துள்ளது. சமயங்கள் தோன்றுவதற்கு முன்னர் தோன்றிய இயற்கை வழிபாடுகள் சமயங்களைத் தழுவிய நிலையில் வளர்ச்சியையும் மாற்றங்களையும் பெற்றுள்ளன. மாந்தர் இனத்தின் சமுதாயத் தேவைக்கேற்ப, மனவளர்ச்சிக்கேற்ப, நம்பிக்கைகளுக்கு ஏற்ப வழிபாடுகள் மாறுவதும், பழையன கழிதலும், புதியன புகுதலும் உண்டு. மாறிவந்துள்ள வழிபாடுகளின் அடிப்படையில் மாந்தரினத்தின் பண்பாட்டை அறிந்துகொள்ள முடிகிறது. இயற்கையைக் கண்டு அஞ்சிய மாந்தரினம் இயற்கையை அமைதிப்படுத்த, மகிழ்விக்க எண்ணியது. அவ்வெண்ணத்தின் வெளிப்பாடே வழிபாடுகள். பண்பாடற்ற சூழ்நிலையில் உயிர்ப்பலி கொடுத்தல், கோரமான கொடூரமான செயல்களைச் செய்தல் போன்றவை வழிபாடுகளாக இருந்தன. அறிவு வளர்ச்சி பெற்ற நிலையில் பூவும், நீரும் கொண்டு பூசனை செய்தால் போதும் என்ற எண்ணம் ஏற்பட்டது. பின் புறச்செயல்களை வெறுத்து அகத்தூய்மையுடன் எண்ணினாலே போதும் என்பதை,

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்
பொக்கம் மிக்கவரின் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே"

என்னும் அப்பரடிகள் வாக்கு காட்டுகிறது. இது வழிபாட்டின் உச்சநிலை. வழிபாட்டின் இடைப்பட்ட நிலையில் மாந்தர் இனத்திற்குக் கலையுணர்ச்சிக்கு வடிவங்கள் தேவைப்பட்டன. அக்கலைவுணர்ச்சியைக் கடவுள் வடிவங்கள் நிறைவுபடுத்தின. ஆகவேதான் இறைவனுக்கு எண்ணிறந்த வடிவங்கள், அத்தனையும் மாந்தரினத்தின் கலை வெளிப்பாடு, உள்வெளிப்பாடு என்று கூறவேண்டும். தமிழ் இனம் அறிவுக்கும், கலைக்கும் கடவுள் வழிபாட்டில் அதிக இடம் தந்தது. அதுவே தத்துவத்தின் பிறப்பிற்கும், கலை மேம்பாட்டிற்கும் வழிவகுத்தது. இந்நிலையைத்தான் நாம் பைரவ வழிபாட்டில் காண முடிகிறது. அச்சத்தின் காரணமாய்த் தோன்றியது; ஆசையின் காரணமாய் வளர்ந்தது; கலையின் காரணமாய் உயர்ந்தது. அறிவின் காரணமாய்த் திருக்கோயில்களில் சிறப்பிடம் பெற்றது. வடஇந்திய வழிபாடு, பிற சமயங்களின் வழிபாடு, இயற்கை வழிபாடு, நாட்டுப்புற மக்கள் வழிபாடு இவற்றின் ஒட்டுமொத்தமான இணைப்பாய்ப் பைரவ வழிபாடு விளங்கி வருகிறது.

ஆகமங்கள் இருபத்தெட்டு

1.	காமிகம்	15.	வீரம்
2.	மோசகம்	16.	இரௌரவம்
3.	சிந்தியம்	17.	மகுடம்
4.	காரணம்	18.	விமலம்
5.	அசிதம்	19.	சந்திரஞானம்
6.	தீப்தம்	20.	முகவிம்பம்
7.	சூக்குமம்	21.	புரோற்கீதம்
8.	சகச்சிரம்	22.	இலளிதம்
9.	அஞ்சுமான்	23.	சித்தம்
10.	சுப்பிரபேதம்	24.	சந்தானம்
11.	விசயம்	25.	சர்வோத்தம்
12.	நிசுவாசம்	26.	பாரமேசுவரம்
13.	சுவாயம்புவம்	27.	கிரணம்
14.	ஆக்கினேயம்	28.	வாதுளம்

அறுபத்து நான்கு சிவமூர்த்திகள்

1. இலிங்கமூர்த்தி
2. இலிங்கோற்பவ மூர்த்தி
3. முகலிங்க மூர்த்தி
4. சதாசிவ மூர்த்தி
5. மகாசதாசிவமூர்த்தி
6. உமாமகேசமூர்த்தி
7. சுகாசன மூர்த்தி
8. உமேச மூர்த்தி
9. சோமஸ்கந்த மூர்த்தி
10. சந்திரசேகர மூர்த்தி
11. ருஷபாரூட மூர்த்தி
12. ருஷபாந்திக மூர்த்தி
13. புஜங்கலளித மூர்த்தி
14. புஜங்கதிராச மூர்த்தி
15. சந்தியாநிருத்த மூர்த்தி
16. சதாநிருத்த மூர்த்தி
17. சண்டதாண்டவ மூர்த்தி
18. கங்காதர மூர்த்தி
19. கங்கா விஸாஜன மூர்த்தி
20. திரிபுராந்தக மூர்த்தி
21. கலியாணசுந்தர மூர்த்தி
22. அர்த்தநாரீசுர மூர்த்தி
23. கஜயுத்த மூர்த்தி
24. சுவராபக்ன மூர்த்தி
25. சார்த்தூல ஹரமூர்த்தி
26. பாசுபத மூர்த்தி
27. கங்காள மூர்த்தி
28. கேசவார்த்த மூர்த்தி
    (சங்கர நாராய)
29. பிஷாடனமூர்த்தி
30. சிம்மன மூர்த்தி
31. சண்டேசாநுக்கிரகமூர்த்தி
32. தக்ஷிணாமூர்த்தி
33. யோகதக்ஷிணாமூர்த்தி
34. வீணா தக்ஷிணாமூர்த்தி
35. காலந்தகமூர்த்தி
    (கால சம்ஹார)
36. காமதகன மூர்த்தி
37. இலகுளேசுரமூர்த்தி
38. பைரவமூர்த்தி
39. ஆபதோத்தாரண மூர்த்தி
40. வடுகமூர்த்தி
41. க்ஷேத்திரபால்கமூர்த்தி
42. வீரபத்திரமூர்த்தி
43. அகோராஸ்த்ர மூர்த்தி
    (அகோர)
44. தக்ஷயஞ்ஞஹத மூர்த்தி
45. கிராத மூர்த்தி
46. குருமூர்த்தி
47. அசுவாரூடமூர்த்தி
48. கஜாந்திகமூர்த்தி
49. ஜலந்திரவத மூர்த்தி
50. ஏகபாததிரி மூர்த்தி
51. திரிபாதத்ரிமூர்த்தி
52. ஏகபாத மூர்த்தி
53. கௌரீவரப்த மூர்த்தி
54. சக்ர தானஸ்வரூப மூர்த்தி
    (சக்ரதான)
55. கௌரீலீலா சமந்விதமூர்த்தி
56. விஷாபஹரண மூர்த்தி
57. கருடாந்திக மூர்த்தி
58. பிரமசிரச்சேத மூர்த்தி
59. கூர்ம சம்மார மூர்த்தி
    (சவர்ம சம்ஹார)
60. மச்ச சம்மார மூர்த்தி
    (-சம்ஹார-)
61. வராக சம்மார மூர்த்தி
    (-சம்ஹார-)
62. பிரார்த்தனாமூர்த்தி
63. ரக்தப்பிக்ஷாப்பிர தானமூர்த்தி
64. சிஷ்ய பாவமூர்த்தி

ASHTA -BHAIRAVA (அஷ்ட பைரவா)

1. Asitanga-bhairava with Brahmi - அஸிதங்க பைரவா - பிராம்மி
2. Ruru-bhairava with Maheswari - ருரு பைரவா - மகேஸ்வரி
3. Chanda-bhairava with Kaumari - சண்ட பைரவா - கௌமாரி
4. Krodha-bhairava with Vaishnavi- குரோத பைரவா - வைஷ்ணவி
5. Unmatta-bhairava with Varahi - உன்மத்த பைரவா - வராஹி
6. Kapala-bhairava with Indrani - காபால பைரவா - இந்திராணி
7. Bhishana-bhairava with Chamunda- பிஷண பைரவா - சாமுண்டா
8. Samhara-bhairava with Mahalakshmi- சம்ஹார பைரவா - மகாலஷ்மி.

GROUP I

1. Asitanga	-	அஸிதங்க
2. Visalaksha	-	விசாலாக்ஷ
3. Martanda	-	மார்த்தாண்டா
4. Modaka-priya	-	மோதகப் பிரியா
5. Svacchanda	-	ஸ்வச்சந்த
6. Vighna-Santushta	-	விக்ன சந்துஸ்த
7. Khechara	-	கேஷர
8. Sacharachara	-	சகஸ்ர சார

GROUP II

1. Ruru	-	ருரு
2. Kroda-damshtra	-	குரோத தம்ஸ்தர
3. Jatadhara	-	ஜடாதர
4. Visva-rupa	-	விஸ்வரூப
5. Virupaksha	-	விரூபாக்ஷ

6. Para (?) - பார
7. Vajrahasta - வஜ்ர ஹஸ்த
8. Mahakaya - மகாகாய

GROUP III

1. Chanda - சந்த
2. Pralayantaka - ப்ரளயாந்தக
3. Bhumi-Kampa - பூமிகாம்ப
4. Nilakantha - நீலகண்ட
5. Vishnu - விஷ்ணு
6. Kula-pala - குல பால
7. Munda-pala - முண்ட பால
8. Kama-pala - காம பால

GROUP IV

1. Krodha - குரோத
2. Pingalekshana - பிங்கலாக்ஷண
3. Abhra-rupa - அபரரூப
4. Dhara-pala - தரபால
5. Kutila - குடில
6. Mantra-nayaka - மந்த்ர நாயக
7. Rudra - ருத்ர
8. Pitamaha - பிதாமகா

GROUP V

1. Unmatta - உன்மத்த
2. Vatu-nayaka - வடுநாயக
3. Samkara - சம்ஹார
4. Bhuta - பூத்த
5. Vetala - வேதாள
6. Trinetra - த்ரிநேத்ர
7. Tripurantaka - த்ரிபுராந்தக
8. Varada - வரத

GROUP VI

1.	Kapala	-	காபால
2.	Sasi-bhushana	-	சஸி பிஷ்ஷான
3.	Haste-Charmambaradhara	-	ஹஷ்த சரம்பரதார
4.	Yogisa	-	யோகீச
5.	Brahma-rakshasa	-	ப்ரம்ம ரக்ஷஸ
6.	Sarvajna	-	சர்வாஜ்ன
7.	Sarva-devesa	-	சர்வ தேவஸ
8.	Sarva-bhuta-hirdi-sihita	-	சர்வ பூத ஹிதஸில்த

GROUP VII

1.	Bhishana	-	பிஷ்ணா
2.	Bhaya-hara	-	பாய கர
3.	Parvata-vasa	-	பார்வதி வாஸ
4.	Kalagni	-	காலாக்னி
5.	Maharaudra	-	மஹாரௌத்ர
6.	Dakshina	-	தக்ஷிண
7.	Mukhara	-	முகார
8.	Asthira	-	அஸ்திர

GROUP VIII

1.	Samhara	-	சம்ஹார
2.	Ati-riktanga	-	அதி ரிக்தாங்க
3.	Kalagni (?)	-	காலாக்னி
4.	Priyankara	-	ப்ரியங்கார
5.	Ghora-nada	-	கோர நாட
6.	Visalaksha	-	விசாலாக்ஷஸ
7.	Yogisa (?)	-	யோகீச
8.	Daksha-Samsthita	-	தக்ஷ சம்ஸ்தித

64 YOGINIS (யோகினிகள்)

1. Narayani	- நாராயணி	33. Smrti	- ஸ்மிருதி
2. Gauri	- கௌரி	34. Dhrti	- தர்தி
3. Sakambhari	- சாகம்பரி	35. Tushti	- தஸ்தி
4. Bhima	- பீமா	36. Pushti	- புஷ்டி
5. Rakta-dantika	- ரக்த-தந்திகா	37. Medha	- மேதா
6. Bhramari	- ப்ராஹ்மரி	38. Vidya	- வித்யா
7. Parvati	- பார்வதி	39. Lakshmi	- லக்ஷ்மி
8. Durga	- துர்கா	40. Sarasvati	- சரஸ்வதி
9. Katyayani	- காத்யாயனி	41. Aparna	- அபர்ணா
10. Maha-devi	- மகாதேவி	42. Ambika	- அம்பிகா
11. Chanda-ghanta	- சந்த கண்டா	43. Yogini	- யோகினி
12. Maha-vidya	- மகா வித்யா	44. Dakini	- தாகினி
13. Maha-tapa	- மகா தபா	45. Sakini	- சாகினி
14. Savitri	- சாவித்ரி	46. Harini	- ஹரினி
15. Brahma-vadini	- ப்ரம்ம வாதினி	47. Hakini	- ஹாகினி
16. Bhadra-kali	- பத்ரகாளி	48. Lakini	- லகினி
17. Visalakshi	- விசாலாக்ஷி	49. Tridasesvari	- திரிதசேஸ்வரி
18. Rudrani	- ருத்ராணி	50. Maha-Shashti	- மகாசஸ்தி
19. Krshna-Pingala	- கிருஷ்ணபிங்கலா	51. Sarva-mangala	- சர்வ மங்களா
20. Agni-Jvala	- அக்னி ஜ்வாலா	52. Lajja	- லக்ஷ்ய
21. Raudra-mukhi	- ரௌத்ர முகி	53. Kausiki	- கௌஷிகி
22. Kala-ratri	- கால ராத்ரி	54. Brahmani	- ப்ராஹ்மினி
23. Tapasvini	- தபஸ்வினி	55. Mahesvari	- மகேஸ்வரி
24. Megha-Svana	- மேக ஸ்வன	56. Kaumari	- கௌமாரி
25. Sahasrakshi	- சகஸ்ராக்ஷி	57. Vaishnavi	- வைஷ்ணவி
26. Vishnu-maya	- விஷ்ணு மாயா	58. Aindri	- ஐந்தரி
27. Jalodari	- ஜலதாரி	59. Narasimhi	- நரசிம்ஹி
28. Mahodari	- மகாதாரி	60. Varahi	- வராஹி
29. Mukta-kesi	- முக்த கேசி	61. Chamunda	- சாமுண்டா
30. Ghora-rupa	- கோர ரூபா	62. Siva-duti	- சிவ துதி
31. Maha-bala	- மகா பாலா	63. Vishnu-maya	- விஷ்ணு மாயா
32. Sruti	- ஸ்ருதி	64. Matrka	- மாத்ரிகா

மகேஸ்வரனின அறுபத்துநான்குத் திருவுருவத் தியானம்
(அஷ்டாஷ்டமூர்த்த நாமத்தியானம்)

"லிங்கம் லிங்கோத்பவஞ் சைவ முகலிங்கம் ஸதாசிவம்
மஹாசதாசிவஞ் சைவவோ மாமஹேசமத: பரம்
சுகாசனமுமேசந்து சோமாஸ்கந்தந் ததைவச
சந்த்ரசேகர மூர்த்திஞ்ச வ்ருஷாருடம் வருஷாந்திகம்
புஜங்க லளிதஞ்சைவ புஜங்கத்ரா சஸமேவச
ஸந்த்யாந்ருத்தம் ஸதாந்ருத்தம் தாண்டவம் ஜாஹ்நவீதரம்
கங்கா விஸர்ஜநஞ் சைவ ர்ரிபுராந்தக மேவச
கல்யாணசுந்தரஞ்சைவ அர்த்தநாரீஸ்வரந்ததா
கஜயுத்தம் ஜ்வராபக்நம் சார்த்தூலஹர விக்ரஹம்
ததாபசுபதஞ்சைவ கங்காளம் கேஸவார்த்தகம்
பீக்ஷாடநந்து சிம்ஹக்நம் சண்டேஸ்வரப்ஸாதகம்
தக்ஷிணாமூர்த்திதத்பேதம் யோக வீணாதரந்ததா
காலாந்தகந்து காமாரிம் லகுளேஸ்வர பைரவம்
ஆபதுத்தாரணஞ்சைவ வடுகம் க்ஷேத்ரபாலகம்
வீரபத்ரமகோராஸ்த்ரம் தக்ஷயக்ஞஹரந்ததா
கிராதம் குருமூர்த்திஞ்ச அஸ்வாருடம் கஜாந்திகம்
ஜலந்தரவதஞ் சைவ மேகபாதந் த்ரிமூர்த்திகம்
த்ரிமூர்த்தி த்ரிபதஞ்சைவ ததா கௌரிவரப்ரதம்
சுக்ரநாத ஸ்வருபஞ்ச கௌரி லீலா சமந்விதம்
விஷாபஹரணஞ் சைவ கருடாந்திக மேவசமவச
ததாப்ரஹ்ம ஸிரஸ்சேதம் கூர்மஸம்ஹார மேவச
மத்ஸ்யாரிந்துவராஹாரிம் ப்ராத்தநா மூர்த்தமேவச
ரக்த பிக்ஷாப்ரதாநஞ்ச சிஷ்யபாவந்ததைவச
ஷடாநந்த தாஷ்டாஷ்ட விக்ரஹம் பாவஸத்ஸதா"

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிய அட்டாட்ட விக்கிரக லீலை

(நாற்பத்தெண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

சந்திரசேகரம் அர்த்தநாரீசுரம் சக்கரப் பிரதானம்
தட்சிணாமூர்த்தம் இலிங்கம் லிங்கோஸ்பவம் தட்சயக்கிய பங்கம்
சந்நிதியில் நிர்த்தனம் சந்தத நிர்த்தனம் சண்டேசாநுக்ரகம்
சலந்தரவதம் கொராஸ்திரம் ஏகபதம் அசுவாரூடம்
சத்யசதாசிவம் மிக்கசதாசிவம் தகுல குளேசுவரம்
சகஜ சுகாசனம் சூர்மசங்காரம் மச்சாரி வராகாரி
சற்குரு மூர்த்தம் ஊமேசம் உமாபதி ஜய புஜங்கத்ராசம்
சார்த்தூல ஹரி பைரவம் கலியாணசுந்தரம் வடுகம்கிராதம்

சுந்தர விருஷபஊர்தி விஷபஹரணம் சுவராபக்நம்
துகளறு க்ஷேத்திர பாலகம் தொல்கருடாந்திகம் முகலிங்கம்
துங்க கங்காதரம் கங்கா விஸர்ஜனம் சுப சோமாஸ்கந்தம்
சூரஸிம்ஹாரி கமாரிய மாந்தகம் சுசி மாணவ பாவம்
சுபகர பிரார்த்தனை மூர்த்த நறும்திரி புராந்தகம் சுரர்பரசும்
சுமுக கங்காளம் இரக்தபிக்ஷைப் பிரதானம் இருஞ்சுடரே
சுடர்கவுரீ வரப்பிரதம் மஹாபா சுபத சொரூபமணி
தோன்று புஜங்கலளிதம் ரிஷபாந்திகம் தோமறு கஜயுத்தம்

விந்தை விளம்புகஜாந்திகம் வீணை தயங்கு தட்சிணாமூர்த்தம்
மேதக யோக விநோதம தாக விளங்கு தட்சிணாமூர்த்தம்
விமல பிட்சாடணம் கவலையுத்தாரணம் வேதகணம் புகழும்
விதிசிர கண்டனம் கவுரி விலாசமந்விதம் எழில் அரியர்த்தம்
வீரபத்திரம் திரிமூர்த்தி முப்பாதம் மஹா வேதாளிநடம்
வெருவறும் ஏகபதம் திரியுருவாய் விளம்பறுபதுநான்கும்
விலாசவளிப்பு நிமித்தம் எடுத்தூர் மெய்ப்பொருள் எது அதுவே
விண்ணவர் மண்ணவர் கண்ணவர் யாவரும் விடருளாய் எனவே

வந்தனைபுரிய இருந்துளநீ என வண்தமிழான் மனசான்
வாழ்த்தி வணங்கெனை ஆளஎன் இருதய மலரில் எழுந்தருள்வாய்
மந்திரநாயக தந்திரநாயக மங்களநாயக ஓம்
மயதவரீசுர பரமகுஹேகர வசன மனாதீதி
வரதக் ருபாகர குமர பராபர வரைவறு ஷாட்குண்ய
வஸ்து என் அற்புத சத்திய வித்தக மரணமொடு அயனம்லா
வானவஞான நபோமணியே திரு மாலயன் அறியாவோர்
மாமலையின் பெயரால் குருநாத என் மருள்தெரு மாமுனியே.

தருமையாதீனம் பத்தாவது மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்
அருளிச் செய்த

ஆபதுத்தாரணம் மாலை

காப்பு

விண்ணார் மலர்ப்பொழில் சூழ்காழி மாமலை மேலமர்ந்த
தண்ணார் மதியுனை வேணிய னாபதுத் தாரணன்மேல்
பண்ணாரப் பாடிய மாலைக்கு மாமுதன் பாதமும் நீள்
கண்ணா றிரண்டுள கந்தன்பொற் பாதமுங் காத்திடுமே

நூல்

சீர்கொண்ட செம்பொற் றிருமேனி யும்செம் முகமலருங்
கார்கொண்ட சட்டையுந் தண்டாயுதமுங் கணங்களெட்டுங்
சூர்கொண்ட மூவிலைச் சூலமுங் கொண்டருள் சூர்ந்த கொன்றைத்
தார்கொண்ட வேணியனேகாழி யாபதுத் தாரணனே 1

தெள்ளும் புழுகும் பனிநீருங் குங்குமச் சேறுஞ்செந்தேன்
விள்ளும் மலருநின் பாதத்திற் சாத்தி விடாமலின்பங்
கொள்ளும் படியன்பு தந்தெனை யாண்டருள் கூற்றுவனைத்
தள்ளும் பதாம்புய னேகாழி யாபதுத் தாரணனே 2

சாயாத சூலதண் டாயுத னேபச்சைச் சட்டையனே
வேயார் விண்ணோர் தொழுமேனியனே யென்மிடி தவிர்ப்பாய்
வாயார வுன்னைத் துதிப்போர்க்கு வேண்டும் வரமளிப்பாய்
தாயா கியவப்ப னேகாழி யாபதுத் தாரணனே 3

வட்டையொப் பாகு மினியசொல் மாதர் மயக்கத்திலே
பட்டேயப் பாமிக யானிளைத் தேன்பண் டிருவர்க் கெட்டா
நெட்டையப் பாமறை காணாத சேவடி நீயருள்வாய்
சட்டையப் பாவடு காகாழி யாபதுத் தாரணனே 4

மட்டுப் படாத யமதூதர் வந்துவளைத் துடலைச்
சுட்டுப் பலபொடி யாக்குமுன் காத்தருட் டோடணிந்த
பட்டுப் புயத்தினுந் தண்டா யுதத்தினும் பாதத்தினுந்
தட்டுப் புழுகணி யுங்காழி யாபதுத் தாரணனே 5

நெறியும் பொறியுந் தவமுமெய்ஞ் ஞானமும் நீடறிவும்
பொறியும் புகழுங் கொடுத்தருள் வாய்புரங் காய்ந்தவனே
குறியுங் குணமுங் கடந்தவ னேகுழக் கன்றுகட்டுந்
தறியின்கண் வந்தயவ னேகாழி யாபதுத் தாரணனே 6

அடியார் மனத்தி னினைத்த தரும மனைத்துமங்கே
முடியாததேது முடித்தருள் வாய்முரு காரலங்கல்
கடியார் மலர்க்கொன்றை மாலிகை சூடிய கண்ணுதலே
தடியேந் தியகைய னேகாழி யாபதுத் தாரணனே 7

முட்டுற வாழும் பெருஞ்செல்வ மும்முத் தமிழ்க்கல்வியும்
எட்டுணை யேனுங் கொடுத்துண் டிருக்க வெனக்கருள்வாய்
வட்ட மதிச்சடை யானே சிகர மலைக்கமர்ந்த
சட்ட முடையவ னேகாழி யாபதுத் தாரணனே 8

பொய்யா கியபுவி வாழ்க்கைக் கடலிற் புகுந்தமுந்தி
மெய்ய மிதுவென நம்பிவிட்டேன்வினை யேனைக்கண்பார்
மையாடு கண்ணியர் பின்செலத்தாரு வனத்திற்சென்ற
சைவா கமப்பொரு ளேகாழி யாபதுத் தாரணனே 9

நீலக் கயல்விழி மானார் கலவியில் நேசம் வைத்தே
ஆலைக் கரும்பது போல விடாதுன் னருள்புரிவாய்
வாலைக் கலைமதி வேணிய னேவடிகா வடியார்
சாலத் தொழு மையனே காழி யாபதுத் தாரணனே 10

செந்தமி ழோர்தொழுந் தண்டா யுதமுந் திருவழகுங்
கந்தர மும்பச்சைக் கஞ்சுகத் தானுங் கருதரிய
இத்தணி வட்டச் சடையுங்கண் மூன்று மிருபதமுஞ்
சந்தத மும்மற வேன்காழி யாபதுத் தாரணனே 11

படிக்குந் தண்டாயுதமென்பார்க்கு நோய்வினை பற்றறுப்பப்
பிடிக்குந் தண்டாயுத வெண்ணருங் கோடிப்ர மாண்டமெல்லாம்
முடிக்குந் தண்டாயுதமுதண்டந் தாண்டுமுகுந்தன் சென்னி
தடிக்குந் தண்டாயுத னேகாழி யாபதுத் தாரணனே 12

அரம்பிடிக்குங் கண்ணினாராசை மேற்கொண்டலைவதெல்லாம்
வரம்பிடிக்குங் கருத்துண்மைகண் டார்க்கில்லை வந்தருள்கூர
உரம்பிடிக் குந்துட்ட வேதாள பூதத்தை யோட்டி வெட்டித்
தரம் பிடிக் கும்வடு காகாழி யாபதுத் தாரணனே 13

பெருகா ரணியத்தில் யான்சென்ற போதும் பெறுப்பொருளால்
வருகாதல் கொண்டிர விற்றுயில் போதுமிம் மண்டலத்தில்
துருவாதியர்கள் சபையிற்செல் போதுந் துணையெனக்கு
வருவா யுனைநம்பினேன் காழி யாபதுத் தாரணனே 14

செம்மலை மீதினிற் சாமள கஞ்சுகஞ் சேர்வடிவும்
அம்மலைபோலுநற் றண்டாயுதமுங் கொண்டன்புடனே
எம்மலை வேதந் தவிர்த்த ருள் வாய்கடு வேந்திவிண்ணோர்
தம்மலை வோட்டுந் தமிழ்க்காழி யாபதுத் தாரணனே 15

மாடுந்தண் டாமமணிந்திடு மைந்தரு மாதர்களும்
விடுந்தண் டாம மெனமகி ழாமலுன் மென்மலர்த்தாள்
பாடுந்தண் டாத்தமிழ்ந்தருள் பூத பிசாசுகளைச்
சாடுத்தண் டாயுதனேகாழி யாபதுத் தாரணனே 16

வெடிக்கும் பரவை முரசதிர் காமனை வீறழியப்
பொடிக்குங்கனல்விழிப் புண்ணியனே புவியோர்களெஞ்சள்
துடிக்கும் பொல்லாத பிசாசுகள் தன்னைத் துரத்திவெட்டி
அடிக்குந் தண்டாயுத னேகாழி யாபதுத் தாரணனே 17

இலையென்றொருவர்க் கிதஞ்சொல்லி யென்று மிரங்கி நல்லா
நிலையென்று நீயளித்தாண்டருள் வாய்நித்த னே புகலி
மலையொன் றியவடு கேசகங் காள வயிரவனே
தலையொன் றியகைனே காழி யாபதுத் தாரணனே 18

பாடிக்கொண்டாடிப் பணிந்திடு மன்பர்தம் பாதமலர்
கூடிக்கொண்டாடித் திரிந்திட வேயெனைத் தொண்டுகொள்வாய்
தேடிக்கொண்டாடி வருவோர்கள் வல்வினைச் சிக்கையெல்லாம்
சாடிக் கொண்டாடிய வாகாழி யாபதுத் தாரணனே 19

தெவ்விடத்தாய திசைபிழைத் தாலுஞ் சினவரவங்
கவ்விடத் தான்வெய்ய கானடந்தாலுங் கருதரிய
எவ்விடத் தேச மிருந்தாலு மென்ற னிடரையெல்லாந்
தவ்விட நீவரு வாய்காழி யாபதுத் தாரணனே 20

நீடுத்தண்டாயுத நித்தந்தண்டாயுத நித்தமின்பர்
தேடுந்தண்டாயுதம் ஈரேழுலகமுஞ் சேவித்துக்கொண்
டாடுந்தண்டாயுதம் அண்டாது பேய்க ளலறிவிழச்
சாடுந்தண்டாயுத னேகாழி யாபதுத் தாரணனே 21

வக்கங் கலிங்கங் குலுங்கத் தெலுங்க மராடமுதல்
எங்கெங்கும் போக இடர்வரும் போது மினிமையுடன்

அங்காங்கு நீ துணை யாய்வரு வாயந்தி வான்மதியந்
தங்குஞ் சடாடவி யாய்காழி யாபதுத் தாரணனே 22

ஈனந்தருமிதென் றெண்ணாமலேயிடும் பான்மெலிந்திங்
கனந்தருமிந்தச் செல்வருக் கிச்சை யுரையுரைத்தேவி
வானந் தருமும் பருக்கா யவுணரை மாட்டிநல்ல
தானந் தருமண்ண லேகாழி யாபதுத் தாரணனே 23

அடிக்குட் பணியுநின் னன்பரைக் காயு மவருடலை
வெடித்துப் பொடிபட நீவிழிப்பா யெட்டுவெற்புஞ் செற்றே
இடித்துப் பொடிபடி வல்லாயுதம்பதி னெட்டு மூலிகைத்
தடிக்குப் பெரியதுண் டோகாழி யாபதுத் தாரணனே 24

உளப்பரி வில்லவர் தம்மில்லிற் சென்றங் குறையுரைத்துக்
கொள்ப்பரி வான மொழிபல கூறிக் குறைகள் சொல்வீர்
இளைப்பறக் காப்பவன் யாவனென் றாலர விந்தமெல்லாந்
தளப்பருஞ் செல்வி வளர்காழி யாபதுத் தாரணனே 25

கலையாரு முத்தமிழ்க் கல்வியும் யோகமும் காசினியில்
நிலையா கியபெருஞ் செல்வமும் நீதியு நீயருள்வாய்
மலையா சனவடு கேசகங் காள வயிரவனே
தலைமாலை சூழ்புய னேகாழி யாபதுத் தாரணனே 26

வாட்கொண்ட கண்ணியர் மாயையில் வீழ்ந்து மருண்டு பல
நாட்கொண்ட தீயனை யாட்கொண்டு காத்தருள் நல்குவையோ
கோட்கொண்ட காலனுக் கஞ்சிய பாலனைக் கூர்ந்தளித்துந்
தாட்கொண்ட காத்தவ னேகாழி யாபதுத் தாரணனே 27

நிட்டைக்குள் வாழவு நின்னடிபோற்றவுந் தேர்ந்தளியா
வொட்டைச் சபலத்தை யானெடுத் தேனொளியோங்கு செம்பொற்
பட்டைப் புனைந்த புயமீது மாயன் படிவந்தந்த
சட்டைக் கிடந்தந் தருள்காழி யாபதுத் தாரணனே 28

சொல்லா கியபொரு ளெல்லா முணர்ந்துனைத் தோத்தரிக்க
வல்லார்தமைத் தொழவல்லானென வென்னைவைப்பதுண்டோ
கல்லாற் சிலைதொட்ட நல்லாரெல்லார்க்குங் கதியளிக்குஞ்
சல்லாப மானவ னேகாழி யாபதுத் தாரணனே 29

இந்திரன் வாழ்க்கையு நான்முகன் வாழ்க்கையு மீர்ந்துளவோன்
நந்தமில் வாழ்க்கையும் பெற்றலு நின்னடி யார்களுக்குப்
புந்திசெய் வாழ்க்கையை யொவ்வாது காணொளி பூண்ட
சந்திர சேகர னேகாழி யாபதுத் தாரணனே 30

சிவமயம்

ஸ்ரீ பைரவர் அஷ்டோத்திர சகநாமங்கள்

ஓம்	ஆனந்த பைரவாய	நம:
ஓம்	அஸ்தாங்க பைரவாய	நம:
ஓம்	ருரு பைரவாய	நம:
ஓம்	சண்ட பைரவாய	நம:
ஓம்	க்ரோத பைரவாய	நம:
ஓம்	உன்மத்த பைரவாய	நம:
ஓம்	கபால பைரவாய	நம:
ஓம்	பீஷண பைரவாய	நம:
ஓம்	ஸம்ஹார பைரவாய	நம:
ஓம்	ஆனந்தாய	நம:
ஓம்	தீர்க்க பிங்களாய	நம:
ஓம்	ஜடாதராய	நம:
ஓம்	பிக்ஷா ஹராய	நம:
ஓம்	நரஹராய	நம:
ஓம்	பீதவர்ணாய	நம:
ஓம்	பீமபோய	நம:
ஓம்	பினாகப்ருதே	நம:
ஓம்	உத்தண்ட பைரவாய	நம:
ஓம்	உக்ராய	நம:
ஓம்	விச்வ ரக்ஷஸே	நம:
ஓம்	புருஷாய	நம:
ஓம்	வடுகாய	நம:
ஓம்	வனவாஸாய	நம:
ஓம்	வரதாய	நம:
ஓம்	ஸந்துஷ்டாய	நம:
ஓம்	க்ஷேத்ரபாலகாய	நம:
ஓம்	ஸ்வர்ண ரூபாய	நம:
ஓம்	ஸுராத்யக்ஷாய	நம:
ஓம்	ஸுராய	நம:
ஓம்	ஸ்வர்ண பூஷாய	நம:
ஓம்	மஹா பைரவாய	நம:
ஓம்	கலாநாதாய	நம:
ஓம்	காலாந்தகாய	நம:
ஓம்	கங்காளதராய	நம:
ஓம்	கால பைரவாய	நம:

ஓம்	கல்பாந்த பைரவாய	நம:
ஓம்	கபால மாலாதராய	நம:
ஓம்	கபாலினே	நம:
ஓம்	கலிதோஷஹராய	நம:
ஓம்	சூலிநே	நம:
ஓம்	தன்யாய	நம:
ஓம்	தயாநிதியே	நம:
ஓம்	தண்டபாணயே	நம:
ஓம்	கல்யாய	நம:
ஓம்	தானவாராயே	நம:
ஓம்	திகம்பராய	நம:
ஓம்	திவ்யமூர்த்தயே	நம:
ஓம்	திவ்யாய	நம:
ஓம்	துஷ்டநிக்ரஹாய	நம:
ஓம்	ஸவித்ரே	நம:
ஓம்	விஜயாய	நம:
ஓம்	விமலாய	நம:
ஓம்	வீராய	நம:
ஓம்	சூராய	நம:
ஓம்	ச்வவாஹனாய	நம:
ஓம்	மார்த்தாண்ட பைரவாய	நம:
ஓம்	மான்யாய	நம:
ஓம்	மனதாய	நம:
ஓம்	மன்மத நாசனாய	நம:
ஓம்	தீர்த்தப்ரதாய	நம:
ஓம்	தீர்த்தகராய	நம:
ஓம்	தீர்த்த வாஸாய	நம:
ஓம்	அபய ப்ரதாய	நம:
ஓம்	பகவதே	நம:
ஓம்	கண்டபரசவே	நம:
ஓம்	ஸர்ப்ப பூஷாய	நம:
ஓம்	அலங்க்ருதாய	நம:
ஓம்	அமாயாய	நம:
ஓம்	ஆதித்ய ரூபாய	நம:
ஓம்	ஆதாம்ராய	நம:
ஓம்	அநுபூஜ்யாய	நம:
ஓம்	பராக்ரமாய	நம:

ஓம் ஸர்வார்த்தி ஹராய நம:
ஓம் த்ரிநேத்ராய நம:
ஓம் ஓர்வேசாய நம:
ஓம் மதமாலாய நம:
ஓம் மாஷாபூபப்ரியாய நம:
ஓம் மஹாக்ஷேத்ராய நம:
ஓம் லோக ரக்ஷகாய நம:
ஓம் லோகேச்வராய நம:
ஓம் மஹாபூத பயங்கராய நம:
ஓம் மஹாமான்யாய நம:
ஓம் ரக்த ரூபாய நம:
ஓம் ஜ்வாலாகேசாய நம:
ஓம் சசிதராய நம:
ஓம் ரக்தாங்காய நம:
ஓம் தேஜோமாயாய நம:
ஓம் சூலஹஸ்தாய நம:
ஓம் கபால மாலா பரணாய நம:
ஓம் பாசஹஸ்தாய நம:
ஓம் டமருக தராய நம:
ஓம் த்ரிலோசனாய நம:
ஓம் கோலாஹல ப்ரியாய நம:
ஓம் பிசாச நாதாய நம:
ஓம் பால ரூபாய நம:
ஓம் பூத ரூபாய நம:
ஓம் நாக யக்ஞோபாவீதாய நம:
ஓம் அபீஷ்டஸித்தி ப்ரதாய நம:
ஓம் அங்குசதராய நம:
ஓம் த்ரிகுலதராய நம:
ஓம் அஷ்ட புஜாய நம:
ஓம் தம்ஷ்ட்ரா தந்தாய நம:
ஓம் ஆக்ஞா சக்ராய நம:
ஓம் ஆகாச பைரவாய நம:
ஓம் ஜ்யோதி ரூபாய நம:
ஓம் வ்யோம ரூபாய நம:
ஓம் தனாகமாய நம:
ஓம் ஸ்ரீ கால பைரவாய நம:

கால பைரவாஷ்டகம்

தேவராஜ-ஸேவ்யமான-பாவனாங்க்ரி-பங்கஜம்
ஷ்யால-யஜ்ஞஸூத்ர-மிந்துசேகரம் க்ருபாகரம்
நாரதாதி-யோகிவ்ருந்த-வந்திதம் திகம்பரம்
காசிகாபுராதிநாத-காலபைரவம் பஜே 1

பானுகோடி-பாஸ்வரம் பவாப்திதாரகம் பரம்
நீலகண்ட-மீப்ஸிதார்த்த-தாயகம் த்ரிலோசனம்
காலகால-மம்புஜாக்ஷ-மக்ஷசூல-மக்ஷரம்
காசிகாபுராதிநாத-காலபைரவம் பஜே 2

சூல-டங்க-பாச-தண்ட-பாணி-மாதிகாரணம்
ச்யாமகாய-மாதிதேவ-மக்ஷரம் நிராமயம்
பீமவிக்ரமம் ப்ரபும் விசித்ர-தாண்டவ-ப்ரியம்
காசிகாபுராதிநாத-காலபைரவம் பஜே 3

புக்திமுக்தி-தாயகம் ப்ரசஸ்தாசாருவிக்ரஹம்
பக்தவத்ஸலம் ஸ்திதம் ஸமஸ்த-லோகவிக்ரஹம்
நிக்வணன்-மனோஜ்ஞஹேம-கிங்கிணீலஸத்கடிம்
காசிகாபுராதிநாத-காலபைரவம் பஜே 4

தர்மஸேதுபாலகம் த்வதர்ம-மார்க்கநாசகம்
கர்மபாசமோசகம் ஸுசர்மதாயகம் விபும்
ஸ்வர்ணவர்ண-சேஷபாச-சோபிதாங்க்ரி-மண்டலம்
காசிகாபுராதிநாத-காலபைரவம் பஜே 5

ரத்னபாதுகா-ப்ரபாபிராம-பாதயுக்மகம்
நித்யமத்விதீய-மிஷ்டதைவதம் நிரஞ்ஜனம்
ம்ருத்யுதர்ப்ப நாசனம் கராளதம்ஷ்ட்ர-மோக்ஷனம்
காசிகாபுராதிநாத-காலபைரவம் பஜே 6

அட்டஹாஸ-பின்ன-பத்மஜாண்டகோச-ஸந்ததிம்
த்ருஷ்டிபாத-நஷ்டபாபஜால-முக்ரசாஸனம்
அஷ்டஸித்திதாயகம் கபால-மாலிகந்தரம்
காசிகாபுராதிநாத-காலபைரவம் பஜே 7

பூதஸங்க்க-நாயகம் விசால-கீர்த்தி-தாயகம்
காசிவாஸ-லோக புண்ய-பாபசோதகம் விபும்
நீதிமார்க்க-கோவிதம் புராதனம் ஜகத்பதிம்
காசிகாபுராதிநாத-காலபைரவம் பஜே 8

காலபைரவாஷ்டகம் படந்தி யே மனோஹரம்
ஜ்ஞான-முக்திஸாதனம் விசித்ர-புண்யவர்த்தனம்
சோக-மோஹதைன்யலோப-கோப-பாபநாசனம்
தே ப்ரயாந்தி காலபைரவாங்க்ரிஸந்நிதம் த்ருவம் 9

கால பைரவாஷ்டகம்

1. தேவேந்திரனால் சேவிக்கப்பெற்ற புனிதமான திருவடித் தாமரைகளை உடையவரும், பாம்பைப் பூணூலாக உடையவரும், தலையில் சந்திரனைச் சூடியவரும், கருணை புரிபவரும், நாரதர் முதலிய யோகியரின் குழாத்தால் வணங்கப்பெற்றவரும், திசைகளையே ஆடையாக உடையவரும், காசீபுரியில் ஆதிநாதருமான காலபைரவரைப் போற்றுகிறேன்.

2. கோடி சூரியப் பிரகாசம் பொருந்தியவரும், பிறவிக் கடலைக் கடத்துவிப்பரும், பரம்பொருளும், கண்டம் கரியவரும், வேண்டுவோர் வேண்டுவதை அளிப்பவரும், முக்கண்ணரும், யமனுக்கு யமன் போன்றவரும், தாமரைக் கண்ணரும், சூலபாணியும், அழிவற்றவரும் காசீகாபுரியின் ஆதிநாதருமான காலபைரவரைப் போற்றுகிறேன்.

3. சூலம், டங்கம், பாசக்கயிறு, தண்டம் ஆகிய ஆயுதங்களை உடையவரும், ஆதிகாலணேச்வரரும், கருத்த மேனி படைத்தவரும், ஆதிதேவரும், அழிவற்றவரும், நோயணுகாதவரும், பயங்கரமான பராக்ரமம் படைத்த பிரபுவும், விசித்திர தாண்டவப் பிரியரும், காசீபுரியின் ஆதிநாதருமான கால பைரவரை வணங்குகிறேன்.

4. போகமும் முக்தியும் அருள்பவரும், பிரசித்தமான அழகிய மேனி படைத்தவரும், பக்தர்களிடம் வாத்வல்யமுடையவரும், உலகனைத்துமே உடலாகக் கொண்டிருப்பவரும், தங்கச் சதங்கைகள் கிலுகிலுக்கும் மனோகரமான இடுப்பை உடையவரும் காசீகாபுரியின் ஆதிநாதருமான காலபைரவரைப் போற்றுகிறேன்.

5. தர்மத்தின் கரையைக் காப்பவரும், அதர்ம வழியை அழிப்பவரும், கர்மத்தளையிலிருந்து விடுவிப்பவரும், மங்களங்களை அருளும் பிரபுவும், பொன் போன்ற ஆதிசேஷனை ஆபரணமாகக் கொண்டவரும் காசீபுரியின் ஆதிநாதருமான காலபைரவரைப் போற்றுகிறேன்.

6. இரத்தின பாதுகையால் அலங்கரிக்கப்பெற்ற திருவடிகளை உடையவரும் இரண்டற்ற பரம்பொருளும், இஷ்ட தெய்வமும், மாசற்றவரும், யமனுடைய கர்வத்தை அழிப்பவரும், தெற்றிப் பல்லுடைய யமனிடத்திலிருந்து விடுவிப்பவரும் காசீபுரியின் ஆதிநாதருமான காலபைரவரை வணங்குகிறேன்.

7. அட்டஹாஸச் சிரிப்பால் பிரம்மாண்ட கோசங்களின் கூட்டத்தை அழிப்பவரும், பாவக்குயிலைக் கண்பார்வையால் ஒழிப்பவரும், எவரும் மீறமுடியாத கட்டளை இடுபவரும், எட்டு வகையான சித்திகளை அருள்பவரும், மண்டையோடுகளை மாலையாக அணிந்தவரும் காசீபுரியின் ஆதிநாதருமாகிய காலபைரவரை வணங்குகிறேன்.

8. பூதக் கூட்டத்தின் தலைவரும், பரந்த கீர்த்தியை அளிப்பவரும், காசியில் வசிக்கும் மக்களைப் புண்ணியமும் பாவமுமான இருவினைகளினின்-றும் விடுவிப்பவரும், நீதிமார்க்க நிபுணரும், புராதனமான உலகநாதரும் காசீபுரியின் ஆதிநாதருமான காலபைரவரை வணங்குகிறேன்.

9. மனதிற்கு இனியதும், ஞானத்திற்கும் முக்திக்கும் சாதனமாவதும், அதிசயமான வகையில் புண்ணியத்தை வளர்ப்பதும், மனக்கவலை, மதிமயக்கம், ஏழைமை, பேராசை, கோபம், மனக்கொதிப்பு ஆகியவற்றைப் போக்குவதுமான இந்தக் காலபைரவாஷ்டகத்தைப் படிப்பவர்கள் காலபைரவப் பெருமானின் திருவடியைச் சேரும்பேற்றை அடைவது திண்ணம்

ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அருளிய ஸ்வர்ணாகர்ஷண பைரவாஷ்டகம்

பண் : நாதநாமகிரியை

தனந்தரும் வயிரவன் தளரடி பணிந்திடின்
தளர்வுகள் தீர்ந்து விடும்
மனந்திறந் தவன்பதம் மலரிட்டு வாழ்த்திடின்
மகிழ்வுகள் வந்துவிடும்
சினந்தவிர்த் தன்னையின் சின்மயப் புன்னகை
சிந்தையில் ஏற்றவனே
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 1

வாழ்வினில் வளந்தர வையகம் நடந்தான்
வாரியே வழங்கிடுவான்
தாழ்வுகள் தீர்ந்திட தளர்வுகள் மறைந்திட
தானென வந்திடுவான்
காழ்ப்புகள் தீர்த்தான் கானகம் நின்றான்
காவலாய் வந்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 2

முழுநில வதனில் முறையொடு பூஜைகள்
முடித்திட அருளிடுவான்
உழுதவன் விதைப்பான உடைமைகள் காப்பான்
உயர்வுறச் செய்திடுவான்
முழுமலர்த் தாமரை மாலையை ஜெபித்து
முடியினில் சூடிடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 3

நான்மறை ஓதுவார் நடுவினில் இருப்பான்
நான்முகன் நானென்பான்
தேனினில் பழத்தைச் சேர்த்தவன் ருசிப்பான்
தேவைகள் நிறைத்திடுவான்
வான்மழை எனவே வளங்களைப் பொழிவான்
வாழ்ந்திட வாழ்த்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 4

பூதங்கள் யாவும் தனக்குள்ளே வைப்பான்
பூரணன் நான் என்பான்
நாதங்கள் ஒலிக்கும் நால்வகை மணிகளை
நாணினில் பூட்டிடுவான்
காதங்கள் கடந்து, கட்டிடும் மாயம்
யாவையும் போக்கிடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 5

பொழில்களில் மணப்பான் பூசைகள் ஏற்பான்
பொன்குடம் ஏந்திடுவான்
கழல்களில் தண்டை கைகளில் மணியணி
கனகனாய் இருந்திடுவான்
நிழல்தரும் கற்பகம் நினைத்திட பொழிந்திடும்
நின்மலன் நானென்பான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 6

சதுர் முகன் ஆணவத் தலையினைக் கொய்தான்
சத்தொடு சித்தானான்
புதரினில் பாம்பைத் தலையினில் வைத்தான்
புண்ணியம் செய்யென்றான்
பதரினைக் குவித்து செம்பினை எரித்தான்
பசும்பொன் இதுவென்றான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 7

ஜெய ஜெய வடுக நாதனே சரணம்
வந்தருள் செய்திடுவாய்
ஜெய ஜெய க்ஷேத்திர பாலனே சரணம்
ஜெயங்களைத் தந்திடுவாய்
ஜெய ஜெய வயிரவா செகம்புகழ் தேவா
செல்வங்கள் தந்திடுவாய்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 8

பைரவ தியான மந்திரம்

“ ரக்த ஜ்வால ஜடாதரம் சசிதரம்
ரக்தாங்க தேஜோமயம்
ஹஸ்தே சூல கபால-பாச டமரும்
லோகஸ்ய ரக்ஷாகரம்
நிர்வாணம் சுநவாஹனம் த்ரிநயனம்
ஆனந்த கோலாஹலம்
வந்தே பூதபிசாச நாத வடுகம் ஸ்ரீ”

பஞ்ச பரஹ்மஷடங்க மந்திரம்

ஓம் ஹோம் க்ஷம் க்ஷேத்ரபாலாய
ஈசான மூர்த்தயே நம:
ஓம் ஹேம் க்ஷேத்ரபாலாய
தத்புருஷ வக்த்ராய நம
ஓம் ஹூம் க்ஷேத்ரபாலாய
அகோர ஹ்ருதயாய நம
ஓம் ஹூம் க்ஷேத்ரபாலாய
வாமதேவ குஹ்யாய நம
ஓம் ஹூம் க்ஷேத்ரபாலாய
ஸத்யோ ஜாதாய பாதாப்யாம்நம
ஓம் ஹாம் க்ஷேத்ரபாலாய
ஹ்ருதயாய நம
ஓம் ஹூம் க்ஷம் க்ஷேத்ரபாலாய
கிரசேஸ்வாஹா
ஓம் ஹூம் க்ஷம் க்ஷேத்ரபாலாய
சிகாயை வஷட்
ஓம் ஹைம் க்ஷம் க்ஷேத்ரபாலாய
கவசாய ஹூம்
ஓம் ஹௌம் க்ஷம் க்ஷேத்ரபாலாய
நேத்ரத்ரயாய வௌஷட்
ஓம் ஹ: க்ஷம் க்ஷேத்ரபாலாய
அஸ்த்ராயபட்

துணைநூற்பட்டியல்

அருணாசலம், ப. : சைவ சமயம் (ஓர் அறிமுகம்), நாகர்கோயில், மு.ப. 1979.

பக்தி இலக்கியம், தமிழ் புத்தகாலயம், சென்னை.

இராசமாணிக்கனார். மா., : சைவசமய வளர்ச்சி, பாரி நிலையம், சென்னை, 1972

இராசரத்தின முதலியார். ஆ : சைவ சமயக் கையேடு, சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை, மே, 1986.

இராமசாமி செட்டியார், ராமு.கு.ராம., : வைரவன் கோயில், ஸ்தல மான்மியம் 1932

இராமநாதப் பிள்ளை. ப., : திருமந்திரம், கழக வெளியீடு, 1992. (விளக்கவுரையாசிரியர்)

கார்த்திகேயன் : சிவபுராணம், வாசு பிரசுரம், சென்னை, நவ. 1966.

சாந்தலிங்க இராமசாமி அடிகளார் : தமிழ்நெறிக் கட்டுரைகள், தவத்திரு சாந்தலிங்கர் திருமடம், கோவை, மு.ப.-பிப். 1986.

சுந்தரமூர்த்தி. கு : அறுவகைச் சமயம் - சைவசித்தாந்தம் ஒப்பீடு, தருமையாதீன வெளியீடு, தருமபுரம், மு.ப. 1988.

சுந்தரமூர்த்தி, கோ. : சைவசமயம், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.

செல்வம், கோ. : இந்துமதம் இது என்ன சொல்கிறது, புலமை பதிப்பகம், சென்னை, மு.ப. நவ. 1989.

சொக்கலிங்கம் செட்டியார், ராம.கு.இராம., : திருப்புத்தூர்ப் புராணம், காரைக்குடி

தேனப்பன், வ. : ஒன்பது நகரக் கோயில்கள், தேன் வள்ளியம்மை பதிப்பகம், தேவக்கோட்டை, மு.ப. டிச. 1996.

மறைஞானசம்பந்த நாயனார் : திருவாரூர்ப் புராணம், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், மு.ப. 1961.

முத்துசாமி-வசந்தி-கோ : கூவம் திருவிற்கோல நாதர் ஆய்வு, அருள் புத்தக நிலையம், குறிஞ்சிப்பாடி, மு.ப. மே. 1992.

வீரவேற்பிள்ளையவர்கள், எம்., : சிவபராக்கிரமம், பி.நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ், சென்னை, மு.ப.1941.

வேங்கிடசாமி, மயிலை, சீனி. : பௌத்தமும் தமிழும், கழக வெளியீடு,. சென்னை, ஐ.ப., டிச. 1972.

மகேந்திரவர்மன், கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு - ஜனவரி 1959.

Benoytosh Bhattacharya : The Indian Buddhist Iconography Firma K.L. Mukhopadhyay, Calcutta, IIE - 1958.

Bhattacharya, B.C., : The Jaine Iconography, Motilal Banarsidass, Delhi, IIE - 1974.

Gopinatha Rao, T.A., : Elements of Hindu Iconography - Vol.II, Part - 1, Motilal Banarsidass, Indological Publishers, Delhi.

Haridas Bhattacharya : The Cultural Heritage of India, Vol. III (Philosophies), The Ramakrishna Mission Institute of Culture, Calcutta, IIIE - 1975.

Jitendra Nath Banerjee: The Development of Hindu Iconography, University of Calcutta, IIIE - 1974.

John Dowson : A Classical Dictionary of Hindu Mythology and Religion, Geography, History and Literature, London, VIIIE - 1953.

Krishna Sastri, H. : South Indian Images of God and Goddesses, Madras Government Press, 1916.

Radhakrishnan Sarvepalli : History of Philosophy Eastern and Western, Vol. I, George Allen & Uncoin Ns. London, IE. 1952.

Ramachandra Rao : Pratima Kosha, Vol. I - VI, Bangalore, IE - 1988-91.

Sadashiv Ambadeas Dande : Encyclopedia of Puranic Beliefs and Practices, Vol.I (A.C.), Navrang, Delhi, IE - 1986.

Saletore, R.N. : Encyclopedia of Indian Culture, Vol.I (A-D), Sterling Publishers Private Ltd., Reprint - 1989.

Somasekara Dikshithar : The History of Chidambaram, Sri Nataraja's Temple, K.V. Pakkirisamy Pillai, Vetrivel Press, Tanjore, 1967.

சிறப்பு மலர்

கோட்டையூர் (ராயவரம்) திருமிகு பெரியநாயகி சமேத அகஸ்தீஸ்வரர் வைரவர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழா சிறப்பு மலர், 24.6.1991.

நகர வயிரவன் பட்டி, வளரொளிநாதர் - வயிரவ சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாச் சிறப்புமலர். அண்ணாமலை, சுப.,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

அண்மை வெளியீடுகள்

தொல்காப்பியப் பொருளதிகாரம் ஆங்கில மொழிபெயர்ப்பு	40.00
சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு	110.00
நாடகமேடை நினைவுகள்	160.00
தமிழின் பா வடிவங்கள்	35.00
உலகத் தமிழாராய்ச்சி நிறுவன	
சுவடி விளக்க அட்டவணை (சித்த மருத்துவம்)	75.00
சுவடி விளக்க அட்டவணை (இலக்கியம்)	70.00
சுவடி விளக்க அட்டவணை (மெய்யியல் - நா.புறவியல்)	70.00
அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி - I	110.00
ஆளும் தமிழ்	28.00
பொருள் புதிது	35.00
புதிய அமைச்சகம் புரிந்த பணிகள்	10.00
சின்னணைஞ்சான் கதை	75.00
தொல்காப்பியம் இலக்கியக் கோட்பாடுகள்	110.00
இயற்கை மொழியாய்வு-தமிழ்	75.00
சூடாமணி நிகண்டு: ஒரு சொல் பல்பொருள் விளக்கம்	65.00
தமிழ் நாடகமேடை முன்னோடிகள்	40.00
இராசேந்திரன் (நாடகம்) (ம.ப.)	50.00
தமிழ் வள்ளல் பாண்டித்துரையார்	25.00
பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் - பகுதி 1	95.00
பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் - பகுதி 2	60.00
பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் - பகுதி 3	90.00
தேவநேயப் பாவாணரின் மொழியியல் - வரலாற்றுக் கொள்கை (அ.சொ.)	35.00
தமிழ்த் தூது (ம.ப.)	20.00
யாப்பருங்கலம் (ம.ப.)	170.00
முல்லை	25.00
பரணர்	85.00
திராவிட மொழியின் மூவிடப் பெயர் (ம.ப.)	40.00
பாஸ மகாகவியின் இரட்டை நாடகங்கள்	36.00
Persona in Tolkappiyam	50.00
Studies in Tamil Prosody and Poetics	45.00
Tamil India	40.00

தமிழ்நாட்டில் பைரவர் வழிபாடு **19.00**